இந்த விலைக்கழிவு நாரஹேன்பிட்ட எலைற்ரேடியோ காட்சியறையில் மற்றும் shop.eliteradio.com மூலமான கொள்வனவுகளுக்கு மட்டும் வழங்கப்படும்.
Ceiling
Pedestal
Table
Orbital
Wall
Exhaust
KDK SINCE 1909 JAPAN
அங்கீகரிக்கப்பட்ட ஏகவிநியோகஸ்தர்கள்
ELITERADIO Since 1959
facebook.com/kdksrilanka | shop.eliteradio.com
வார நாட்களில: 9:00am - 5:00pm | சனிக்கிழமை: 9:00am - 1:00pm

Follow us:
# தமிழன்
THAMILAN தமිලන්
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
மலர் : 04, இதழ்: 36 சோபகிருது வருடம், ஆடி மாதம் 25ஆம் திகதி வியாழக்கிழமை
(10.08.2023) ஹிஜ்ரி 1445, முஹர்ரம் - 22, 0115 886187 - பக்கங்கள் 10
விலை ரூ.50

BEAT THE HEAT The Reliable Fan
1st August to 31st August 2023
DISCOUNT 15% (On selected models only) Cash or Card
*Conditions apply
KDK SINCE 1909 JAPAN
Ceiling | Pedestal | Table | Orbital | Wall | Exhaust
அங்கீகரிக்கப்பட்ட ஏகவிநியோகஸ்தர்கள்
ELITERADIO Since 1959
Inquiries (011) 250 0823 | (011) 236 8472 / 73 / 74



# மாகாண சபை முறைமை நீக்கப்படாது!

- பாராளுமன்றம் உடன்படுமானால் மாகாண சபைத் தேர்தல் சட்டமூலத்தைத் திருத்தத் தயார்
- மாகாண சபைகள் செயற்படும்வரை மாகாண ஆளுநர்களுக்கு ஆலோசனை வழங்குவதற்கான குழு
- வெற்றிகரமான மாகாண சபை கட்டமைப்பினுள் பலமான முறைமை மாற்றத்துக்கான வாய்ப்புள்ளது
- காணாமல்போனோர் தொடர்பான அலுவலகப் பணிகள் ஆரம்பம்

04 பக்கம்



## மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்துங்கள்

சஜித் சபையில் வேண்டுகோள்

02 பக்கம்



## முஸ்லிம் எம்.பிக்களுடனும் கலந்துரையாடல் அவசியம்

ஹக்கீம் எம்.பி. கோரிக்கை

02 பக்கம்



## 13ஆவது திருத்தத்தை மீளப்பெறுவதற்கு முடியாது

அதிகாரம் தொடர்பில் பேசுவோம் என்கிறார் மனோ எம்.பி.

02 பக்கம்



## ரணிலின் காலத்தில் பிரச்சினைக்கு தீர்வு

இல்லாவிடின் பிறகு முடியாதென்கிறார் வெல்கம எம்.பி.

02 பக்கம்



## நாட்டைக் குழப்புவதில் ஜனாதிபதி வெற்றி

சிறீதரன் எம்.பி. சபையில் சாடல்

02 பக்கம்

## வடக்கு, கிழக்கில் சிறுபான்மை இனமாக வசிக்கும் சிங்களவர்கள்

### அவர்களின் பிரச்சினை பற்றியும் பேசுமாறு விமல் எம்.பி. கோரிக்கை



நா. தினுஷா

ஒரு மக்கள் பிரிவினர் மாத்திரமே வடக்கு, கிழக்குக்கு உரிமையானவர்கள். ஏனையவர்கள் அவசியமற்றவர்கள் என்ற மனநிலையில் பிரித்துப் பார்க்க வேண்டாம். வடக்கு, கிழக்கில் சிறுபான்மையினராக இருக்கும் சிங்களவர்களுக்கும் பாரிய... 02 பக்கம்

## ஒவ்வாமை காரணமாக நிகழ்ந்துள்ள மரணங்கள்

### சுகாதார அமைச்சுக்கு நிபுணர் குழு அறிக்கை

நா. தினுஷா

நாட்டில் கடந்த நாட்களில் இடம்பெற்ற ஆறு இறப்புகளில் ஐந்து மரணங்கள் அனாபிலாக்ஸிஸ் எனும் ஒவ்வாமையின் காரணமாகவே சம்பவித்துள்ளதாக மருந்து ஒவ்வாமை மற்றும் அதன் பின்விளைவுகளின் நிகழ்வுகள் குறித்து ஆராய நியமிக்கப்பட்ட நிபுணர் குழு தீர்மானித்துள்ளது. இந்தக் குழு சுகாதார அமைச்சரிடம் சமர்ப்பித்துள்ள இறுதி அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. 02 பக்கம்



கொழும்பு, கொம்பனித்தெரு முருகன் ஆலய வருடாந்த தங்கத் தேர் உற்சவம் பெருந்திரளான பக்தர்களின் பங்கேற்புடன் நேற்று (09) இடம்பெற்றது. படப்பிடிப்பு: லலித் பெரேரா

## மலையக மக்களின் உரிமைகோரிய நடைபயணம் ஒக.12இல் நடத்த ஏற்பாடு

### பேதமின்றி கலந்துகொள்ளுமாறு முற்போக்கு கூட்டணி அழைப்பு



படப்பிடிப்பு: மொஹமட் நசார்

நா. தினுஷா

இந்திய வம்சாவளி மக்கள் இலங்கைக்கு வந்து 200 வருட பூர்த்தியை முன்னிட்டும் அந்த மக்க ளின் உரிமைகளைக் கோரியும் நாளை மறுதினம் 12ஆம் திகதி நுவரெலியா மாவட்டத்தில் மாபெரும் நடைபயணமொன்றை முன்னெடுக்கவுள்ளதாக தமிழ் முற்போக்கு கூட்டணி நேற்று (09) அறிவித்தது.

நுவரெலியாவிலிருந்து தலவாக்கலை நோக்கி ஒரு பேரணியும் ஹட்டன் பிரதேசத்திலிருந்து ஒருதரப்பினரும் பேரணியாக இந்த நடைபயணத்தில் இணைந்து கொள்ளவுள்ளதாக முற்போக்கு கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

02 பக்கம்

## பிரசவித்த சில மணிநேரத்தில் சிசுவை வீசிச்சென்ற கொடூரம்

### கொலைக் குற்றச்சாட்டில் முல்லேரியாவில் பெற்றோர் கைது

கே. சுபானி

பிரசவித்த சில மணிநேரமேயான பச்சிளம் சிசுவை வீதியில் வீசிக் கொலைசெய்த தாயும் தந்தையும் முல்லேரியா பொலிஸாரால் நேற்று (09) கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

முல்லேரியா பகுதியிலுள்ள வீடொன்றில் நேற்றுமுன்தினம் (08) பிரசவிக்கப்பட்ட சிசுவொன்று சூட்சுமமான முறையில் மறைக்கப்பட்டு வீதியில் வீசிக் கொல்லப்பட்டுள்ள நிலையில், தாயும் தந்தையும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

உடல் உபாதைக்குள்ளான சந்தேகநபரான... 02 பக்கம்

## கேரளாவின் பெயர் 'கேரளம்' என மாற்றம் சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றம்



07 பக்கம்



## உஷ்

பாராளுமன்றத்தில் நேற்று வடக்கு கிழக்கு தமிழ் எம்.பிக்கள் சிலரை கண்டாராம் ரணில்.

வடக்கில் இந்து ஆலயங்கள் தொடர்பில் வந்திருக்கும் வர்த்தமானிகள் தொடர்பில் எம்.பிக்கள் கேட்க, அதைப்பற்றி தெரியாதே என்று கைவிரித்தாராம் ஜனாதிபதி.

ஜனாதிபதிக்கே தெரியாமல் இத்தனை பெரிய விடயங்கள் நடக்கின்றனவா என்று எம்.பி மார் தமக்குள்பேசி கவலைப்பட, இல்லையில்லை அவர் தெரிந்தாலும் இப்படித்தான் பதில் வழங்குவார் என்று கூறினாராம் கிழக்கு எம்.பி ஒருவர்.

## வறட்சியால் 97 ஆயிரம் பேர் பாதிப்பு

கே. சுபானி

நாட்டில் நிலவும் வறட்சியான கால நிலை காரணமாக எட்டு மாவட்டங்களைச் சேர்ந்த 97ஆயிரத்து 579 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். வறட்சியால் வடக்கு மாகாணமே அதிக பாதிப்புகளை எதிர் நோக்கியுள்ளது. 02 பக்கம்

### முஸ்லிம் விவாக, விவாகரத்து சட்டத்திருத்தம்

## உலமா சபையும் முஸ்லிம் கவுன்ஸிலும் விரிவான கலந்துரையாடல் முன்னெடுப்பு



முஸ்லிம் விவாக, விவாகரத்து சட்டத்திருத்தம் குறித்து சமூகத்தில் புரிதலையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்தும் நோக்கில் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் கவுன்ஸில் ஆகிய இருதரப்புக்குமிடையில் சுமுக சந்திப்பொன்று உலமா சபையின் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் (08) நடைபெற்றது. 02 பக்கம்

## கமெண்ட் கந்தர்...



மக்கள் நம்புகிற மாதிரியே பேசுறதில ரணில் ஐயா வல்லவர் பாருங்கோ... இப்போவே தமிழர் பிரச்சினையில் பாதி முடிஞ்ச மாதிரியல்லே பீலிங் வருது என்னங்கோ..

## வறட்சியால் 97 ஆயிரம் பேர்...

அங்கு 22ஆயிரத்து 859 குடும்பங்களைச் சேர்ந்த 73ஆயிரத்து 04பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, நிலவும் கடும் வறட்சி காரணமாக வெவ்வேறு நோய்கள் ஏற்படும் அபாயம் உள்ளதாக சுகாதாரப்பிரிவு எச்சரிக்கை விடுத்துள்ளது.

வெப்பத்திலிருந்து பாதுகாப்பு பெறுவதற்கு அடிக்கடி நீர் அருந்துமாறு பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், வைத்தியர் பு.விஜேசூரிய ஆலோசனை வழங்கியுள்ளார்.

மேலும், நாட்டில் நிலவும் அதிக வெப்பத்துடனான காலநிலையினால் வெயிலில் தேவையின்றி நடமாடுவதை தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்பதுடன் குறிப்பாக, காலை 11.00 மணிமுதல் மாலை 3.00 மணிவரையான காலப்பகுதியில் வெயிலில் நடமாடுவதை தவிர்த்துக்கொள்ள வேண்டும் என இலங்கை மருத்துவச் சங்கம் தெரிவித்துள்ளது.

அத்தோடு, பிளாஸ்ரிக் குடிநீர் போத்தல்களை பயன்படுத்துவது அபாயகரமானது எனவும் எச்சரிக்கை விடுத்துள்ளது. முக்கியமாக அதிக குளிர்பானம் அல்லது இனிப்பு பானங்களை அருந்துவதை தவிர்த்துக்கொள்ள வேண்டும் என இலங்கை மருத்துவ சங்கத்தின் செயலாளர் வைத்தியர் இ.ஏ.எஸ்.டி.எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் நேற்று (09) வெளியிட்டுள்ள அறிக்கையில்,

நாட்டில் நிலவும் வறட்சியுடனான காலநிலையால் யாழ்ப்பாணம், மன்னார், பதுளை, குருணாகல், புத்தளம், திருகோணமலை மற்றும் இரத்தினபுரி, முல்லைத்தீவு உள்ளிட்ட எட்டு மாவட்டங்களில் 30 ஆயிரத்து 155 குடும்பங்களைச் சேர்ந்த 97ஆயிரத்து 579 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வட மாகாணமே அதிக பாதிப்பை எதிர்நோக்கியுள்ளது. அங்கு 22ஆயிரத்து 859குடும்பங்களைச் சேர்ந்த 73ஆயிரத்து 04 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பாக வடமாகாணத்தில் யாழ்ப்பாணத்தில் அதிக எண்ணிக்கையிலானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். அங்கு 21ஆயிரத்து 714 குடும்பங்களைச் சேர்ந்த 69ஆயிரத்து 113 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் சாவகச்சேரி மற்றும் சங்கானை ஆகிய பகுதிகளில் வறட்சி மற்றும் குடிநீரின்றி மக்கள் பல்வேறு அசௌகரியங்களை சந்தித்துள்ளனர். சங்கானையில் 15 ஆயிரத்து 967 குடும்பங்களைச் சேர்ந்த 49ஆயிரத்து 260பேரும் சாவகச்சேரியில் 3ஆயிரத்து 185 குடும்பங்களைச் சேர்ந்த 11ஆயிரத்து 760 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, திருகோணமலையில் 08 ஆயிரத்து 979 பேரும் குருணாகலில் 5ஆயிரத்து 655பேரும் இரத்தினபுரியில் 9ஆயிரத்து 501பேரும் புத்தளத்தில் 215பேரும் மன்னாரில் 3ஆயிரத்து 244 பேரும் பதுளையில் 440 பேரும் முல்லைத்தீவில் 563பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர் என சுட்டிக்காட்டப்பட் டுள்ளது.

நிலவும் வறட்சியால் நீர் ஆதாரங்கள் மாசடைவதால் வயிற்றுப்போக்கு உள்ளிட்ட நோய்கள் பரவும் அபாயம் காணப்படுகின்றது. கொதித்து ஆறிய நீரை பருகுவதன் மூலம் இந்நோய்களை தவிர்க்க முடியும் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் உதவி செயலாளர் வைத்தியர் சமில் விஜேசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

வறட்சியால் நீர் ஆதாரங்கள் வற்றிப்போயுள்ளதால் நீரில் கிருமிகள் இருக்க வாய்ப்புள்ளது. இந்நீரை பயன்படுத்தும்போது வயிற்றுப்போக்கு போன்ற நோய்கள் உருவாகும் அபாயம் உள்ளது. நீங்கள் அருந்தும் குடிநீர் சுத்தமாக இல்லை என்பதில் உங்களுக்கு ஏதேனும் சந்தேகம் இருந்தால், குறைந்தபட்சம் தண்ணீரைக் கொதிக்க வைத்து அருந்துங்கள் என அவர் தெரிவித்துள்ளார்.

## வடக்கு, கிழக்கில்...

பிரச்சினைகள் உண்டு. எனவே தமிழ், சிங்களம் என்ற வேறுபாடின்றி சகல பாராளுமன்ற உறுப்பினர்களுடனும் கலந்துரையாட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்வர வேண்டும் என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவங்ச சபையில் நேற்று (09) கோரிக்கை முன்வைத்தார்.

13ஆவது அரசியலமைப்பு தொடர்பான ஜனாதிபதியின் விசேட உரையினை தொடர்ந்தே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்தார்.

இதுதொடர்பில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

ஜனாதிபதி வழங்கிய தெளிவுரையில், வடக்கு, கிழக்கு மக்களுக்கு இருப்பும் பிரச்சினைகள் குறித்து தமிழ்க் கட்சிகளுடன் கலந்துரையாடி வருவதாக தெரிவித்திருந்தார். அதேபோன்று, பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் அந்த பிரதேசங்களிலுள்ள முஸ்லிம் கட்சி தலைவர்களுடனும் கலந்துரையாடுமாறு கோரியிருந்தார்.

அப்படியென்றால், சிங்கள பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு குறிப்பிடுமளவுக்கு அந்த பிரதேசங்களில் பிரச்சினைகள் இல்லையா என்பதே எனது கேள்வியாகும்.

யாழ்ப்பாணம், திஸ்ஸ விகாரையின் வழிபாட்டு நடவடிக்கைகளுக்கு வாய்ப்பு வழங்கவில்லை. மறுபுறம் குருந்தி விகாரை பிரச்சினையும் ஒருபுறம் இடம்பெற்று வருகின்றது.

ஆகவே, தேசிய ரீதியாக பிரிக்காமல் சிங்கள, தமிழ், முஸ்லிம் என வடக்கு கிழக்கு சகல பாராளுமன்ற உறுப்பினர்களுடனும் பேசுவதற்கு ஜனாதிபதி முன்வர வேண்டும். ஆளுந்தரப்பு, எதிர்த் தரப்பு யாராக இருந்தாலும் சகலருடனும் கலந்துரையாடுவதனூடாகவே பிரச்சினைகளுக்கு தீர்வை பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

அந்த பிரதேசங்களிலுள்ள பிரச்சினைகளை குறிப்பிட்டு ஒரு மக்கள் பிரிவினருக்கு மாத்திரம் வரையறுக்கக்கூடாது. அது தவறாகும். அந்த பிரதேசங்களிலுள்ள சிறுபான்மையினராக இருக்கும் சிங்கள மக்களுக்கு பாரிய பிரச்சினைகள் இருக்கின்றன. அந்த பிரச்சினைகள் குறித்து இந்த சபையில் பேசுவதில்லை.

ஆளுங்கட்சியிலும் எதிர்க் கட்சியிலும் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை போன்ற பிரதேசங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அவர்கள் சகலருடனும் பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்படவேண்டும். ஒன்று அல்லது இரு மக்கள் பிரிவினர் மாத்திரமே வடக்கு கிழக்குக்கு உரிமையானவர்கள் ஏனையவர்கள் அவசியமற்றவர்கள் என்ற மனநிலையில் பிரித்து பார்க்க வேண்டாம் என்று கோரினார்.

அதற்கு பதிலளித்து உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

வடக்கு, கிழக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் என்னுடன் கலந்துரையாடியமையின் காரணமாக இந்த பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்திருந்தோம். உங்களின் கோரிக்கைக்கமைய, சிங்கள மக்களின் பிரச்சினைகள் தொடர்பிலும் கலந்துரையாட முடியும். அதில் எந்த பிரச்சினையும் இல்லை என்றார்.

## மலையக மக்களின்...

கொழும்பு, குளோபல் டவர்ஸ் விடுதியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

பாராளுமன்ற உறுப்பினர்களாd வே.இராதா கிருஷ்ணன், பழனி திகாம்பரம், எம். உதயகுமார் ஆகியோரும் இந்த சந்திப்பின்போது கலந்து கொண்டிருந்தனர்.

இதுதொடர்பில் மனோ எம்.பி. தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

நுவரெலியா மாவட்டத்தில் அமைதியான ஜனநாயக ரீதியான முறையில் இந்த நடைபயணத்தை முன்னெடுக்க திட்டமிட்டுள்ளோம். மலையக தமிழ் மக்கள் இலங்கையிலுள்ள முக்கிய இனங்களில் ஒரு இனத்தவர்களாக இருக்கிறார்கள். மிகவும் காலதாமதமாக மலையக மக்கள் உரிமைகளை பெற்றுக்கொண்டால் ஏனைய இனத்தவர்கள் அடைந்த சமூக இலக்குகளை இன்னும் இந்த மக்கள் அடையவில்லை. அந்த இலக்கை அடைவதற்கு வாய்ப்பை தாருங்கள், மலையக தமிழ் மக்களையும் இலங்கை பிரஜைகளாக முழுமையாக ஏற்றுக்கொள்ளுங்கள், நாங்களும் இலங்கையர்கள் தான் என்று கோரியே இந்த நடைபயணத்தை ஏற்பாடு செய்துள்ளோம்.

இதில் அரசியல் கட்சிகள், இன மக்கள், சிவில் அமைப்புகள் என்ற வேறுபாடின்றி சகலரும் கலந்துகொள்ள வேண்டும் என்று கோருகிறோம். ஒரு நாள் நடைபயணம், ஒரு நாள் ஆர்ப்பாட்டம், பாராளுமன்ற உரையினூடாக சமூகத்தின் தலையெழுத்து மாறிவிடாது. அதனைத் தெளிவாக உரைக்க வேண்டும். அதற்காக செயற்பட வேண்டும்.

2015ஆம் ஆண்டின் பின்னர் எங்களால் மலையக பிரதேசங்களில் முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டங்கள் மீண்டும் முன்னெடுக்கப்பட வேண்டும். அந்த பொற்காலம் மீண்டும் தோற்றம் பெறும். அது மலையக தமிழ் மக்களின் எழுச்சிக்கான காலமாக இருக்கும் என்றார்.

இந்த நடைபவனி தொடர்பில் தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவர் பழனி திகாம்பரம் கருத்து தெரிவிக்கையில்,

தலைமன்னார் முதல் மாத்தளை வரை முன்னெடுக்கப்பட்டு வரும் நடைபயணத்தை சீர்குலைப்பதற்காக நாங்கள் பாத யாத்திரையை ஏற்பாடு செய்யவில்லை. காலங்காலமாக மலையக மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் நாங்கள் பேசி வருகிறோம். மலையகம் என்பது எவருக்கும் சொந்தமான பிரதேசம் இல்லை. சகல தரப்பினரும் அந்த மக்களுக்காக குரல் கொடுக்கவேண்டும். அப்போதே அந்த மக்களின் பிரச்சினைகள் சகலருக்கும் புரியும்.

அந்த நடைபயணத்திலும் சகலரும் கலந்துகொள்ள வேண்டும். யாருக்கும் எதிராக நாங்கள் இதனை ஏற்பாடு செய்யவில்லை. காணி உரிமை பற்றி யார் பேசினாலும் அதனை பெற்றுக்கொடுப்பவர்கள் அரசியல்வாதிகளாகவே இருக்கவேண்டும். அரசியல்வாதிகளின் அழுத்தமே ஏற்புடையதாக இருக்கும். இதனை புரிந்துகொள்ள வேண்டும். ஆனால், சிலர் அரசியல்வாதிகள் பங்குபற்றக்கூடாது, அவர்கள் செயற்படக் கூடாது என்றே கூறுகிறார்கள். அமைச்சு பதவிகள் கிடைத்தாலேயே காணி உரிமையை பெற்றுக்கொடுக்க கூடியதாக இருந்தது.

எங்களின் நடைபயணம் வரவேற்பை பெறுமா, இல்லையா என்பதை மக்களே தீர்மானிப்பார்கள். ஒரே தினத்தில் இரு பேரணிகளையும் நடத்துவதில் எந்தப் பிரச்சினையும் ஏற்படாது என்றார்.

### இன்று விசேட விவாதம்

இதேவேளை, பாராளுமன்றத்தில் நாளை (10ஆம் திகதி) வியாழக்கிழமை பெருந்தோட்ட சமூகம் தற்போது எதிர்கொள்ளும் சமூக பொருளாதாரப் பிரச்சினைகள் தொடர்பில் ஒத்திவைப்பு விவாதம் இடம்பெறவுள்ளது. எதிர்க்கட்சியின் சார்பில் தமிழ் முற்போக்கு கூட்டணியினால் இந்த பிரேரணை முன்வைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## மாகாண சபைத் தேர்தலை...

ஜனாதிபதியினால் அழைப்பு விடுக்கப்பட்ட சர்வகட்சி கலந்துரையாடலில், அரசாங்கத் தரப்பில் முன்வைக்கப்பட வேண்டிய யோசனைகளை முன்வைக்குமாறு எதிர்க் கட்சிகள் கோரிக்கை விடுத்ததுடன், முற்போக்கான எதிர்க்கட்சி என்ற வகையில் முன்மொழிவுகளை முன்வைத்து நல்லெண்ணத்துடன் பங்கேற்றோம்.

இப்போது மாகாண சபைகள் தேர்தலை நடத்தி அதற்கான மக்கள் ஆணைக்கு இடமளிப்பதே மிக முக்கியமான பூர்வாங்க நடவடிக்கை. தேவையான அரசியலமைப்பு திருத்தங்களுக்காக அப்போது பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தை விரைவாக வழங்க முடியும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (09) ஜனாதிபதியின் கருத்துக்கு பதிலளிக்கும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

பாராளுமன்றத்தில் 134 உறுப்பினர்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதிக்கு நாட்டின் ஆணைக்கு இடமளிக்கும் கடமை உள்ளது. ஜனாதிபதி எதிர்க்கட்சியில் இருக்கும்போது ஜனநாயகத்துக்காக குரல் எழுப்பினாலும் அது இப்போது நிறுத்தப்பட்டுள்ளது. இதனை அனுமதிக்க முடியாது.

எனவே, தேர்தலுக்குச் சென்று மக்கள் ஆணைக்கு இடம் கொடுத்து, அரச பயங்கரவாதத்தை அமுல்படுத்தாமல் மக்களை அசௌகரியப்படுத்தும் செயற்பாடுகளை அரசாங்கம் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

எதிர்க்கட்சி என்ற ரீதியில் ஐக்கிய மக்கள் சக்தி என்றும் மக்களின் பார்வையில் எது நல்லதோ அதற்கு படிப்படியாக இணங்கும்.

சுகாதார அமைச்சருக்கு எதிராக முன்வைக்கப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை வாபஸ் பெறப்படுவதாக ஊடகங்களில் வெளியான செய்திகள் பொய்யானவை. அதற்காக 03 நாள் விவாதம் தேவை - எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

## நாட்டைக் குழப்புவதில்...

''அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தைக் கொண்டு நாட்டைக் குழப்புவதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெற்றிகண்டிருக்கிறார். சபையில் நேற்று (09) உரையாற்றியவர்களின் கருத்துகளைக் கேட்கும்போது இந்த நாட்டில் ஒரு தீர்வு வந்துவிடக் கூடாது என்பதில் தெளிவாக இருப்பதாகவே புலப்படுகிறது'' என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் சபையில் நேற்று (09) தெரிவித்தார்.

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் நேற்று விசேட உரை நிகழ்த்திய பின்னர் அதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

''அடுத்த தேர்தலை நோக்கிய காரணத்துக்காக 13ஆவது திருத்தத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஒரு குழப்பமான சூழலுக்குள் கொண்டு வந்திருக்கிறார். இந்த நாட்டில் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்ற விடயத்தில் எத்தனை சிங்களத் தலைவர்கள் தெளிவாக இருக்கிறார்கள்? இந்த நாட்டில் தமிழ் மக்களுடைய பிரச்சினையை தீர்க்க வேண்டுமென்ற அபிலாஷை இருந்தால் 80 வருடங்களாக மக்கள் படும் அவலம் நீக்கப்படுவது அவசியம். அப்படியானால் அவர்களும் இணைந்து இந்த நாட்டை அபிவிருத்திப் பாதைக்கு இட்டுச் செல்வார்கள்.

வடக்கு, கிழக்கில், மலையகத்தில், கொழும்பில் உள்ள மக்களுக்கு சமஷ்டி அடிப்படையிலான தீர்வு அவசியம் என்பதற்காக பொதுசன வாக்கெடுப்பு நடத்த நீங்கள் தயாராக இருக்கிறீர்களா?

நீங்கள் சொல்வதைத்தான் தமிழர்கள் கேட்க வேண்டும் என நினைக்கிறீர்கள். இது மோசமானதொரு நிலைமை. இதிலிருந்து முதலில் வெளியில் வாருங்கள். இனவாத கருத்துகளிலிருந்தும் இனவாத சிந்தனைகளிலிருந்தும் நீங்கள் வெளியில் வந்து பிரச்சினைக்கு தீர்வு காண உங்கள் மனங்களை மாற்றுங்கள்.

தேர்தலும் நடக்காது, தீர்வும் கிடைக்காது. இந்நிலையில் அரசியல் தலைவர்களை ஒரு குழப்பத்தில் வைத்திருப்பதில் இப்போதைய அரசு வெற்றி கண்டிருக்கிறது'' என்றார்.

## முஸ்லிம் விவாக, விவாகரத்து...

இந்த சந்திப்பில் முஸ்லிம் விவாக, விவாகரத்து சட்டத்திருத்தம் சம்பந்தமாக முஸ்லிம் சிவில் சமூக அமைப்புகளால் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகள் தொடர்பில் இருதரப்பு பிரதிநிதிகளுக்குமிடையில் கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.

முஸ்லிம் விவாக, விவாகரத்து சட்டத்திருத்தம் தொடர்பில் தமது நிலைப்பாடு எதுவாக இருப்பினும் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா மற்றும் ஏனைய முஸ்லிம் சிவில் சமூக அமைப்புகளால் ஏகோபித்து தீர்மானிக்கப்பட்ட முன்மொழிவுகளுக்கு தாங்கள் உறுதுணையாக நிற்பதோடு சமூகத்தின் நலன் மற்றும் கருத்தொருமைப்பாட்டை கருத்தில்கொண்டு இத்திருத்தம் தொடர்பாக எட்டப்படும் ஏகோபித்த முடிவுகளுக்கு கூட்டிணைவோடும் புரிந்துணர்வுடனும் செயற்படுவதாகவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் கவுன்ஸில் உறுதியளித்தது.

அத்துடன், கருத்து முரண்பாடுகளின்றி அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட காதிமுறையில் பல திருத்தங்கள் மேற்கொள்ளப்படவேண்டும் என்பதோடு, கருத்து முரண்பாடுள்ள விடயங்களில் உலமாக்களின் வழிகாட்டல்களோடு சிவில் சமூக அமைப்புகளின் கருத்துகளையும் உள்வாங்கி பயணிக்கவேண்டும் என்று ஜம்இய்யத்துல் உலமா குறித்த கூட்டத்தின்போது வலியுறுத்தியது.

மேலும் 1970 களில் இருந்து தற்பொழுதுவரை விவாக, விவாகரத்து சட்டத்திருத்தம் தொடர்பில் ஜம்இய்யதுல் உலமா சபை குறித்த நிலைப்பாட்டில் உறுதியாக இருக்கின்ற விடயத்தையும் இதன்போது தெரிவித்துக்கொண்டது.

இதில் ஜம்இய்யதுல் உலமா சபையின் தலைமையகம் சார்பாக அதன் பதில் தலைவர் அஷ்-ஷெய்க் ஐ.எல்.எம். ஹாஷிம் ஸூரி, பொதுச் செயலாளர் அஷ்-ஷெய்க் எம்.அர்கம் நூராமித், பொருளாளர் கலாநிதி ஏ.ஏ. அஸ்வர், உப செயலாளர்களுள் ஒருவரான அஷ்-ஷெய்க் எம்.எஸ்.எம்.தாஸீம், நிறைவேற்றுக் குழுவின் மூத்த உறுப்பினர்களான அஷ்-ஷெய்க் எம்.எச்.எம்.புர்ஹான், அஷ்-ஷெய்க் எஸ்.எல். நவ்பர் உட்பட அஷ்-ஷெய்க் எம்.எஸ்.எம். நாளிம், அஷ்-ஷெய்க் ரிபாஹ் ஹஸன், அஷ்-ஷெய்க் எம்.என்.எம். ஸைபுல்லாஹ் ஆகியோரும் முஸ்லிம் கவுன்ஸில் சார்பாக அதன் தலைவர் என்.எம். அமீன், செயலாளர் எம்.டீ.எம். ரிஸ்வி, உறுப்பினர்களான முப்தி ஹாஷிம் மற்றும் டாக்டர் மரீனா தாஹா ரிபாய் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## ரணிலின் காலத்தில்...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் காலத்திலேயே நாட்டின் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டுமெனத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம அதற்காக அவர் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென சபையில் நேற்று (09) வலியுறுத்தினார்.

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் நேற்று விசேட உரை நிகழ்த்திய பின்னர் அதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே வெல்கம தனது கருத்தை முன்வைத்தார்.

"அரசியலமைப்பின் 13ஆவது திருத்த அமுலாக்கத்தின்போது இந்தியாவுடன் நாங்கள் கைச்சாத்திடவில்லை. அதற்கு எதிராக புறக்கோட்டையில் நாம் போராட்டம் நடத்தினோம். எங்கள் மீது கண்ணீர்ப்புகைப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. ஹம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு எதிராகவும் நாம் போராட்டம் நடத்தினோம். இன்னும் போராட்டங்களை மேற்கொண்டு வருகிறோம்.

எனினும், நாட்டிலுள்ள பிரச்சினைக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க காலத்திலேயே தீர்வுகாணப்பட வேண்டும். அவ்வாறில்லையெனின் அதன் பின்னர் அது முடியாமற்போகும் என்றார்.

## 13ஆவது திருத்தத்தை...

நாட்டில் 13ஆவது திருத்தத்திலுள்ள மாகாண சபை முறைமையை யார் என்ன கூறினாலும் நீக்கிவிட முடியாது. அதிகாரம் குறித்து நாம் பேசுவோம். அதில் எந்தவித பிரச்சினையும் இல்லையென தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் சபையில் நேற்று (09) சுட்டிக்காட்டினார்.

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் நேற்று விசேட உரை நிகழ்த்திய பின்னர் கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் புதிய பிரச்சினையொன்றை உருவாக்கத் தேவையில்லை. இங்கு இருக்கின்ற பிரச்சினைகள் போதுமானவை.

யுத்தம் நிறைவடைந்த பின்னர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை நான் சந்தித்துப் பேசினேன். சிங்கள மக்களின் நம்பிக்கையை வென்ற பெருந்தலைவராக நீங்கள் காணப்படுகிறீர்கள். அதிகாரத்தைப் பகிர்ந்தளித்து மக்களின் மனதை வென்று பிரச்சினையை தீர்க்குமாறு நான் வேண்டுகோள் விடுத்தேன். ஆனால் அவர் பிரச்சினையைத் தீர்க்கவில்லை.

இப்போது சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. நாம் அதனைச் செய்ய வேண்டும். நாட்டின் அரசியல் வரலாற்றை எடுத்துப்பார்த்தால் பாரிய கட்சிகள் இதற்கான முனைப்பைக் காட்டும்போது ஏனைய கட்சிகள் எதிர்ப்பை வெளியிட்டு வந்தன.

ஆனால், இன்றைய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குறித்து நான் ஆடம்பரம் கொள்கிறேன். ஏனென்றால் இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துவதற்காக நாம் எதிர்ப்பை வெளிப்படுத்தவில்லை.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரச்சினையை தீர்ப்பதற்கு எடுக்கும் முயற்சிகள் வரவேற்கத்தக்கன. ஆனால், அவரோடு இருக்கும் உறுப்பினர்கள் எவ்வாறான நிலையில் இருக்கிறார்கள் என்பது தெளிவுபடுத்தப்பட வேண்டும் என்றார்.

## பிரசவித்த சில மணிநேரத்தில்...

தாய் பொலிஸ் பாதுகாப்புடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதுடன் தந்தை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

முல்லேரியா களனிமுல்ல வீதி, பண்டார மாவத்தையிலுள்ள வீடொன்றில் நேற்றுமுன்தினம் (08) இரவு மேற்படி குழந்தை பிரசவிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து சந்தேகநபர்களான தம்பதி குழந்தையை வீதியில் வீசிச் சென்றுள்ளது நேற்று (09) அதிகாலை பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பொலிஸார் குறித்த வீட்டுக்கு விரைந்து சோதனையிட்டபோது வீட்டில் இரத்தக் கறை காணப்பட்டுள்ளது. அதன் பின்னர் சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்கள் இருவரும் போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

## முஸ்லிம் எம்.பிக்களுடனும்...

வடக்கு, கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களை அழைத்து பேச்சுவார்த்தை நடத்தப்படுவது போன்று முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகளை தெரிவிப்பதற்காக முஸ்லிம் எம்.பிக்களுடனும் கலந்துரையாடல் நடத்தப்பட வேண்டியது அவசியமென ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் பாரர்ளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் சபையில் நேற்று (09) கோரிக்கைவிடுத்தார்.

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் நேற்று விசேட உரை நிகழ்த்தினார். அதனையடுத்து ஹக்கீம் எம்.பி. இந்தக் கோரிக்கையை அவரிடம் முன்வைத்தார்.

அவர் தொடர்ந்தும் கருத்து வெளியிடுகையில்,

அதிகாரப் பகிர்வு, நல்லிணக்கம், வடக்கு-கிழக்கு அபிவிருத்தி தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விரிவாக உரையாற்றியிருந்தார். அதற்கு எமது நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம். அது தொடர்பில் மற்றுமொரு நாள் விவாதத்தை முன்னெடுக்கலாம்.

இந்த நேரத்தில் இரு விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்துமாறு நான் ஜனாதிபதியிடம் வினயமாக கேட்டுக்கொள்கிறேன்.

அனைத்துக் கட்சி கூட்டத்துக்கு நீங்கள் அழைப்புவிடுத்தபோது நாமும் கலந்துகொண்டிருந்தோம். ஆயினும் அங்கு தேர்தல் தொடர்பான கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டன. வடக்கு, கிழக்கில் முஸ்லிம்களும் முக்கிய இடத்தை வகிக்கிறார்கள். வடக்கு, கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களை நீங்கள் சந்தித்தீர்கள். அதேபோல முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களுடனும் சந்திப்பு மேற்கொள்ளப்பட வேண்டும்.

பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் உறுப்பினர்களையும் கலந்துரையாடல்களுக்கு அழைக்கும் பட்சத்தில் நாம் எமது பிரச்சினைகளையும் முன்வைக்கக் கூடியதாக இருக்கும்.

அதேபோன்று கட்சித் தலைவர்கள் என்ற ரீதியில் நாம் தேர்தல் தொடர்பில் பிரச்சினையொன்றை எதிர்நோக்கியுள்ளோம். இது குறித்து நாம் பிரதமர் தினேஷ் குணவர்தனவுடனும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் ஜனக வக்கும்புரவுடனும் பேசியுள்ளோம்.

அரசியல் உரிமைகொண்ட அரசாங்க ஊழியர்கள் தேர்தலில் போட்டியிடுவதற்கு விண்ணப்பித்துள்ளார்கள்.

தேர்தல் நடத்தப் படாத காரணத்தினால் அவர்கள் வேறு இடங்க ளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். தேர்தலை நடத்தக் கூடாது என அரசாங்கம் தீர்மானித்திருக்குமானால் தேர்தலில் போட்டியிட விண்ணப்பித்துள்ள அரச ஊழியர்கள் தொடர்பில் தீர்மானமொன்றை எடுத்திருக்க வேண்டும். அவர்கள் பிரச்சினைகளை எதிர்நோக்காமல் சொந்த இடத்திலேயே தொழில்புரிந்திருப்பார்கள்.

இது குறித்து ஜனாதிபதி கவனம் செலுத்த வேண்டும். அனைத்துக் கட்சித் தலைவர்களும் இந்த விடயத்தில் கரிசனை கொண்டிருக்கிறார்கள் என்றார்.

அதற்குப் பதிலளித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, வடக்கு, கிழக்கில் மாத்திரமல்லாது அனைத்து முஸ்லிம் எம்.பிக்களையும் சந்தித்து கலந்துரையாட எதிர்பார்த்துள்ளோம். அத்துடன் தேர்தல் விவகாரம் தொடர்பில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர், நீதி அமைச்சர் ஆகியோர் தலைமையில் ஆராயப்பட்டு வருகிறது. அந்த விடயதானங்கள் நிறைவடைந்த பின்னர் வேட்புமனுக்களை இரத்துச் செய்யவும் முடியும் என்றார்.

## ஒவ்வாமை காரணமாக

மருத்துவர், நோயாளியின் இரகசியத்தன்மையை பாதுகாக்கும் நோக்கில் முழு அறிக்கையும் முழுமையாக வெளியிட முடியாமல் போயுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, நிபுணர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அந்த அறிக்கையில் 12 பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அவ்வறிக்கையில், அனாபிலாக்ஸிஸ் முகாமைத்துவம், அவசரகால முகாமைத்துவம் குறித்த தேசிய மற்றும் நிறுவன வழிகாட்டுதல்கள், நெறிமுறைகளை மறுபரிசீலனை செய்து அவற்றை நடைமுறைப்படுத்துமாறு கோரப்பட்டுள்ளது. அனாபிலாக்ஸிஸ் ஒவ்வாமையை, “முன்கூட்டியே கண்டறிந்து உடனடியாக அட்ரினலின் மூலம் சிகிச்சையளிக்கவும்” என்ற நடைமுறையை மீண்டும் வலியுறுத்துமாறும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

அனாபிலாக்ஸிஸின் அவசர முகாமைத்துவம் தொடர்பில் மருத்துவ அதிகாரிகள் மற்றும் தாதியர்களுக்கான கட்டாயமான தொடர்ச்சியான தொழில்முறை முகாமைத்துவ பொறிமுறை அல்லது பயிற்சித் திட்டத்தை உருவாக்கவும், அறிக்கையிடப்பட்ட நபருக்கு ஆபத்தான அனைத்து பாதகமான சம்பவங்களுக்கும் நிறுவன மருத்துவ தணிக்கைகளை நடத்துவதற்கான கட்டாய பொறிமுறையை நிறுவவும் அந்த அறிக்கையில் மேலும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

அனாபிலாக்ஸிஸ் ஒவ்வாமையிலிருந்து உயிர் பிழைத்தவர்களுக்கான பரிந்துரை வளையமைப்புகள் அல்லது பாதைகள் அடுத்தடுத்த ஒவ்வாமை விமர்சனங்களுக்கு நிறுவ வேண்டும் என்றும் நாடு முழுவதும் உள்ள பாடசாலைகளில் 10 மற்றும் 11ஆம் தர மாணவர்களுக்கு ஒவ்வாமை மற்றும் மருந்துகள், ஆன்டிபயாடிக்குகளின் பாதுகாப்பான பயன்பாடு குறித்து கற்பிப்பதற்கான வழிமுறையை நிறுவுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஊடகவியலாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கு கல்வி கற்பதற்கு இதேபோன்ற பொறிமுறையை ஏற்படுத்தவும் சுகாதார நிறுவனங்களுக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய தரத்தில் பாதுகாப்பான மற்றும் பயனுள்ள மருந்துகளை போதுமான அளவில் வழங்குவதற்கு இடையூறாக இருக்கும் நடைமுறை அல்லது நிதி சிக்கல்களில் விரைவான தீர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் மருந்துப் பொருட்களை எடுத்துச் செல்லும்போது வெப்பநிலைக் கட்டுப்பாட்டைக் கண்டிப்பாக பராமரிக்கவும் நாட்டில் மருந்துப் பொருட்களின் தரத்தை மேம்படுத்த, பதிவு மற்றும் சந்தைப்படுத்துதலுக்குப் பின் சீரற்ற மாதிரிகளின் தரச் சோதனையின் போது மருந்துகளின் தரத்தை கடுமையாக மதிப்பீடு செய்யவும் அந்தக் குழு மேலும் பரிந்துரை செய்துள்ளது.

# அனுமதியின்றி பெரும்பான்மையினத்தவர்கள் கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபட முயற்சி

## புலிபாய்ந்தகல்லில் அத்துமீறி அமைக்கப்பட்ட வாடியை அகற்றவும் உத்தரவு

விஜயரத்தினம் சரவணன்

முல்லைத்தீவு, புலிபாய்ந்தகல் பகுதியில் அனுமதியின்றி பெரும்பான்மையின மீனவர்களால் கடற்றொழில் நடவடிக்கைக்காக அமைக்கப்பட்ட வாடியை அகற்றுமாறு கொக்குத்தொடுவாய் வடக்கு கிராம அலுவலர் உத்தரவிட்டுள்ளார்.

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய், வடக்கு கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட புலிபாய்ந்தகல் பகுதியில் சிங்கள மக்களை குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தகவல்கள் வெளியாகியிருந்த நிலையில், கடந்த செவ்வாய்க்கிழமை (08) கொக்குத்தொடுவாய் கடற்றொழிலாளர் சங்கத்தினர், நாயாறு கடற்றொழிலாளர் சங்கத்தினர் ஆகியோர் குறித்த புலிபாய்ந்தகல் பகுதிக்குச் சென்று பார்வையிட்டபோது அங்கு புதிதாக ஒரு வாடி அமைக்கப்பட்டிருந்ததை அவதானித்துள்ளனர்.

இதனையடுத்து நேற்று (09) குறித்த இடத்துக்கு கடற்றொழிலாளர் சங்கத்தினரும் கொக்குத்தொடுவாய் வடக்கு கிராம அலுவலரும் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரனும் சம்பவ இடத்துக்குச் சென்றனர். இந்நிலையில், 18க்கும் மேற்பட்ட பெரும்பான்மையின மீனவர்கள் நான்கு படகுகளுடன் அங்கு கடற்றொழில் நடவடிக்கைக்காக வாடி அமைத்திருந்ததை அவதானித்தனர்.





அதேவேளை, அப்பகுதியில் கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபடவும் வாடியமைக்கவும் அனுமதி வழங்குமாறு முல்லைத்தீவு கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளரால் கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்துக்கு பரிந்துரைக் கடிதமொன்று வழங்கப்பட்டுள்ளமை அப்பகுதி கிராமசேவகரின் விசாரணையின்போது தெரியவந்துள்ளது.

இந்நிலையில், கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளரால், கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்துக்கு எழுதப்பட்ட பரிந்துரைக் கடிதத்தை அப் பகுதி கிராம அலுவலரிடம் காண்பித்த பெரும்பான்மையின மீனவர்கள், முல்லைத்தீவு கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களம், தாம் அப் பகுதியில் கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபட அனுமதி வழங்கியுள்ளதாகத் தெரிவித்தனர்.

இந்நிலையில், குறித்த கடிதமானது கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு அனுமதி வழங்குமாறு முல்லைத்தீவு கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர், கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்துக்கு எழுதிய பரிந்துரைக்கடிதமே தவிர இது அனுமதிக்கடிதம் அல்ல என கொக்குத்தொடுவாய் வடக்கு கிராம அலுவலரால் தெளிவுபடுத்தப்பட்டது.

அத்தோடு இதுபோன்ற கடற்றொழில் செயற்பாடுகளுக்கு பிரதேச செயலகத்தின் அனுமதி பெறப்படவேண்டுமென கிராம அலுவலரால் தெரிவிக்கப்பட்டதுடன், அனுமதி பெறப்படாமல் அமைக்கப்பட்ட வாடி அகற்றப்படவேண்டும் எனவும் குறிப்பிட்டார்.







சிறுநீரக சத்திர சிகிச்சையின்போது உயிரிழந்ததாகக் கூறப்படும் கொட்டாஞ்சேனை பிரதேசத்தைச் சேர்ந்த சிறுவன் ஹம்தியின் மரணத்துக்கு நீதி கோரி அப்பகுதி வாழ் மக்கள் புதுக்கடை நீதிமன்றத்துக்கு முன்னால் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

படங்கள்: எம்.நசார்

## கட்டைக்காட்டில் விபத்து: இளைஞன் உயிரிழப்பு

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு பகுதியில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக மருதங்கேணி பொலிஸார் தெரிவித்தனர்.

மன்னார் பகுதியைச் சேர்ந்த செபமாலை நிரோசன் (வயது 22) என்பவரே மேற்படி சம்பவத்தில் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இளைஞரின் சடலம் மந்திகை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில், மருதங்கேணி பொலிஸார் இதுதொடர்பான விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# திருவிழாவில் யாசகத்துக்கு தடை

பு.கஜிந்தன்

நல்லூர் கந்தசுவாமி ஆலய மஹோற்சவ திருவிழாவில் குழந்தைகளை வைத்து யாசகத்தில் ஈடுபட தடை விதிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்ட மட்ட சிறுவர் அபிவிருத்தி குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் (08) மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதன்போது சிறுவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்பட்டது.

இதற்கமைய, திருவிழா காலங்களில் வெளி மாவட்டங்களில் இருந்து வருகை தருவோரால் ஆலய வீதிகளில் குழந்தைகளை வைத்து யாசகத்தில் ஈடுபடுவதை தடுக்கும் முகமாகவே குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டது.

இது தொடர்பில் யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மற்றும் யாழ்ப்பாண தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கும் அறிவிக்க தீர்மானிக்கப்பட்டது.

# யாழ். பொலிஸ் நிலையங்களில் சிறுவர், பெண்கள் விவகாரங்களுக்கான உத்தியோகத்தர் பற்றாக்குறை

## அபிவிருத்தி குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டு

பு.கஜிந்தன்

யாழ்ப்பாண மாவட்ட பொலிஸ் நிலையங்களில் சிறுவர் மற்றும் பெண்கள் விவகாரத்தை கையாளும் தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு பற்றாக்குறை நிலவுவதாக சிறுவர் அபிவிருத்தி குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும், தமிழ்ப் பேசும் உத்தியோகத்தர்கள் கொடிகாமம், சாவகச்சேரி பொலிஸ் நிலையங்களில் இல்லாமை இதன்போது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்ட சிறுவர் அபிவிருத்தி குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் (08) மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் யாழ்ப்பாணம் மாவட்ட செயலாளர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது யாழ்ப்பாண மாவட்டத்தில், யாழ்ப்பாண பிராந்தியம், காங்கேசன்துறை பிராந்தியம் என 17 பொலிஸ் நிலையத்தில் 17 ஆண் பொலிஸாரும் 14 பெண் பொலிஸாருமாக மொத்தமாக 31 பொலிஸ் உத்தியோகத்தர்கள் காணப்படுகின்றனர் என அபிவிருத்தி குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்தியா, பங்களாதேஷ், மாலைதீவு உள்ளிட்ட சார்க் நாடுகளுக்கு விசேட விசா முறை

## உருவாக்குவதற்கான அவசியம் குறித்து சர்வதேச தொடர்புகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவில் அவதானம்



இந்தியா, பங்களாதேஷ் மற்றும் மாலைதீவு உள்ளிட்ட சார்க் நாடுகளுக்கு விசேடமான விசா முறையொன்றை உருவாக்குவதற்கான அவசியம் குறித்து சர்வதேச தொடர்புகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவில் கவனம் செலுத்தப்பட்டது.

சர்வதேச தொடர்புகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தலைமையில் நேற்று முன்தினம்(08) கூடியபோதே இவ்விடயம் பற்றிக் கலந்துரையாடப்பட்டது.

சார்க் பிராந்திய நாடுகள் தொடர்பில் இலங்கை கொண்டிருக்கும் வெளிநாட்டுக் கொள்கை குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டதுடன், இந்தியா, பங்களாதேஷ், மாலைதீவு போன்ற சார்க் பிராந்திய நாடுகளுக்கு விசேடமான விசா முறையொன்றை உருவாக்க வேண்டியது அவசியம் என குழுவின் தலைவர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார். இதன்காரணமாக, இந்த நாடுகளுக்கு இணக்கமான முறையில் விசா வழங்கும் முறையை தயாரிக்க குழு முன்மொழிவதாகத் தெரிவித்தார்.

மேலும், வெளிவிவகார அமைச்சின் கீழ் உள்ள பல்வேறு திட்டங்களுக்கான உள்ளகப் பயிற்சிகளைத் தொடங்குவதற்கான வழிமுறையைத் தயாரிப்பதில் கவனம் செலுத்துமாறு வெளிவிவகார அமைச்சுக்குக் குழு முன்மொழிந்தது. இதனால் அனைத்து துறைகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் இந்த வேலைத்திட்டம் ஏற்பாடு செய்யப்பட வேண்டும் எனவும் வெளிநாட்டவர்களும் இணைந்து கொள்ள முடியும் எனவும் குழு சுட்டிக்காட்டியது.

சுற்றறிக்கையின் பிரகாரம், வெளிவிவகார அமைச்சின் கீழ் உள்ளகப் பயிற்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாக தற்போதைய அதிகாரிகள் தெரிவித்தனர். ஆனால் இந்த வேலைத்திட்டம் மிகவும் சம்பிரதாயமான முறையில் திறந்த வேலைத்திட்டமாக தயாரிக்கப்பட வேண்டுமென குழுவின் தலைவர் சுட்டிக்காட்டினார்.

வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்களுக்கு வாக்களிக்கும் முறைமையொன்றை தயாரிப்பது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டதுடன், பாராளுமன்றம் வழங்கிய பரிந்துரைகளுக்கு அமைய பொறிமுறையொன்றைத் தயாரிக்கத் தயாராக இருப்பதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் அதிகாரிகள் சுட்டிக்காட்டினர். அத்துடன், ஒன்லைன் தொழில்நுட்பத்தின் ஊடாக வாக்களிப்பை பதிவு செய்யும் முறைமை தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களும் இதன் ஊடாக வாக்களிப்பில் பதிவு செய்ய முடியும் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். அதன்படி, சபாநாயகருடன் கலந்தாலோசித்து இதற்கான அமைப்பை தயாரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

மேலும், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வெளிவிவகார அமைச்சின் கீழ் பல விழிப்புணர்வு மற்றும் பயிற்சி நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வது குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

இதில் குழுவின் உறுப்பினர்களான ஜீ.எல்.பீரிஸ், நிரோஷன் பெரேரா, எஸ்.எம்.எம்.முஷாரப், அகில எல்லாவல, கோகிலா குணவர்தன, யதாமினி குணவர்தன, மதுர விதானகே ஆகியோர் கலந்து கொண்டனர்.

# சபாநாயகரைச் சந்தித்தார் அவுஸ்திரேலிய பெடரல் பாராளுமன்ற உறுப்பினர் கசாண்ட்ரா



அவுஸ்திரேலிய பெடரல் பாராளுமன்ற உறுப்பினர் கசாண்ட்ரா பெர்னாண்டோ சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை அண்மையில் சந்தித்தார்.

இதன்போது சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன கசாண்ட்ரா பெர்னாண்டோவின் அரசியல் வாழ்வு குறித்து மகிழ்ச்சியை வெளியிட்டார். இரு நாடுகளினதும் பாராளுமன்ற முறைமை தொடர்பில் இதன்போது கருத்துகள் பரிமாறப்பட்டதுடன் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கான சிறந்த நடைமுறைகளை ஊக்குவிப்பது தொடர்பிலும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

கசாண்ட்ரா பெர்னாண்டோ 1987இல் இலங்கையில் பிறந்து 1999இல் அவுஸ்திரேலியாவுக்கு புலம்பெயர்ந்தார். அவர் அவுஸ்திரேலிய தொழிலாளர் கட்சி சார்பில் விக்டோரியா பிராந்தியத்தில் ஹோல்ட் தேர்தல் தொகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்தி 2022 பெடரல் தேர்தலில் பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார். அவர் அவுஸ்திரேலிய பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இலங்கை வம்சாவளியைச் சேர்ந்த முதலாவது அரசியல் பிரதிநிதியாவார்.

இச்சந்திப்பில் இலங்கை - அவுஸ்திரேலிய பாராளுமன்ற நட்புறவுச் சங்கத்தின் தலைவர் உதய கம்மன்பில, பாராளுமன்ற உறுப்பினர்களான வைத்திய கலாநிதி சுதர்ஷினி பெர்னான்டோபுள்ளே, மொஹமட் முஸம்மில், ஹெக்டர் அப்புஹாமி, வீரசுமன வீரசிங்ஹ, வைத்திய கலாநிதி உபுல் கலப்பத்தி(கலாநிதி) ஹரிணி அமரசூரிய உள்ளிட்ட அதன் உறுப்பினர்கள், பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர, உதவிச் செயலாளர் நாயகம் ஹன்ஸ அபேரத்ன ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# பிக்குகள் மீதான வெறுப்புப்பேச்சு தொடர்பில் சட்டரீதியான நடவடிக்கை அவசியமாகும்

## துறைசார் மேற்பார்வைக் குழுவிடம் பௌத்த மத குருமார் சுட்டிக்காட்டு



பௌத்த மத குருமார் தொடர்பில் உருவாக்கப்படும் வெறுப்புப் பேச்சுகள் தொடர்பில் சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது அவசியமாகும் என பௌத்த மத குருமார் சுட்டிக்காட்டினர்.

வெளிப்படையான மற்றும் பொறுப்புக் கூறவேண்டிய அரசாங்கமொன்று பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார சுமித்ரா ஆரச்சி தலைமையில் பாராளுமன்றத்தில் அண்மையில் இடம்பெற்றது. இக்கூட்டத்துக்கு பௌத்த மத குருமாரும் அழைக்கப்பட்டிருந்தனர். அதன்போதே அவர்கள் மேற்கண்ட விடயத்தை சுட்டிக்காட்டினர்.

இதன்போது வெளிப்படையான மற்றும் பொறுப்புக்கூறவேண்டிய அரசாங்கமொன்றுக்கான சட்டங்கள் தொடர்பிலும் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டிய சட்டங்கள் தொடர்பிலும் தமது கருத்துகளையும் முன்மொழிவுகளையும் முன்வைத்தனர்.

அத்துடன், நாட்டின் அனைத்துத் துறைகள் தொடர்பிலும் தேசிய கொள்கை தயாரிக்கப்பட வேண்டியதன் தேவை தொடர்பில் பௌத்த மத குருமார் சுட்டிக்காட்டினர். விசேடமாக அரசியல் கொள்கை மற்றும் தேசிய கொள்கை என்பவற்றை குழப்பிக்கொள்ளாமல் ஒவ்வொரு அரசாங்கத்தினாலும் தொடர்ச்சியாக செயற்படுத்தக்கூடிய தேசிய கொள்கை இந்நாட்டுக்கு முக்கியமானது எனவும் சுட்டிக்காட்டினர்.

அத்துடன், ஏனைய மத அமைப்புகளின் தேவைக்கமைய, பௌத்த மத குருமார் தொடர்பில் உருவாக்கப்படும் வெறுப்புப் பேச்சுகள் தொடர்பில் செயற்படுவதற்குச் சட்ட ரீதியான நடவடிக்கை எடுப்பதன் அவசியம் குறித்தும் பௌத்த குருமார் இதன்போது சுட்டிக்காட்டினர்.

இங்கு முன்வைக்கப்பட்ட விடயங்கள் தொடர்பில் இந்தக் குழு முடியுமான தலையீட்டை மேற்கொள்வதாக குழுவின் தலைவர் இதன்போது குறிப்பிட்டார். அத்துடன், முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகள் தொடர்பில் அறிக்கையொன்றை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இக் கூட்டத்தில் வண. ஆணமடுவே தம்ம திஸ்ஸ தேரர், வண. பஹமுனே ஸ்ரீசுமங்கள தேரர், வண. (கலாநிதி) வலேபொட குணசிறி தேரர், வண. (சிரேஷ்ட பேராசிரியர்) கிவுலே கெதர நாரத தேரர், வண. (சிரேஷ்ட பேராசிரியர்) இந்துராகாரே தம்மரத்ன தேரர், வண. (பேராசிரியர்) பின்னவல சங்கசுமன தேரர், வண. (கலாநிதி) நாம்பிரித்தன்கடவர ஞானரத்ன தேரர், வண. (பேராசிரியர்) மெதகொட அபயதிஸ்ஸ தேரர், வண. (கலாநிதி) கும்பல்கொட தம்மாலோக தேரர், வண. கந்தேகம தீபவன்ஷாலங்கார தேரர் மற்றும் வண. அகுரடியே நந்த தேரர், பாராளுமன்ற உறுப்பினர்களான உதயன கிரிந்திகொட, ஜயந்த வீரசிங்க மற்றும் மதுர விதானகே ஆகியோர் கலந்துகொண்டனர்.

## தினசரி பலாபலன்கள்

சோபகிருது வருடம் ஆடி மாதம் 25ஆம் நாள் வியாழக்கிழமை

**மேஷம்**: தேவையற்ற செலவுகளால் பணத்தை இழப்பீர்கள். வாய் வார்த்தைகளால் குழப்பங்கள் ஏற்படும்.

**ரிஷபம்**: உடல் நலம் சீராக இருக்கும். நண்பர்கள் சந்திப்பால் நன்மைகள் உதவிகள் உண்டு.

**மிதுனம்**: உங்கள் மதிப்பினை நீங்களே கெடுத்துக் கொள்ளாதீர்கள். உணவு, உறக்கம் இன்றி சிரமப்படுவீர்கள்.

**கடகம்**: எந்த வேலையையும் மிக எளிதில் முடிப்பீர்கள். சகாக்கள் மூலம் உதவிகளை பெறுவீர்கள்.

**சிம்மம்**: எதிர்கால வாழ்கைப் பற்றிய சிந்தைகளில் இருப்பீர்கள். நண்பரின் உதவியால் ஆனந்தமடைவீர்கள்.

**கன்னி**: நீங்கள் எண்ணிய வெளிநாட்டுப் பயணம் நிறைவேறும். யாரையும் வீணே பகைத்துக் கொள்ளாதீர்கள்.

**துலாம்**: உடலைக் கெடுக்கும் எந்த முயற்சியும் நன்மை தராது. கோபத்தை குறைத்துக் கொண்டால் இலாபம் உண்டு.

**விருச்சிகம்**: காதல், திருமணம் கைகூடும். உல்லாசமாகவும் மகிழ்ச்சியாகவும் இன்றைய நாளைக் கழிப்பீர்கள்.

**தனுசு**: சில விடயங்களுக்காக மற்றவர்களுக்கு நீங்கள் கட்டுப்பட்டே ஆக வேண்டும். டென்ஷன் வேண்டாம்.

**மகரம்**: புத்திரர்களால் சற்று மனக்கவலை ஏற்படும். அதிர்ஷ்ட வாய்ப்புகளை நழுவ விடுவீர்கள்.

**கும்பம்**: குடும்பத்தில் மகிழ்ச்சியும் அன்பும் அமையும் நாள். உணர்வுகளைக் கட்டுப்படுத்திக் கொள்ளுங்கள்.

**மீனம்**: நினைத்த காரியத்தில் வெற்றி கிட்டும் நாள். புதிய பொருட்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**திதி:** தசமி பி.இ.5.06 வரை பின் ஏகாதசி (தேய்)

**நட்சத்திரம்:** ரோஹிணி பி.இ.4.01 வரை பின் மிருகசீரிடம்

**யோகம்:** மரண யோகம் முழுவதும்

**வார சூலை:** தெற்கு திசை நோக்கி சுபகாரியம் கூடாது

**நல்லநேரம்:** மு.ப.11.05 – 12.05 மணிவரை

**ராகுகாலம்:** 135 – 3.05 மணிவரை

**எமகண்டம் :** 6.05- 7.35 மணிவரை

**குளிகை:** 9.05 - 10.35 மணிவரை

**சந்திராஷ்டமம்:** துலா ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும்

**தனஅதிஷ்டம்:** கார்த்திகை, உத்தரம், உத்தராடம் (பிறந்தவர்களுக்கு)

**விசேட தினம்:** ------------

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739







கொழும்பு, கொம்பனித்தெரு முருகன் ஆலய வருடாந்த தேர் உற்சவம் பெருந்திரளான பக்தர்களின் பங்கேற்புடன் நேற்று (09) இடம்பெற்றது.

படப்பிடிப்பு: லலித் பெரேரா

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2023 ஒகஸ்ட் 10ஆம் திகதி, வியாழக்கிழமை

# மக்கள் மன்றத்தை அவமதிக்கலாமா?

பாராளுமன்ற சபையில் பாடசாலை மாணவர்கள் முன்னிலையில் பாராளுமன்ற உறுப்பினர்கள் தகாத வார்த்தைகளை பேசியமைக்கு பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளமை எமது கவனத்தை ஈர்த்திருக்கிறது.

பாராளுமன்றத்தில் உள்ள ஆண் விபசாரி ஒருவர் கட்சித் தலைவராகும் நோக்கில் செயற்படுகிறார். என் வாயை அவர் குழப்பிக்கொள்ள கூடாது என இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் குறிப்பிட்ட கருத்துக்கே ரவூப் ஹக்கீம் எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளார்.

இதேவேளை, தகாத வார்த்தைகளை குறிப்பிடும்போது சபைக்கு தலைமை தாங்கிக்கொண்டு அதை இரசித்துக் கொண்டிருக்கின்றீர்கள் என எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் சபைக்கு தலைமை தாங்கிய பிரதி சபாநாயகரை நோக்கி எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

பாராளுமன்றத்தில் (08.08.2023) இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினாக்களின்போது ஒழுங்கு பிரச்சினை ஒன்றை முன்வைத்து உரையாற்றிய இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத், ''தனியார் ஊடகம் கடந்த காலங்களில் எனக்கு எதிரான கருத்துகளை வெளியிட்டது. பாராளுமன்ற சிறப்புரிமை குழுவுக்கு அந்த ஊடகர்கள் அழைக்கப்பட்டபோது தவறை ஏற்றுக்கொண்டார்கள்.

அந்த தனியார் ஊடகத்தைப் போன்று பாராளுமன்றத்தில் ஆண் விபசாரி ஒருவர் செயற்படுகிறார். கட்சித் தலைவராகும் நோக்கத்தில் இருந்துகொண்டு செயற்படும் கட்சித் தலைவர் பாராளுமன்றத்தில் ஆண் விபசாரி போல் செயற்படுகிறார். ஆகவே, அந்த ஆண் விபசாரி எம்மை குழப்பிக்கொள்ள கூடாது'' என்று தகாத வார்த்தைகளை சபையில் பேசியுள்ளார்.

இதன்போது உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம்,

''இந்த உறுப்பினருக்குரிய பாராளுமன்ற உறுப்பினருடன் தனிப்பட்ட முரண்பாடுகள் காணப்படலாம். அதை அவர் முறையாக அணுக வேண்டும். அதைவிடுத்து பாராளுமன்றத்துக்கு பொருத்தமற்ற வார்த்தைகளை பிரயோகிப்பது முறையற்றது. பாராளுமன்ற களரியில் பாடசாலை மாணவர்கள் உள்ளார்கள். இவ்வாறான வார்த்தைகளை பிரயோகிப்பது முறையற்றது. சபைக்கு தலைமை தாங்கும் பிரதி சபாநாயகர் இதற்கு இடமளிக்கக் கூடாது'' எனக் கூறியுள்ளார்.

இதற்கு பதிலளித்த சபைக்கு தலைமை தாங்கிய பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ, ''சகல உறுப்பினர்களும் பொறுப்புடன் செயற்பட வேண்டும். அந்த அமைச்சர் என்ன உரையாற்றுவார் என்பது எனக்கு தெரியாது. ஆகவே, சபைக்கு தலைமை தாங்குபவர் மீது மாத்திரம் பொறுப்பை சுமத்த வேண்டாம்'' என்று கூறியுள்ளார்.

இதேவேளை, ''வாய்மொழி கேள்வியின்போது விடயதானத்துக்கு பொறுப்பான அமைச்சர் பதிலளித்துக் கொண்டிருக்கிறார். இடையில் பொருத்தமற்ற வகையில் சாமர சம்பத் எழுந்து பேசுகிறார். சபைக்கு தலைமை தாங்கும் பிரதி சபாநாயகர் அதை இரசித்துக் கொண்டிருக்கின்றீர்கள். நாங்கள் பார்க்க வேண்டியதில்லை. நீங்கள் தான் சபையை முறையாக வழிநடத்த வேண்டும்'' என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க கூறியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவங்ச கூறுகையில், ''பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் ஆண் பாராளுமன்ற உறுப்பினர் என்று குறிப்பிட்டார். 225 பாராளுமன்ற உறுப்பினர்களில் யார் அந்த ஆண் பாராளுமன்ற உறுப்பினர் என்று மக்கள் கேள்வி எழுப்புவார்கள். ஆண் விபசாரி இருப்பாராயின், அதை அவர் வெளிப்படையாகக் குறிப்பிட வேண்டும். பாராளுமன்றத்துக்கு பொருத்தமற்ற வார்த்தைகள் பிரயோகிக்கப்பட்டுள்ளன.

ஆகவே குறைந்தபட்சம் விபசாரி என்ற வார்த்தையையேனும் நீக்கிக் கொள்ளுங்கள்'' எனக் கூறியுள்ளார்.

இந்த விடயம் மிகவும் முக்கியமான ஒன்றாகும். கோடிக்கணக்கில் செலவு செய்து நடக்கும் பாராளுமன்ற அமர்வில் அருவருக்கத்தக்க பேச்சுகள் இடம்பெறும்போது அதனை சுட்டிக்காட்டிய ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமுக்கு நன்றி கூறவேண்டும். பாடசாலை மாணவர்கள் சூழ நிற்கும்போது, பாராளுமன்ற ஒளிபரப்பை ஏராளமானோர் நேரடியாக பார்த்துக்கொண்டிருக்கும் நிலையில் வீதியில் நிற்கும் காவாலிகள் போல பாராளுமன்ற உறுப்பினர்கள் செயற்படக் கூடாது.

இது மட்டுமல்ல, நேற்றுமுன்தினம் மாத்திரம் சபை அமர்வை நடத்த குறைந்தபட்ச உறுப்பினர்கள் 20 பேர் இல்லாத காரணத்தினால் சபை அமர்வுகள் 05 தடவைகள் ஒத்திவைக்கப்பட்டன. பாராளுமன்றத்தில் இடம்பெறும் இப்படியான கேலிப்பேச்சுகளும் சபை அமர்வுகளில் எம்.பிக்கள் கலந்துகொள்ளாமையும் பாராளுமன்றம் என்ற மக்கள் மேடையின் மகத்துவத்தை மழுங்கடிக்கச் செய்துள்ளன. இந்நிலைமை தொடருமானால், மாண்புமிக்க அந்த மன்றம் மீதான நம்பிக்கையை வைத்திருக்கும் மதிப்பை மக்கள் இழக்கும் நிலை ஏற்படலாம்.

ரவூப் ஹக்கீம் எம்.பி. சுட்டிக்காட்டிய அந்த விடயத்தை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தீவிர கவனத்தில் எடுக்க வேண்டும்.

வாயில் வரும் எதையும் பாராளுமன்றத்தில் பேசலாம், அதற்கு அனுமதி இருக்கிறது என்றால் அது நிச்சயம் பாராளுமன்றுக்கு மேன்மையைத் தராது. நாட்டுக்கும் நன்மையைத் தராது. பாராளுமன்ற உறுப்பினர்களாக யாரை, எப்படியானவரை அனுப்பவேண்டும் என்பதை மக்கள் அறிய இதனால் வாய்ப்பு ஏற்படும் என்ற நல்ல செய்தி இதற்குள் இருந்தாலும், இந்த நிலையை தொடரவிடாமல் கடும்போக்கை கடைபிடிக்க வேண்டும் சபாநாயகர். அதுவே மக்களின் எதிர்பார்ப்பு.

# 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை பொது இணக்கப்பாட்டுடன் முன்னெடுப்போம்

## ஜனாதிபதி ரணில் பாராளுமன்றத்தில் தெரிவிப்பு

மாகாண சபைகள் தொடர்பான சட்டங்களை மீளாய்வு செய்து புதிய சட்டங்களை நிறைவேற்றிய பின்னர், பாராளுமன்றம் உடன்படுமானால் மாகாண சபைத் தேர்தல் சட்டத்திருத்தத்துக்கு தயாராக உள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அத்துடன், மாவட்ட விகிதாசார முறையின் கீழ் தேர்தலை நடத்தவும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மாகாண சபைகளுக்கு போட்டியிடும் உரிமையை வழங்கவும் 25% அல்லது கூடுதலான பெண் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கவும் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகள் தொடர்பில் கலந்துரையாடி இணக்கப்பாட்டுக்கு வந்த பின்னர் மாகாண சபைத் தேர்தலை நடத்த நடவடிக்கை எடுப்பதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம் மற்றும் அதிகாரப் பகிர்வு தொடர்பான தனது முன்மொழிவுகளையும் எதிர்காலத் திட்டங்களையும் நேற்று (09) பாராளுமன்றத்தில் முன்வைத்து விசேட உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மத்திய அரசாங்கத்தின் அதிகாரப் பட்டியல், மாகாண சபை அதிகாரப் பட்டியல், ஒருங்கிணைந்த பட்டியல் ஆகியவற்றை மீளாய்வு செய்து தேவையான திருத்தங்களைச் சமர்ப்பிப்பதற்கு பிரதமர் தலைமையில் குழுவொன்றை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அதற்கு பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்துக் கட்சிகளின் ஆதரவும் பெறப்படும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.



அத்தோடு, மாகாண சபைகள் செயற்படும்வரை மாகாண ஆளுநர்களுக்கு ஆலோசனை வழங்கும் ஆலோசனை சபையொன்றை நியமிப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு வருவதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

இந்த நாட்டில் அரசியல் முறையில் இருந்தோ அல்லது அரசியலில் இருந்தோ அகற்ற முடியாத நிரந்தரமான காரணியாக மாகாண சபை மாறியுள்ளதை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, பொதுமக்கள் நம்பிக்கை வைக்கக் கூடிய அவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்கக் கூடிய வினைத்திறனான மற்றும் வீண்விரயமற்ற, ஊழலற்ற மாகாண சபை கட்டமைப்பொன்றை கட்டியெழுப்புவதன் ஊடாக வலுவான முறைமை மாற்றத்தை ஏற்படுத்த வாய்ப்பு ஏற்படும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

13ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் மாகாண சபைகளுக்கு அதிகாரம் வழங்குவதில் பொலிஸ் அதிகாரம் போன்ற உணர்வுபூர்வமான விடயங்களுக்கு முன்னுரிமை அளிப்பது எந்த விதமான இணக்கப்பாட்டுக்கு வருவதற்கு கடினமானதாக அமையலாம் என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, முதலில் ஏனைய அதிகாரங்கள் தொடர்பில் உடன்பாட்டுக்கு வந்து நாட்டின் எதிர்காலத்துக்காக 13ஆவது திருத்தத்தை கட்டம் கட்டமாக எதிர்காலத்தில் செயற்படுத்துவதற்கு அனைவரும் ஒன்றிணைய வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

காணாமல் போனவர்களைக் கண்டறியும் நடவடிக்கையை, காணாமல் போனோர் தொடர்பான அலுவலகம் ஆரம்பித்துள்ளதாகவும் மூன்று மாதங்களுக்குள் பணிகளை நிறைவு செய்யும் நோக்கில் தரவு உள்ளீட்டை துரிதப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, காணாமல் போனவர்களுக்காக சான்றிதழ் வழங்குவதை துரிதப்படுத்த நடவடிக்கை எடுப்பதாகவும் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஆற்றிய முழுமையான உரை:

சபாநாயகர் அவர்களே,

1987ஆம் ஆண்டு அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தின்மூலம் மாகாண சபை முறை அறிமுகப்படுத்தப்பட்டது. எமது நாட்டில் 36 வருடங்களாக மாகாண சபை முறைமை செயற்பட்டு வருகின்றது. எனினும், 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் விதம் தொடர்பில் பல சிக்கல்கள் உள்ளன. அத்துடன் மாகாண சபைகள் தொடர்பிலும் பல பிரச்சினைகள் உள்ளன.

நாம் ஒரு நாடாக முன்னோக்கிச் செல்ல வேண்டுமானால், இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும். எமது நாட்டின் அபிவிருத்திக்கும் எதிர்காலத்துக்கும் ஏற்ற வகையில் 13ஆவது திருத்தம் அமுல்படுத்தப்பட வேண்டும்.

ஆனால், இந்த பாராளுமன்றத்தில் நாம் அனைவரும் வெளிப்படையாகவும் நடுநிலையாகவும் ஆழமாக கலந்துரையாடிய பின்னர் ஒரு உடன்பாட்டுக்கு வந்தால் மட்டுமே இதைச் செய்ய முடியும். அதனால்தான் அண்மையில் சர்வகட்சி மாநாட்டை ஏற்பாடு செய்தோம்.

இந்த மாநாட்டில் பல்வேறு அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். அவர்கள் அனைவருக்கும் நான் நன்றி தெரிவிக்கிறேன்.

அந்த மாநாட்டில் அதிகாரப் பரவலாக்கம் தொடர்பாக எங்களால் முழுமையான உடன்பாட்டை எட்ட முடியவில்லை. அதிகாரப் பரவலாக்கத்துக்கான ஒரு குறிப்பிட்ட தேசிய வேலைத்திட்டம் பற்றி வெளிப்படையான கருத்துகள் எதுவும் அங்கு முன்வைக்கப்படவில்லை. சில அரசியல் கட்சிகள் தங்கள் கருத்துகளை முன்வைக்க தயங்குவதும் விருப்பமில்லாமல் இருப்பதும் தெளிவாகியது. மாநாட்டில் பங்கேற்ற சில அரசியல் கட்சிகள் அவநம்பிக்கையை மனதில் வைத்துக்கொண்டு இதில் பங்கேற்றன. கடந்த காலங்களில் நடந்த சில சர்வகட்சி மாநாடுகளில் அவர்கள் பெற்ற அனுபவம் அதற்குக் காரணமாக இருக்கலாம்.

இனியாவது நாம் இந்த நிலையை மாற்றுவோம். அரசின் அனைத்து செயற்பாடுகளையும் எதிர்ப்பதுதான் எதிர்க்கட்சியின் பங்கு என்று நினைக்கும் மரபிலிருந்து விடுபடுவோம். எதிர்க்கட்சிகளின் கருத்தை பொருட்படுத்தாமல் செயல்படும் வழக்கத்திலிருந்தும் விலகி இருப்போம். நாம் அனைவரும் நம்பிக்கையுடனும் பொறுப்புடனும் செயல்படுகிறோம். நாம் அனைவரும் ஒன்றிணைந்து புதிய பாதையில் முன்னேறினால் மட்டுமே நம் நாட்டை முன்னேற்ற முடியும். அந்த புதிய பாரம்பரியத்தை உருவாக்க நாங்கள் பாடுபடுகிறோம்.

நான் எப்பொழுதும் வலியுறுத்தும் ஒரு விடயத்தை இங்கு மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன். கடந்த காலத்தை கிளறிக் கொண்டிருக்காமல், எதிர்காலத்தைப் பற்றி சிந்திப்போம். உங்களுக்கும் எனக்கும் கசப்பான அனுபவங்கள் உண்டு. அது உண்மை. ஆனால், அவற்றை பற்றி பேசிக்கொண்டிருக்காமல் எதிர்காலத்தைப் பற்றி ஆராய வேண்டும். நாட்டின் எதிர்காலத்தைப் பற்றி சிந்தித்து, நேர்மையான நோக்கத்துடன் ஒன்றிணைந்து பொதுவான முடிவை எடுப்போம்.

13ஆவது திருத்தத்தின் ஊடாக மாகாண சபைகளை அமுல்படுத்துவதில் கடந்த 36 வருடங்களாக நாம் வெற்றி பெற்றுள்ளோமா? தோல்வியடைந்தோமா? அவ்வாறு வெற்றி பெறவோ தோல்வியடையவோ காரணங்கள் என்ன? நாம் இதைப் பற்றி பேசலாம். கலந்துரையாடுவோம். ஆழமாக நோக்குவோம். உலகின் புதிய போக்குகளை ஆராய்வோம்.

நமது பிராந்தியத்தில், இந்தியா மற்றும் சீனா போன்று மேற்கு நாடுகளான அமெரிக்கா மற்றும் கனடா ஆகிய பெரிய நாடுகளும் அதிகாரத்தை பரவலாக்கியுள்ளன. மேலும், பிரித்தானியா, நெதர்லாந்து, ஜப்பான் போன்ற நாடுகளும் அதிகாரத்தை பரவலாக்கியுள்ளன.

சீனாவிலிருந்து ஒரு உதாரணத்தை எடுத்துக் காட்டுகிறேன். சீனாவின் சிறுபான்மையினர் மொத்த மக்கள் தொகையில் 09 சதவீதத்துக்கும் குறைவாகவே உள்ளனர். ஆனால் அவர்கள் இந்த சிறுபான்மையினருக்கு வலயங்கள், கோரளைகள் மற்றும் மாநகரங்கள் போன்ற பல நிர்வாகக் கட்டமைப்புகளில் தன்னாட்சி அதிகாரங்களை வழங்கியுள்ளனர்.

தேசியக் கொள்கையின் கீழ் அதிகாரப் பரவலாக்கல் ஊடாக, உலகின் பல்வேறு நாடுகள் வெற்றி பெற்றுள்ளன. அந்த நாடுகளில் இருந்து படிப்பினை பெறுவோம். அதையெல்லாம் கருத்தில்கொண்டு நமது நாட்டுக்கு மிகவும் பொருத்தமான கட்டமைப்பை அடையாளம் காண்போம்.

சபாநாயகர் அவர்களே,

மாகாண சபைகளுக்காக வருடத்துக்கு சுமார் 550 பில்லியன் ரூபாவை செலவிடுகிறோம். இந்த பணத்துக்கு மாகாண சபைகளினால் நியாயம் நடந்துள்ளதா, இந்தப் பணம் மக்கள் நலனுக்காக பயன்படுத்தப்பட்டதா? நாம் கவனம் செலுத்த வேண்டிய முக்கிய விடயமிது.

இலங்கையில் உள்ள ஒவ்வொருவரும் மாகாண சபையை பராமரிக்க 22,000 ரூபாவை செலவிடுகின்றனர். நான்கு பேர் கொண்ட குடும்பம் ஒரு மாகாண சபையை பராமரிக்க 88,000 ரூபாவை செலவிடுகிறது. அந்த பணத்துக்கு ஏற்ற வகையில் அவர்களுக்கு பலன்கள் கிடைக்கிறதா? பல்வேறு அரசாங்கங்கள், பல நாடுகளுக்கு வழங்கிய வாக்குறுதிகளுக்காக மாகாண சபை முறையை ஒழிக்க முடியாது.

மாகாண சபைகளுக்கும் மத்திய அரசாங்கத்துக்கும் உள்ளூராட்சி மன்றங்களுக்கும் இடையே உள்ள அதிகாரம் குறித்து தனித்தனியாக தெளிவுபடுத்தப்படவில்லை. எனவே, மாகாண சபைக்கும் மத்திய அரசாங்கத்துக்கும் இடையிலான விடயதானங்கள் பொருந்தாமல் இருக்கிறது. பணியாற்றும்போது ஒருவருக்கொருவர் மோதிக் கொள்கிறார்கள். ஒரே பணி இரண்டு இடங்களில் செய்யப்படுகிறது. பணிகள் தாமதமாகின்றன. மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படுவதற்கு பதிலாக வளர்ந்து வருகின்றன.

இவ்வாறான காரணங்களினால், மாகாண சபைகளை வெள்ளை யானைகள் என்று கூறும் நபர்களும் நாட்டில் இருக்கின்றார்கள்.

எவ்வாறாயினும், அந்த அனைத்து குறைபாடுகளுக்கும் பலவீனங்களுக்கும் மத்தியில், மாகாண சபைகளை இலங்கையின் அரசியல் பாதையில் தீர்க்கமான தாக்கத்தை ஏற்படுத்திய கட்டமைப்பு என்று அழைக்கலாம். மாகாண சபைகள் திறமையான அரசியல் தலைவர்களை உருவாக்கும் மேடையாகவும் நிறைவேற்று அதிகாரம் மற்றும் பாராளுமன்றத்துக்கான நுழைவாயிலாகவும் மாறியுள்ளது. கடந்த காலங்களில் மாகாண சபை உறுப்பினர் பதவியில் இருந்து அரசியல் பயணத்தை ஆரம்பித்த பலர் நாட்டின் நிறைவேற்று ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள் மற்றும் ஏனைய பொறுப்பான பதவிகளை வகித்த பல சந்தர்ப்பங்களை நாம் காண முடியும். இன்று இந்த சபையில் அமர்ந்துள்ள அமைச்சர்களில் அநேகர், மாகாண சபை உறுப்பினர் பதவி முதல் முதலமைச்சர் பதவி வரை பல்வேறு பதவிகளை வகித்துள்ளனர்.

மாகாண சபைகள் அறிமுகப்படுத்தப்பட்டபோது, சில அரசியல் கட்சிகள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தன. சில கட்சிகள் ஜனநாயக முறையிலும் சில கட்சிகள் ஜனநாயகத்துக்கு விரோதமாகவும் எதிர்ப்பு தெரிவித்தன. பல உயிர்கள் பலியாகின. நாட்டின் சொத்துகளும் தேசிய வளங்களும் எரிக்கப்பட்டன. அது கடந்த காலம். ஆனால் பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகள் எவையும், மாகாண சபைகளை இல்லாமல் செய்ய வேண்டும் என்று கூறவில்லை. அந்த அனைத்து கட்சிகளின் பிரதிநிதிகளும் மாகாண சபைகளை பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளனர்.

இங்கு இன்னொரு விடயத்தையும் நாம் கவனிக்க வேண்டும். மாகாண சபை அதிகாரப் பகிர்வு, 13ஆவது அரசியலமைப்புத் திருத்தம் இந்த நாட்டின் அதியுயர் சட்டமாகும். அதை நாம் புறக்கணிக்க முடியாது. நிறைவேற்று அதிகாரமும் பாராளுமன்றமும் அதை நடைமுறைப்படுத்த வேண்டும்.

சபாநாயகர் அவர்களே,

13ஆவது திருத்தம் மற்றும் அதிகாரப் பகிர்வு தொடர்பான எனது முன்மொழிவுகளையும் எதிர்காலத் திட்டங்களையும் நான் இந்த சபையில் முன்வைக்கிறேன். அந்த பரிந்துரைகளை ஆழமாக ஆராயுங்கள். உங்கள் யோசனைகளை சமர்ப்பிக்கலாம். அந்தக் கருத்துகள் அனைத்தையும் ஆராய்ந்து, மாகாண சபைகளின் வகிபாகம் மற்றும் அவற்றின் எதிர்காலம் குறித்து இறுதித் தீர்மானத்தை எட்ட வேண்டிய பொறுப்பு முழுவதுமாக இந்த கௌரவ சபையையே சாரும்.

சபாநாயகர் அவர்களே,

முன்னேற்றகரமான ஜனநாயக நாடுகளில் புதிய போக்கு என்ன? மையப்படுத்தப்பட்ட நிர்வாகத்துக்கு பதிலாக பரவலாக்கப்பட்ட நிர்வாகத்தை உருவாக்குதல். அரசியல், பொருளாதார, சமூக மற்றும் கலாசார விடயங்கள் மக்களுக்கு நெருக்கமாக இருக்கும் வகையில் அதிகாரப் பரவலாக்கம். இதற்காக, உலகின் பல்வேறு நாடுகளில் வெவ்வேறு முறைகள் பயன்படுத்தப்படுகின்றன. அதிகாரப் பரவலாக்கம் என்பது நேரடி ஜனநாயகத்தை அணுகுவதற்கான ஒரு வழியாகக் கருதப்படுகிறது.

அனைத்து மக்களும் ஒன்றுகூடி முடிவெடுக்கும் நேரடி ஜனநாயகத்துக்குச் செல்லும் எந்த ஆட்சி முறையாலும் இயலாது. ஆனால் அரசியல், பொருளாதார மற்றும் சமூக செயற்பாட்டில் மக்களின் பங்கேற்பையும் விருப்பத்தையும் வெளிப்படுத்தும் வகையில் ஒரு நிறுவன கட்டமைப்பை உருவாக்க முடியும். மாகாண சபை முறைமை என்பது அதிகாரத்தை மக்களிடம் கொண்டு செல்லும் கட்டமைப்பாகும்.

அதுமட்டுமல்லாமல், அதிகாரத்தை மக்களிடம் கொண்டு செல்வதற்கான பல வழிமுறைகளை அண்மைக்காலமாக ஆரம்பித்துள்ளோம். துறைசார் குழுக்களை பலப்படுத்தி, அதில் இளைஞர்களை இந்த நோக்கத்துக்காகவே இணைத்துக் கொண்டோம். மேலும், அடிமட்ட அளவில் மக்கள் ஆட்சியில் பங்கெடுக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் மக்கள் சபைகளை நிறுவுவதற்கு நாம் பணியாற்றி வருகிறோம். மக்கள் சபை செயலகத்தை ஆரம்பித்தோம். மாதிரி சட்டசபைகள் அமைக்கப்பட்ட பின்னர், சட்டசபை சட்டம் கொண்டு வர நடவடிக்கை எடுப்போம்.

இந்தப் பின்னணியில் மாகாண சபைகள் ஊடாக மக்களுக்கு அதிக அதிகாரத்தை கொண்டு செல்லும் வழிமுறைகளையும் திட்டங்களையும் தயாரிக்க வேண்டும் என நான் கருதுகின்றேன். அப்போதுதான் தேசிய ஒருமைப்பாட்டைப் பாதுகாக்கும் நிறுவனமாக மாகாண சபைகளைப் பயன்படுத்த முடியும்.

சபாநாயகர் அவர்களே,

கடந்த சில வருடங்களாக பாராளுமன்றத்தின் பல்வேறு குழுக்கள், மாகாண சபைகள் மற்றும் அவற்றின் எதிர்காலம் குறித்து ஆழமாக பரிசீலிக்கப்பட்ட பல ஆவணங்களை வெளியிட்டுள்ளன.

(05ஆம் பக்கம் பார்க்க)

## நக்கல் நமசிவாயம்




## இன்றைய நாளில்...

- 1802 – திருகோணமலையில் தடுப்பூசி ஏற்றும் இயக்கம் ஆரம்பமானது.
- 1948 – ஜவஹர்லால் நேரு இந்திய அணுசக்திப் பேரவையைத் துவக்கி வைத்தார்.
- 1966 – கனடா, ஒட்டாவா நகரில் எரோன் வீதிப் பாலம் உடைந்ததில் ஒன்பது தொழிலாளிகள் உயிரிழந்தனர்.
- 1990 – மகெலன் விண்கலம் வெள்ளிக் கோளை அடைந்தது.
- 2006 – திருகோணமலையில் சேருவிலை பகுதியில் இலங்கை இராணுவம் தொடர்ச்சியாகக் குண்டுகள் வீசியதில் 50 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

## (4ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதில் ஒன்று எனது தலைமையிலான இலங்கை அரசியலமைப்பு பேரவையின் வழிநடத்தல் குழுவால் 2017 செப்டெம்பர் 21 ஆம் திகதி வெளியிடப்பட்ட இடைக்கால அறிக்கையாகும். இடைக்கால அறிக்கையின் பரிந்துரைகளுக்கு பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் அனைத்துக் கட்சிகளும் இணக்கம் தெரிவித்துள்ளன.

அரசியலமைப்பின் 3, 4 மற்றும் 5 ஆகிய பிரிவுகளில் திருத்தம் செய்வது குறித்த பரிந்துரைகள் இடைக்கால அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தன.

இந்த உத்தேச அரசியலமைப்புத் திருத்தங்களை நாங்கள் பாராளுமன்றத்தில் முன்வைக்கிறோம்.

பின்வரும் விடயங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

1. மாகாண பட்டியலில் உள்ள விடயங்கள் தொடர்பான தேசிய கொள்கைகளை வகுப்பதில் மாகாண சபைகளின் பங்களிப்பைப் பெறுதல்.

2. மாகாண பட்டியலில் உள்ள விடயங்கள் தொடர்பான தேசிய கொள்கைகளை உருவாக்குவதன் மூலம் மத்திய அரசாங்கத்திற்கு பரவலாக்கப்பட்ட அதிகாரங்களை கையேற்பது அல்லது மாகாண சபையால் செயற்படுத்தப்படும் நிறைவேற்று மற்றும் நிர்வாக அதிகாரங்களில் எவ்வித பாதிப்பும் ஏற்படாமல் இருப்பதை உறுதி செய்வது.

3. மேற்படி பரவலாக்கப்பட்ட விடயத்தை நடைமுறைப்படுத்துவதற்கான நிறைவேற்று மற்றும் நிர்வாக அதிகாரங்கள் மாகாண சபைகளிடமே இருக்கும்.

**சபாநாயகர் அவர்களே,**

இடைக்கால அறிக்கை குறித்து கருத்து தெரிவித்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, தமிழர் விடுதலைக் கூட்டணி, ஜாதிக ஹெல உறுமய, ஒன்றிணைந்த எதிர்க்கட்சி, அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழ் முற்போக்கு கூட்டணி ஆகிய கட்சிகளும் பாராளுமன்ற உறுப்பினர்களான டக்ளஸ் தேவானந்தா மற்றும் ஜனாதிபதியின் சட்டத்தரணி ஜயம்பதி விக்கிரமரத்ன ஆகியோர் ஆவணங்களை சமர்ப்பித்தனர். அதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

பாராளுமன்றத்திற்கும் மாகாண சபைகளுக்குமிடையிலான உறவுகள் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை மற்றும் மத்திய சுற்றயக் கூறு தொடர்புகள் பற்றிய உபகுழுவின் அறிக்கை என்பன குறித்தும் கவனத்திற் கொள்ளவேண்டும்.

இந்த அனைத்து ஆவணங்களின் ஊடாகவும் மாகாண சபை முறைமை எமது ஆட்சிக் கட்டமைப்பில் இருந்து அகற்றப்பட முடியாத ஒரு நிறுவன கட்டமைப்பாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இனப்பிரச்சினைக்கான தீர்வாகவோ அல்லது அதிகாரப் பரவலாக்கல் அலகாகவோ மாகாண சபைகளை ஏற்காத மக்கள் விடுதலை முன்னணியும் ஜாதிக்க ஹெல உறுமயவும் கூட மாகாண சபை முறைமையில் திருத்தப்பட வேண்டிய விடயங்களும் திருத்தப்படக்கூடாத விடயங்களும் இருப்பதை ஒப்புக்கொண்டுள்ளன.

இவையனைத்தின் ஊடாகவும் மாகாண சபையானது இலங்கையின் ஆட்சி முறையில் இருந்தும் அரசியலில் இருந்தும் அகற்ற முடியாத ஒரு நிலையான காரணியாக மாறியுள்ளது என்பது மீண்டும் மீண்டும் உறுதிப்படுத்தப்படுகிறது.

**சபாநாயகர் அவர்களே,**

அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வை எட்ட முடிந்தால், தேசிய அடையாளத்தைப் பாதுகாத்து ஒரே தேசமாக எழுச்சி பெறவும், நாட்டின் அதிகாரத்தை மக்களிடம் நெருங்கிச் செல்லும் வகையில் பரவலாக்குவதற்கும் வாய்ப்பு கிடைக்கும். மாகாண சபை முறைமை, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மட்டுமன்றி, ஒன்பது மாகாணங்களிலும் நிறுவப்பட்டன.

மாகாண சபைகளை சரியான பாதையில் வழிநடத்துவதன் மூலம் தேசிய ஒருமைப்பாடு பாதுகாக்கப்படுகிறது. மறுபுறம், இது மிகவும் திறமையான மற்றும் அதிக சேவை வழங்கும் நிறுவனக் கட்டமைப்பாக உறுதிப்படுத்த முடியும். பொதுமக்களுக்கு நெருக்கமான வகையில் அதிகாரப் பரவலாக்கத்திற்கு வாய்ப்பு ஏற்படும். எனவே, மாகாண சபை முறைமையை பொதுமக்களுக்கு ஏற்ற, பொதுமக்களின் தேவைகளை நிறைவேற்றும், நாட்டின் அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்யும் நிறுவனமாக மேம்படுத்துவதே எமது முதன்மையான நோக்கமாக இருக்க வேண்டும்.

இதற்குத் தேவையான பின்னணியை உருவாக்கும் வகையில் பல சட்டமூலங்களை பாராளுமன்றத்தில் முன்வைக்கவும் பல புதிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் நான் முன்மொழிகிறேன்.

1. பிரதேச செயலாளர்கள் நியமனம் -

2. கல்வி தொடர்பான சேவைகளை நடைமுறைப்படுத்தத் தேவையான அதிகாரத்தை மாகாண சபைக்கு வழங்குதல்-

மாகாண சபை பட்டியல் அட்டவணை 3, உப ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பாடசாலைக் கல்வி தொடர்பான அனைத்து அதிகாரங்களையும் செயற்படுத்துதல்-

3. தொழில் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி நடவடிக்கைகள் தொடர்பான சேவைகளுக்காக மாகாண மட்டத்தில் சபைகளை நிறுவுதல்-

4. பல்கலைக்கழகங்களை நிறுவுவதற்கு மாகாண சபைகளுக்கு அதிகாரமளித்தல்-

5. விவசாயப் புத்தாக்கம் மற்றும் கீழ் மட்டத்திலான அனைத்து விவசாய சேவைகளையும் வழங்க மாகாண சபைகளுக்கு அதிகாரமளித்தல் -

6. மாகாண சுற்றுலா மேம்பாட்டு சபைகளை நிறுவுதல் -

7. தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கைத்தொழில்கள் தொடர்பான வரையறையை ரூ. 4 மில்லியனில் இருந்து ரூ. 250 மில்லியனாக உயர்த்த கைத்தொழில்கள் சட்டத்தில் திருத்தங்களைச் சேர்த்தல் -

இந்தப் பாராளுமன்றம் உடன்படுமாக இருந்தால், இந்த எல்லையை ரூ. 500 மில்லியனாக உயர்த்தத் தயாராக உள்ளோம்.

8. மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட சில பணிகள் இன்னமும் மத்திய அரசாங்கத்தின் கீழ் மேற்கொள்ளப்படுவதால் அந்தத் தவறைத் திருத்துதல்-

9. 13ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின்படி மாவட்ட அபிவிருத்தி சபைகளை நிறுவுதல் -

மத்திய அரசாங்கத்தின் தேசிய கொள்கைகளுக்கு அமைவாக ஒவ்வொரு மாகாண சபைகளும் மூன்று வருட அபிவிருத்தித் திட்டத்தைத் தயாரித்தல். மத்திய அரசின் அபிவிருத்தித் திட்டங்களும் அந்தந்த அதிகார எல்லைகளுக்கு ஏற்ற வகையில் இந்தத் திட்டத்திற்குள் உள்வாங்க வேண்டும்.

இந்த மூன்றாண்டு திட்டத்தை மாவட்ட அபிவிருத்தி சபைகள் ஊடாக நடைமுறைப்படுத்துதல் மற்றும் அதனை நடைமுறைப்படுத்துவதற்கான பொறுப்பை மாகாண சபைகளுக்கு வழங்குதல்.

ஒவ்வொரு மாவட்டத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் இப்பணியில் இணைந்து செயற்படக்கூடிய சட்டரீதியான சூழலை தயார்ப்படுத்துதல்.

**சபாநாயகர் அவர்களே!**

தற்போது அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மத்திய அரசாங்கத்தின் அதிகாரப் பட்டியல், மாகாண சபை அதிகாரப் பட்டியல், ஒருங்கிணைந்த பட்டியல் ஆகியவற்றை மீளாய்வு செய்து, தேவையான திருத்தங்களைச் சமர்ப்பிக்க பிரதமர் தலைமையில் குழுவொன்றை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறோம். இதற்காக பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்து கட்சிகளின் ஆதரவும் பெறப்படும்.

1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாணசபைச் சட்டத்தில் மாகாண சபை அமைச்சரின் பொறுப்புகள், மாகாண அமைச்சு செயலாளரின் பொறுப்புகள் மற்றும் ஏனைய அதிகாரிகளின் பொறுப்புகள் குறித்து குறிப்பாக, வரையறுக்கப்படவில்லை. அதன் காரணமாக சில தவறான புரிதல்களும் பிரச்சினைகளும் குழப்பங்களும் ஏற்படுகின்றன. எனவே, அவர்களின் அதிகாரங்கள் குறிப்பிடப்படும் வகையில் மாகாண சபைச் சட்டம் திருத்தப்பட வேண்டும்.

**சபாநாயகர் அவர்களே,**

மாகாண சபைகள் தொடர்பான இந்தச் சட்டங்களை திருத்தியமைத்து புதிய சட்டங்களை நிறைவேற்றிய பின்னர் பாராளுமன்றம் சம்மதிக்கும் பட்சத்தில் மாகாண சபைத் தேர்தல் சட்டத்தில் திருத்தம் செய்வதற்கு தயாராக உள்ளோம்.

தற்போது இது தொடர்பாக மூன்று முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

1. மாவட்ட விகிதாசார முறையின் கீழ் தேர்தல் நடத்துதல் -

2. மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் சந்தர்ப்பத்தை பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் வழங்குதல் -

3. பெண்களின் பிரதிநிதித்துவத்தை 25% அல்லது அதற்கும் அதிகமாக உயர்த்துதல்.

இவ்விடயம் தொடர்பில் கலந்துரையாடி இணக்கப்பாட்டுக்கு வருவதற்கும் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கும் நடவடிக்கை எடுப்போம்.

மாகாண சபைகள் செயற்படும் வரை மாகாண ஆளுநர்களுக்கு ஆலோசனை வழங்குவதற்கு ஆலோசனைச் சபையொன்றை நியமிப்பதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

ஆலோசனைக் குழுவின் உறுப்பினர்களாக மாகாண மேற்பார்வைக் குழுத் தலைவர் அல்லது பிரதானிகள் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர் மற்றும் மாகாணத்தில் உள்ள அரசியல் கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் பாராளுமன்ற உறுப்பினர்கள் நியமிக்கப்படலாம்.

மேலும், சட்டம் இயற்ற மற்றொரு குழுவை நியமிக்க வேண்டும் என்று பரிந்துரைக்கிறோம். ஆலோசனைக் குழுவின் அனுமதியைப் பெற்ற பிறகு வரைபு சட்டங்களை சட்டமாக்குவதற்கு வாய்ப்பு ஏற்படும்.

ஆளுநரும் பெயரிடப்படும் பாராளுமன்ற உறுப்பினரும் இந்த ஆலோசனைச் சபைக்கு இணைத்தலைவராக இருக்க வேண்டும். நிறைவேற்று அதிகாரம் தொடர்பான விடயங்கள் ஆராயப்படும் போது ஆளுநர் தலைமை தாங்குவார். சட்டவாக்க விவகாரங்கள் ஆராயப்படும் போது பாராளுமன்ற உறுப்பினர் தலைமை தாங்குவார்.

தற்போது 45 மாகாண சபை அமைச்சுகள் செயற்படுகின்றன. இந்த அமைச்சுகளுக்கு கண்காணிப்புக் குழுக்களை நியமித்து, வேறு பொறுப்புகள் வழங்கப்படாத பாராளுமன்ற உறுப்பினர்களை தலைவர்களாக நியமிக்கலாம்.

**சபாநாயகர் அவர்களே,**

13 ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ், மாகாண சபைகளுக்கு அதிகாரம் வழங்குவதில் பொலிஸ் அதிகாரங்கள் மிகவும் உணர்வுபூர்வமான விடயமாக மாறியுள்ளது. எனவே, ஏனைய அதிகாரங்கள் தொடர்பில் முதலில் நாம் உடன்பாட்டிற்கு வருவது மிகவும் நடைமுறைச்சாத்தியமானதாக இருக்கும் என்று கருதுகிறேன்.நாம் கட்டம் கட்டமாக இதனைத் தொடரலாம். உணர்வுபூர்வமான விடயங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டால் எந்த ஒருமித்த கருத்தையும் அடைவது கடினமாக இருக்கலாம். நாம் இறுதியில் இருந்து தொடங்காமல் ஆரம்பத்திலிருந்து தொடங்குவோம்.

எனவே, முதலில் ஏனைய அதிகாரங்களை பரவலாக்குவது பற்றிப் பேசி பொதுவான உடன்பாட்டை எட்டுவோம். அதிகாரப் பரவலாக்கம் தொடர்பான தென் பகுதி முதலமைச்சர்களின் அறிக்கையையும் நாம் அடிப்படையாக எடுத்துக் கொள்ளலாம்.

அனைத்து விடயங்களையும் பொது உடன்படிக்கையுடன் செய்வோம். நாட்டின் எதிர்காலத்திற்காக ஒன்றிணைந்து பொதுவான முடிவுகளை எடுக்கும் பலமும் - புத்தியும் இந்த பாராளுமன்றத்திற்கு இருக்கிறது என்பதை சுட்டிக்காட்டுவோம்.

**பயங்கரவாதத்திற்கு எதிரான சட்டம்**

இந்தச் சட்டமூலத்தில் மேற்கொள்ள வேண்டிய திருத்தங்கள் தொடர்பிலான யோசனைகள் குறித்து கலந்தாலோசித்து இணக்கப்பாடுகளை எட்டிய பின்னர், அமைச்சரவை அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படவுள்ளது. உரிய நடவடிக்கைகளின் பின்னர் சட்டமூலம் வர்த்தமானியில் அறிவிக்கப்படும்.

**உண்மையைக் கண்டறிவதற்கான பொறிமுறை மற்றும் சட்டமூலம்**

உண்மையைக் கண்டறியும் பொறிமுறைக்கான இடைக்காலச் செயலகத்திற்கு பணிப்பாளர் நாயகம் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். சட்டம் மற்றும் கொள்கை, மக்கள் தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பம் ஆகியவற்றை உள்ளடக்கிய மூன்று பிரிவுகள் நிறுவப்பட்டுள்ளன. இது தொடர்பிலான சட்டம் தயாரிக்கப்பட்ட பின்னர் உரிய செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படும். குறிப்பாக, பங்குதாரர்களுக்கான ஆலோசனைகள், வழிகாட்டல்கள் மற்றும் கொள்கை தயாரிப்புக்கான செயலகத்தை நடைமுறைப்படுத்தவதற்கான பிரதம நிறைவேற்று அதிகாரிகள் பதவிகளுக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

**தேசிய சகவாழ்வு மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகம் (ONUR) சட்டமூலம்**

ONUR சட்ட வரைபு அரசியலமைப்பிற்கு ஏற்புடையதா என்பதை அறிய சட்டமா அதிபரிடம் சமர்ப்பிக்கப்பட்டு பின்னர் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். மேலும், ONUR இனால் தயாரிக்கப்பட்ட நல்லிணக்கத்திற்கான தேசிய செயற்றிட்டம் எதிர்வரும் காலங்களில் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும்.

**நட்ட ஈட்டுக்கான அலுவலகம்**

யுத்தத்தில் காணாமல் போன வடக்கு, கிழக்கு பகுதிகளைச் சேர்ந்த 203 பேருக்கு ஜூலை 2023 ஆம் ஆண்டு வரை 40.6 மில்லியன் வழங்கப்பட்டுள்ளதோடு இந்தச் செயல்முறை தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகிறது.

**காணாமல் போனோர் தொடர்பான அலுவலகம் (OMP)**

OMP காணாமல் போனவர்கள் தொடர்பிலான தேடுதல்களை ஆரம்பித்துள்ளது. மூன்று மாதங்களுக்குள் தரவு உள்ளீடு செயற்பாடுகளை நிறைவு செய்ய எதிர்பார்க்கப்படுகிறது. அதேபோல், காணமல் போனது தொடர்பில் சான்றிதழ்களை வழங்கும் பணிகளும் துரிதப்படுத்தப்பட்டு வருகின்றன. OMP மற்றும் சட்டமா அதிபர் திணைக்கள கொள்கைகளுக்கமைவாக வழக்குகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில், முன்னைய ஆணைக்குழுக்கள் மற்றும் OMP க்கு கிடைக்கும் முறைப்பாடுகளை திறம்பட முகாமைத்துவம் செய்வதற்கான வழிக்காட்டல்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அதற்காக அமைச்சரவை அனுமதியைப் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், OMP ஆனது 24 புதிய சபைகளை உள்ளடக்கியிருக்கும் என்பதோடு, ஒகஸ்ட்டில் அதன் பணிகளை ஆரம்பிக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது. பரிந்துரை சேவைகளுக்காக மாவட்டத்திற்கு ஓர் உதவிக் குழு வீதம் நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது.

நட்ட ஈடு மற்றும் காணாமல் போனோர் அலுவலுடன் தொடர்புடைய பிரச்சினைகளை முன்வைப்பதற்கான முழுமையான சுதந்திரம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. OMP தற்போதும் தமது வேலைத்திட்டத்திற்கு அமைவாக நேர வரைபைத் தயாரித்துள்ளது.

**எல்.ரீ.ரீ.ஈ செயற்பாடுகளுடன் தொடர்புடையவர்களுக்கு பொது மன்னிப்பு**

விளக்கமறியல் இடப்பட்டவர்கள் 21, மரண தண்டனை விதிக்கப்பட்ட மூவர்,சிறைத்தண்டனைக் கைதிகள் 22 பேர் உள்ளிட்ட மூன்று பிரிவுகளின் கீழ் கைதிகள் உள்ளனர். அரசியலமைப்பின் 34(1) சரத்துக்கமைய இறுதி இரண்டு பிரிவுகளிலுமுள்ள கைதிகளுக்கு மாத்திரம் பொது மன்னிப்பு வழங்குதல் தொடர்பில் ஆராயப்படவுள்ளது. அந்தப் பரிந்துரைகளை கருத்திற் கொண்டு எஞ்சியுள்ள சிறைத் தண்டனைகளை நிறைவு செய்து, 11 சிறைக் கைதிகளை விடுவிப்பதற்காக நீதி மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சருக்கு ஜனாதிபதியின் அனுமதி கிடைத்துள்ளது.

**தேசிய காணி ஆணைக்குழுவை நிறுவுதல்**

தேசிய காணி ஆணைக்குழு, (NLC) மற்றும் தேசிய காணிக் கொள்கையை விரைவாக நிறுவுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. கைவிடப்பட்ட அரச காணிகளை பிறருக்கு வழங்குவது தொடர்பாக தேசிய காணி ஆணைக்குழு கொள்கை வரைபை (NLC) தயாரித்துள்ளது. அதுகுறித்த மேலதிக ஆய்வுகளையும் முன்னெடுத்து வருகிறது. காணி ஆணைக்குழுச் சட்டமொன்றையும் செப்டெம்பர் மாதத்துக்குள் (NLC) வழிகாட்டலுக்காக நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது. 9 மாகாணப் பிரதிநிதிகள் மற்றும் அரசாங்க அதிகாரிகள் 12 பேரை உள்ளடக்கியதாக (NLC)யின் கட்டமைப்பை மாற்றியமைக்கவும் எதிர்பார்க்கப்படவுள்ளது.

**காணிப் பிரச்சினை தொடர்பிலான யோசனைகள்**

இதேவேளை, வடக்கு, கிழக்கின் ஒவ்வொரு மாவட்டத்திலும் வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் உள்ள காணிகள் தொடர்பில் மேற்படி காணிப் பயன்பாட்டு வரைபடங்கள், தற்போதைய காணிப் பாவனை முறைகள் மற்றும் பிரதேச செயலாளர்களின் முன்மொழிவுகளை மையப்படுத்தி தரவுக் கட்டமைப்பொன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

மாவட்டங்களுக்கு உரிய தகவல்களை பிரதேச செயலகங்கள் ஊடாக பெற்றுக்கொள்வதற்காக பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு 2 மாத கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

முன்னைய தடை உத்தரவை நீக்கிக்கொண்ட பின்னர் பிரதேச செயலாளர் அலுவலக மட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள யோசனைகள் அமைச்சுக் குழுக்களினால் ஆராயப்படவுள்ளது. ஜனாதிபதி செயலாளரின் தலைமையிலான குழுவொன்றினால் காணி தொடர்பிலான பிரச்சினைகள் ஆராயப்படும்.

**தேசிய தொல்பொருள் திட்டமிடல்**

நாடு முழுவதிலும் தேசிய திட்டத்தின் கீழ் காணி எல்லை நிர்ணயம் மற்றும் அகழ்வாராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென தொல்பொருள் திணைக்களத்திற்கும் மத்திய கலாசார நிதியத்திற்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. அகழ்வாராய்ச்சி நடவடிக்கைகள், இடங்களை அடையாளம் காணுதல் மற்றும் அவற்றை எவ்வாறு நடைமுறைப்படுத்த வேண்டும் என்பனவற்றை முதன்மைப்படுத்தி திட்டமிடுமாறு தொல்பொருள் பணிப்பாளர் நாயகத்திற்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. பாதுகாக்கப்பட வேண்டிய பகுதிகளை அடையாளம் காண்பதற்கு அல்லது முறையாக கையகப்படுத்துவதற்கு தேவையான செயற்றிட்டம் தொல்பொருள் திணைக்களத்தினால் முன்மொழியப்படும்.

தென்னிந்தியாவின் புனர்வாழ்வு முகாம்களில் வாழும் இலங்கையர்களுக்கு அனைத்து நாடுகளுக்குமான கடவுச் சீட்டுகளை பெற்றுக்கொடுப்பதற்கான வரைபடம்.

தென்னிந்திய புனர்வாழ்வு முகாம்களில் வசிக்கும் 2,678 இலங்கையர்களின் பட்டியல் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்திற்கு கிடைத்துள்ளது. மேற்கூறிய எண்ணிக்கையில் இலங்கையின் பிறப்புச் சான்றிதழ் மற்றும் தேசிய அடையாள அட்டை இரண்டையும் வைத்திருப்பவர்களுக்கு அனைத்து நாடுகளுமான கடவுச்சீட்டுகளை வழங்க முடியும். அந்த ஆவணங்களை வழங்குவதற்கான கால அவகாசம் இரண்டு முதல் நான்கு வாரங்களாகும். தென்னிந்தியாவில் புனர்வாழ்வு முகாம்களில் வசிக்கும் இலங்கையர்களுக்கு அனைத்து நாடுகளுக்குமான கடவுச்சீட்டு வழங்குவது குறித்து பரிசீலிப்பதற்கான தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**வடக்கு, கிழக்கு மாகாணங்களின் உள்ளூரில் இடம்பெயர்ந்தவர்களை மீள்குடியமர்த்தல்**

வடக்கு, கிழக்கில் இடம்பெயர்ந்த குடும்பங்களை மீள் குடியமர்த்தும் பணிகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன. வடக்கு மாகாணத்தில் இடம்பெயர்ந்தவர்களில் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி பகுதிகளைச் சேர்ந்தவர்களை மாத்திரமே குடியமர்த்த வேண்டியுள்ளது. யாழ்ப்பாணத்தில் 15 நலன்புரி நிலையங்கள் உள்ளன. அவற்றில் 136 குடும்பங்கள் உள்ளன. அத்தோடு நண்பர்கள் மற்றும் உறவினர்களுடன் வசிக்கும் 2,175 குடும்பங்கள் உள்ளன. கிளிநொச்சி நலன்புரி நிலையங்களில் இடம்பெயர்ந்த குடும்பங்கள் இல்லை. எவ்வாறாயினும், யாழ். குடாநாட்டில் 182 குடும்பங்கள் அவர்களது நண்பர்கள் மற்றும் உறவினர்களுடன் வசிப்பதோடு, பச்சிலைப்பள்ளி பிரிவில் 177 குடும்பங்கள் உள்ளன.

கிழக்கு மாகாணத்தின், திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களில் மாத்திரமே இடம்பெயர்ந்தவர்கள் வசிக்கின்ற நிலையில், அவர்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களுடன் வசிக்கின்றனர். அங்கு நலன்புரி நிலையங்கள் எவையும் கிடையாது. இடம்பெயர்ந்தவர்களை மீண்டும் குடியமர்த்துவது தொடர்பில் விசேட அவதானம் செலுத்த வேண்டிய அதேநேரம், அதற்காக தனியார் பகுதிகளை பொதுப் பயன்பாட்டிற்கு அனுமதிக்க வேண்டிய அவசியம் ஏற்படும். அந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான முறைமையொன்றைத் தயாரித்து பிரச்சினைக்கு உடனடித் தீர்வுகளை வழங்குமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

**முப்படைகளினால் விடுவிக்கப்படவுள்ள காணிகள் - வடக்கு மாகாணம்**

யாழ்ப்பாணத்தின் முழுமையான நிலப்பகுதி 253,283 ஏக்கர்களாக காணப்படுவதோடு, 2009 ஆம் ஆண்டில் பாதுகாப்புப் படையினரால் 26,812 ஏக்கர் நிலப்பரப்பு கையகப்படுத்தப்பட்டிருந்தது. 2009 இல் படையினரால் கையகப்படுத்தப்பட்டிருந்த காணிகளில் 90% - 92% வரையிலான காணிகள் ஏற்கனவே விடுவிக்கப்பட்டுள்ளன.அதற்கமைய 817 ஏக்கர் அரச காணி, 22,101 தனியார் காணி உள்ளடங்கலாக 22,919 ஏக்கர் காணி விடுவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புப் படையினர் மற்றும் பொலிஸாரினால் கையகப்படுத்தப்பட்டுள்ள நிலையில் காணப்படும் காணியின் அளவு 3754 ஏக்கராகும் என்பதோடு, அவற்றில் 862 - 2892 ஏக்கர் அரச மற்றும் தனியார் காணிகள் உள்ளன.

**கீழ்வரும் பிரிவுகள் ஊடாக காணிகளை விடுவிக்க எதிர்பார்க்கப்படுகிறது:**

(i) இராணுவம் மற்றும் கடற்படையினரால் அடையாளம் காணப்பட்டுள்ள யாழ்ப்பாணத்தில் 1.4 ஏக்கர், கிளிநொச்சியில் 13 ஏக்கர் மற்றும் முல்லைத்தீவில் 20 ஏக்கர் காணிகள் உடனடியாக விடுவிக்கப்படவுள்ளன.

(ii) யாழ்ப்பாணத்தில் 3 - 6 மாதங்களுக்குள் விடுவிக்கப்பட வேண்டிய காணிகள் தொடர்பில் இராணுவத்தினால் அடையாளங் காணப்பட்டுள்ளது.

(iii) பலாலி இராணுவ முகாமில் இருந்து சுமார் 290 ஏக்கர் காணி விவசாயம் மற்றும் பருவகால பயிர்கள் உள்ளிட்ட குறிப்பிட்ட நோக்கங்களுக்காக தற்காலிகமாக விடுவிக்கப்படவுள்ளது.

(iv) இராணுவத் தளபதியின் பணிப்புரையின் பேரில் வடமாகாணத்தில் தற்போதும் விடுவிக்க முடியாத காணிகளை விடுவிப்பது தொடர்பிலான சாத்தியக்கூறுகள் தொடர்பில் ஆராயப்படவுள்ளது.

இது வடக்கு மக்களிடத்தில் கருத்து வேறுபாடுகளை தோற்றுவிக்கும் விவகாரம் என்பதை நான் அறிவேன். அந்த வகையில் மேற்படி மாகாணத்தில் படையினரால் கையகப்படுத்தப்பட்ட மக்கள் காணிகளை முடிந்த வரையில் விடுப்பதே எனது நோக்கமாகும்.

**வடக்கு,கிழக்கு அபிவிருத்தித் திட்டம்.**

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை அபிவிருத்தி செய்வதற்கு விரிவான மற்றும் நடைமுறைத் திட்டங்களை உருவாக்குவது அவசியமாகும். இந்தத் துறையில் கூட்டு முயற்சிகளை எளிதாக்க இந்தியாவுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொண்டு சூரிய மற்றும் காற்றாலை சக்திக்கான முதலீடு மற்றும் ஏற்றுமதிக்கு சாதகமான சூழலை உருவாக்கும் நடவடிக்கைகளை ஏற்கனவே ஆரம்பித்துள்ளோம்.

இலங்கையின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையில் முதலீடு செய்ய அதானி குழுமம் முன்வந்துள்ளது. கூட்டு அணுகுமுறை இந்தப் பகுதியில் குறிப்பிடத்தக்க வளர்ச்சிக்கு வழிவகுக்கும் என்று நான் நம்புகிறேன். கூடுதலாக, "வடக்கிற்கு நீர்" திட்டம் பல்வேறு நீர்வளங்களின் வளர்ச்சியைக் கொண்டுள்ளது. இந்த நிலையில், பூநகரி ஏரி மற்றும் மல்வத்து ஓயாவின் நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்க அரசாங்கம் ஏற்கனவே அனுமதி வழங்கியுள்ளது. யாழ்ப்பாணக் குளத்திற்கு நன்னீர் கொண்டு வருவதற்கும் இரணைமடு குளத்தின் கொள்ளளவை அதிகரிப்பதற்கும் யாழ்ப்பாணத்திற்கான கங்கை தொடர்பில் தற்போது கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன. சிறிய ஏரிகளைப் புதுப்பிக்கும் திட்டத்தை நிறைவேற்றுவது முக்கியம். இத்திட்டம் வடமாகாணத்தில் விவசாயம் மற்றும் சூரிய சக்தி துறைகளின் வளர்ச்சிக்கு வழிவகுக்கும். வடக்கில் வான்வழி மற்றும் கடல்வழி தொடர்பாடல்களை மேம்படுத்துவதும் அவசியம். காங்கேசன்துறை துறைமுகம், வவுனியா மற்றும் பலாலி விமான நிலையங்களின் அபிவிருத்தி மற்றும் வடக்கிலிருந்து இந்தியாவின் தெற்கை இணைக்கும் படகுச் சேவைகளுக்கான வசதிகளும் உருவாகும்.

காங்கேசன்துறை துறைமுகம், பரந்தன் மற்றும் மாங்குளம் ஆகிய இடங்களில் முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்கள் அமைக்கப்படுகின்றன. மன்னார் கோட்டை, காங்கேசன்துறை துறைமுகம், தீவுகள் மற்றும் வடமராச்சி ஆகிய பகுதிகளை சுற்றி சுற்றுலாப் படகுச் சவாரித் திட்டத்தின் மூலம் யாழ்ப்பாணம் மற்றும் மன்னாரில் உள்ள சுற்றுலா தலங்களை மேம்படுத்தவும் திட்டமிட்டுள்ளோம். விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டத்தின் கீழ் வன்னியில் தென்னைச் செய்கையை ஊக்குவிக்க முயற்சிக்கின்றோம். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகம் உயர் கல்வியில் சிறந்து விளங்கும் இடமாக இருப்பதால், அது ஒரு பல்கலைக்கழக நகரமாக வளர்ச்சியடைவதற்கான சாத்தியம் உள்ளது. அதற்கும் மேலதிகமாக SLIIT இன் உதவியுடன் காங்கேசன்துறையில் மற்றுமொரு வளாகத்தை நிறுவுவதற்கான காணியும் அடையாளம் காணப்பட்டுள்ளது.

அத்துடன், கிழக்கு மாகாணத்தை திருகோணமலையை மையப்படுத்தி அபிவிருத்தி செய்யும் திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. திருகோணமலை மாவட்ட அபிவிருத்தித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு எமது அண்டை நாடான இந்தியாவின் ஆதரவு இலங்கைக்கு கிடைத்து வருகிறது. தொழிற்றுறை, வலுசக்தி மற்றும் பொருளாதார நடவடிக்கைகளின் தேசிய மற்றும் பிராந்திய மையமாக திருகோணமலையை மேலும் மேம்படுத்துவதற்கான இந்தியாவின் ஒப்பந்தம் மற்றும் திருகோணமலையில் எண்ணெய்க் குதங்களை அபிவிருத்தி செய்வதில் தொடர்ந்து ஒத்துழைப்பது மேலும் பல நன்மை அளிக்கும். கிழக்கு மாகாணம் கடல் விவகாரங்களில் முக்கிய பங்கு வகிக்கிறது. திருகோணமலை ஒரு முக்கிய மூலோபாய துறைமுகமாக மாற்றப்பட வேண்டும். கிழக்கு மாகாண துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதில் பிராந்தியத்தில் பல வேலைத்திட்டங்கள் குறித்து கலந்துரையாடுவதும் இந்தியாவுடன் இணைந்து செயற்படுவதும் முக்கியமானதாகும்.

இத்துறைமுகத்தின் பொருளாதார செயற்பாடுகள் திருகோணமலை மாவட்டத்தில் மட்டுப்படுத்தப்பட முடியாது. இது அநுராதபுரம், வவுனியா மற்றும் தம்புள்ளை நகரங்களுடன் இணைக்கப்பட வேண்டும், குறிப்பாக, வன்னி, கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் விவசாய உற்பத்தியின் பெரும்பகுதிக்கு பொறுப்பான மாவட்டங்கள். இந்த மாகாணத்தில் தொழில் வளர்ச்சியில் இந்தியா முன்னணியில் இருப்பதால் ஒரு தொழிற்சாலை வலயம் உருவாக்கப்பட வேண்டும். எனவே, துறைமுகமும் இணைக்கப்படும். அதற்காக கூட்டு பணிக்குழுவை அமைக்கத் திட்டமிட்டுள்ளோம்.

நான் ஜனாதிபதியாக பதவியேற்று கடந்த ஒரு வருட காலப்பகுதியில் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல், பொறுப்பு மற்றும் நல்லாட்சி ஆகியவற்றை உறுதிப்படுத்தும் வகையில் பல முறைமை மாற்றங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

அரசியலமைப்புத் திருத்தத்தைக் கொண்டுவருவதற்கு வேறு எந்தக் கட்சியிடமிருந்தும் வலுவான செல்வாக்கு செலுத்தாத நிலையில், 21ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை நான் இந்தச் சபையில் முன்வைத்தேன். அது நிறைவேற்றப்பட்டது. அதனால், ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டன.

தேர்தலின் போது நடக்கும் பல்வேறு நிதி முறைகேடுகள் மற்றும் ஏனைய விடயங்களைத் தடுக்கும் வகையில் தேர்தல் செலவுக் கட்டுப்பாட்டுச் சட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது.நமது நாட்டிற்கு பெரும் இடையூறாக மாறியுள்ள ஊழல் மற்றும் மோசடிகளைத் தடுக்க பலவீனமான சட்டமே காணப்படுகிறது. மிகவும் வலிமையான, சர்வதேச தரத்துக்கு ஏற்ற ஊழல் எதிர்ப்பு சட்டத்தை சபையில் சமர்ப்பித்து நிறைவேற்றியுள்ளோம். அரசாங்கங்களின் தேவைகளுக்கேற்ப நாட்டின் நிதிக் கட்டுப்பாட்டை நினைத்தவாறு மேற்கொள்வதைத் தடுப்பதற்காக மத்திய வங்கி சுயாதீன சட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

இளைஞர் போராட்டங்களில், முறைமை மாற்றம் தேவை என்று வலுவாக வலியுறுத்தப்பட்டது. நமது நாட்டில் உள்ள பெரும்பான்மையான மக்களும் இந்த முறைமையை மாற்ற வேண்டும் என்று கோருகின்றனர். நான் முன்பு குறிப்பிட்ட அனைத்து முன்னெடுப்புகளையும் நாங்கள் முறைமை மாற்றத்திற்கு அடித்தளமாகவே தொடங்கினோம். மாகாண சபைகளிலும் இந்த மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.

வினைத்திறன் மிக்க, விரயமற்ற, ஊழலற்ற, பொதுமக்கள் நம்பிக்கை கொள்ளக்கூடிய, பொதுமக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்கும் மாகாண சபை முறைமையைக் கட்டியெழுப்புவதற்கு வலுவான முறைமை மாற்றத்தை உருவாக்குவதற்கான வாய்ப்பு எமக்குக் கிடைத்துள்ளது. மக்களை அதிகளவில் ஒருங்கிணைக்கவும் தேசிய ஐக்கியத்தைப் பலப்படுத்தவும் மாகாண சபைகளைப் பயன்படுத்துவதற்கான சந்தர்ப்பம் உள்ளது.

இது தொடர்பான எனது முன்மொழிவுகள் மற்றும் வழிமுறைகளை நான் முன்வைத்துள்ளேன். இதனை ஆழமாக ஆராய்ந்து உங்கள் கருத்தைத் தெரிவிக்கலாம்.

இதனைத் தொடர்வதற்கான முழு அதிகாரமும் பாராளுமன்றத்திற்கே உள்ளது. பொது உடன்பாட்டின் மூலம் அந்த நடவடிக்கையை எடுக்குமாறு உங்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன். நாட்டின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு இந்த பாராளுமன்றத்திற்கு பலமும் பரந்த அறிவும் உள்ளது என்பதை உறுதிப்படுத்த ஒன்றிணையுமாறு இந்த சபையிடம் கேட்டுக்கொள்கிறேன்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
செவ்வாய்க்கிழமை 2023.08.08
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5200
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 30,396,424.00
ஆங்கில எழுத்து M
வெற்றி இலக்கங்கள் 5 6 3 9 2 2

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3442
சீட்டிழுப்பு திகதி 2023.08.08
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு Rs. 71,827,513.60
ஆங்கில எழுத்து U
வெற்றி இலக்கங்கள் 45 46 49 77
விசேட எழுத்து U
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 31716

லக்கி 7
திகதி 08.08.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0026
வெற்றி இலக்கினம் மிதுனம்
L7 இலக்கம் 1 0
வெற்றி இலக்கங்கள் 5 7 5 6 5 0
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 10,699,319.04

தன நிதானய
தேதி 2023/08/08
சீட்டிழுப்பு இலக்கம் 1230
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 103,832,620.80
ஆங்கில எழுத்து A
வெற்றி இலக்கங்கள் 21 25 26 52
விஷேட ஆங்கில எழுத்து A
Double Chance இலக்கம் 32898

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் 509
சீட்டிழுப்பு திகதி 2023-08-08
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 4,379,329.80
வெற்றி இலக்கினம் மீனம்
வெற்றி இலக்கங்கள் 27 34 36 37
விசேட இலக்கினம் மீனம்

Mega POWER
சீட்டிழுப்பு இலக்கம் 1548
08/08/2023
03009
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 403,480,636.00
ஆங்கில எழுத்து E
சுப்பர் இலக்கம் 04
வெற்றி இலக்கங்கள் 12 26 36 47
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

# பொன்னாவெளி சீமெந்து தொழிற்சாலைக்கு எதிரான மக்கள் போராட்டம் தொடர்ந்தும் முன்னெடுப்பு

கிளிநொச்சி நிருபர்



கிளிநொச்சி பூநகரி பொன்னாவெளி சீமெந்து தொழிற்சாலைக்கு எதிரான மக்கள் போராட்டம் நேற்று (09) 07ஆவது நாளாக தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

அனைத்து மக்கள் ஒன்றியத்தால் வேரவில், வலைப்பாடு, கிராஞ்சி ஆகிய கிராமங்கள் இணைந்து சீமெந்து தொழிற்சாலைக்கு எதிராக நடத்தும் சுழற்சிமுறையிலான கவனயீர்ப்புப் போராட்டத்தின் ஏழாவது நாள் போராட்டமானது வேரவில் வைத்தியசாலைக்கு அருகில் இடம்பெற்று வருகிறது.

பொன்னாவெளி எனும் பழமைவாய்ந்த கிராமத்தில் சீமெந்து தொழிற்சாலைக்கான சுண்ணக்கல் அகழ்வை மேற்கொள்வதற்கு டோக்கியோ சீமெந்து நிறுவனம் ஆய்வுகளை மேற்கொண்டு பணிகளை முன்னெடுக்கவுள்ள நிலையில், பொதுமக்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த வாரம் ஆர்ப்பாட்டமொன்றை மேற்கொண்டிருந்தனர். அதன் தொடர்ச்சியாக சுழற்சி முறையிலான கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

கடற்கரைக்கு அருகிலுள்ள கிராமங்களில் சுமார் 300 மீற்றர் வரையான ஆழத்தில் சுண்ணக்கல் அகழ்வு மேற்கொள்ளப்படும்போது அதன் விளைவாக தங்களது கிராமங்களுக்குள் கடல் நீர் உள் வரும் எனவும் அதனால் கிராம மக்கள் கிராமங்களை விட்டு வெளியேற வேண்டிய நிலைமை ஏற்படும் என்றும் தெரிவிக்கும் பொதுமக்கள், தொழிற்சாலைக் கழிவுகள் காரணமாக மோசமான நோய்த்தாக்கங்களுக்கும் தாம் முகங்கொடுக்க வேண்டிய சூழல் நிலைகள் உருவாகும் என்றும் தெரிவித்துள்ளனர்.

இதன் காரணமாக கடற்கரையில் அமைந்துள்ள தங்களது கிராமங்களில் சுண்ணக்கல் அகழ்வு நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டாம் எனவும் அவர்கள் தெரிவித்து கவனயீர்ப்புப் போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழ். ஆசிரியர்களுக்கு மனித உள்ளார்ந்த வள பயற்சி வழங்க நடவடிக்கை

யாழ். நிருபர்



யாழ்ப்பாண மாவட்டத்தில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு மனித உள்ளார்ந்த வளம் சம்பந்தப்பட்ட பயிற்சி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது - என யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்டமட்ட சிறுவர் அபிவிருத்தி குழுக் கூட்டம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (08) மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிறுவர் அபிவிருத்தி எனும்போது பாடசாலை மட்டத்தில் ஆசிரியர்களுக்கு உளவள பயிற்சி தேவை. நாளாந்த செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில் உளவள பயிற்சி - தலைமைத்துவப் பயிற்சி வழங்கப்பட வேண்டும்.

மாகாண கல்விப் பணிப்பாளருடன் இது தொடர்பில் பேசியுள்ளேன். தனியார் நிறுவனம் ஊடாக குறித்த பயிற்சியை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

முதல் கட்டமாக வேலணை மத்திய மகா வித்தியாலய ஆசிரியர்களுக்கு வழங்குவதுடன், அதனைத் தொடர்ந்து வரும் காலங்களில் கட்டம் கட்டடமாக ஏனைய ஆசிரியர்களுக்கும் பயிற்சி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இதற்கு வலயக் கல்விப் பணிப்பாளர், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் என அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் – என்றார்.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# சுன்னாகம் கொலை தொடர்பாக மேலும் இருவர் கைது

வட்டுக்கோட்டை நிருபர்

19 வயது யுவதியும் 54 வயது ஆணொருவரும் கடந்த சில தினங்களுக்கு முன்னர் வீட்டை விட்டு வெளியே சென்று குடும்பமாக வாழ்ந்து வந்த நிலையில், அவர்களை சேர்த்து வைப்பதாக உறவினர்கள் கடந்த திங்கட்கிழமை (07) ஊருக்கு வரவழைத்தனர்.

இவ்வாறு அவர்கள் வந்தவேளை உறவினர்களால் அவர்கள் இருவர் மீதும் தாக்குதல் நடத்தப்பட்ட நிலையில், அந்த ஆண் வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டவேளை இடையில் உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில், கடந்த திங்கட்கிழமை சுன்னாகம் பொலிஸாரால் அறுவர் கைதுசெய்யப்பட்டு, மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தியவேளை அவர்கள் அறுவரையும் எதிர்வரும் 22ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். தாக்குதலுக்கு உள்ளான யுவதி தெல்லிப்பழை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றுவரும் நிலையில், அவர் வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படையில் யுவதியின் தந்தை நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளார். அத்துடன், தடயச் சான்றான உயிரிழந்த நபரின் சாரத்தை எரித்த குற்றச்சாட்டின் கீழ் யுவதியின் அண்ணாவையும் நேற்று முன்தினம் (08) பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

மேலும் சம்பவம் நிகழ்ந்த இடத்தை மல்லாகம் நீதிமன்ற பதில் நீதிவான் அன்று மாலை 4 மணியளவில் பார்வையிட்டார். அதன்பின்னர் உயிரிழந்தவரது சடலமானது பிரேத பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

# யாழில் 15 சிறுவர்களுக்கு பிறப்புப் பதிவு இல்லையென சுட்டிக்காட்டு

யாழ். நிருபர்

யாழ்ப்பாணத்தில் பிறப்பு பதிவற்ற 15 சிறுவர்கள் காணப்படுவதாக யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (08) இடம்பெற்ற கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நீதிமன்ற வழக்குகள் மற்றும் தந்தை - தாய் இடையேயான முரண்பாடு, பெற்றோரின் அக்கறையின்மை உள்ளிட்ட காரணங்களால் பிறப்புப் பதிவுகள் மேற்கொள்ளப்படவில்லை.

இவ்வாறாக கடந்த காலாண்டில் பிறப்பு பதிவற்ற சிறுவர்களின் எண்ணிக்கை 104 ஆக காணப்பட்டபோதும் பல்வேறுபட்ட தொடர் முயற்சிகளுக்குப் பின்னர் 89 பேருக்கு பிறப்புச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

இன்னமும் 15 பேருக்கே பிறப்பு சான்றிதழ் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

# பளை, இயக்கச்சியில் தொடரும் சட்டவிரோத மணல் அகழ்வு

## பொதுமக்கள் விசனம்

கிளிநொச்சி நிருபர்



கிளிநொச்சி மாவட்ட பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இயக்கச்சியில் சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதாக பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கடல் மட்டத்திலிருந்து வெறும் ஒன்றரை மீற்றர் உயரமே கொண்ட இயக்கச்சி பிரதேசத்தின் ஆற்று சமவெளி பகுதிகளிலிருந்து தொடர்ச்சியாக ஆயிரக்கணக்கான டிசம்பர் லோட் மண் அகழப்பட்டு யாழ்ப்பாணத்தை நோக்கிச் செல்வதாக கிராம மக்களால் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த மணல் அகழ்வை உடனடியாக தடுக்காவிட்டால் மிக விரைவில் இயக்கச்சி பிரதேசத்தின் நிலங்களும் உவராக மாற்றமடைந்து மக்கள் வாழ முடியாத சூழல் ஏற்படும் எனவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, குறித்த விடயத்தை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்திற்கொண்டு விரைந்து மணல் அகழ்வைத் தடுக்குமாறு கிராம மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# வீதியில் பயணித்தவர் திடீரென கீழே விழுந்து உயிரிழப்பு

தனராஜ்

பசறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிபிலேகம வீதியில் பயணித்த ஒருவர் நேற்றுக் காலை (09) வீதியில் விழுந்து உயிரிழந்துள்ளதாக பசறை பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் நமுனுகுல, வெவேகெலே கீழ்ப்பிரிவைச் சேர்ந்த 52 வயதுடைய நபர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

குறித்த நபர் பசறை - பிபிலேகம வீதியில் பயணித்தபோது திடீரென கீழே விழுந்ததாகவும் அதன் பின்னர் 1990 அம்பியூலன்ஸுக்கு அறிவிக்கப்பட்டு அவரை வைத்தியசாலைக்கு கொண்டுசெல்ல முயன்றபோது அவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளை பசறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# போதை மாத்திரைகளுடன் பதுளையில் ஒருவர் கைது

ராமு தனராஜ்

பதுளையில் சுமனதிஸ்ஸகம பகுதியில் போதை மாத்திரைகளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பதுளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சுமனதிஸ்ஸகம பகுதியில் போதை மாத்திரைகளை கைவசம் வைத்திருப்பதாக பசறை ஆககரத்தன்ன பகுதியிலுள்ள விசேட அதிரடிப் படையினரின் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கமைய தேடுதலை மேற்கொண்டபோது 60 போதை மாத்திரைகள் கண்டுபிடிக்கப்பட்டதுடன், 23 வயதுடைய இளைஞர் ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதனையடுத்து போதை மாத்திரைகளுடன் சந்தேக நபர் பதுளை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார் என விசேட அதிரடிப் படையினரின் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

சந்தேக நபரிடம் விசாரணைகளை மேற்கொண்டுவரும் பதுளை பொலிஸார் இன்று (10) பதுளை நீதிமன்றத்தில் குறித்த நபரை ஆஜர்ப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக பதுளை பொலிஸார் தெரிவித்தனர்.

# துப்பாக்கிச்சூட்டில் இறந்த கணவன் - மனைவியின் சடலங்கள் அடையாளமிட்டு புதைக்க வேண்டும்

## குறித்த இடத்துக்கு பாதுகாப்பும் வழங்குக; பொலிஸாருக்கு நீதவான் விசேட உத்தரவு

ஆ.ரமேஸ்

நுவரெலியாவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் உயிரிழந்த கணவன் - மனைவியின் சடலங்கள் பாதுகாப்பான இடத்தில் அடையாளமிட்டு புதைக்கப்பட வேண்டுமென விசேட உத்தரவு பிறப்பித்த நுவரெலியா மாவட்ட நீதவான் நாலக்க சஞ்சீவ வீரசிங்க, சடலங்கள் புதைக்கப்படும் இடத்துக்கு பாதுகாப்பும் வழங்கப்படவேண்டுமென பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பித்தார்.

நுவரெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நுவரெலியா நுழைவாயில் பகுதியான டொப்பாஸ் கிராமத்தில் உள்ளூர்த் தயாரிப்பான ‘கல்கட்டஸ்’ துப்பாக்கிச்சூட்டில் கணவன் மற்றும் மனைவி ஒரே வீட்டில் உயிரிழந்த சம்பவம் திங்கட்கிழமை



(07) இரவு 10.30 மணியளவில் இடம்பெற்றமை தெரிந்ததே.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் நுவரெலியா மாவட்ட நீதிமன்றத்தின் கவனத்துக்கு கொண்டுவந்ததையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற நீதவான் நாலக்க சஞ்சீவ வீரசிங்க மற்றும் சட்ட வைத்தியர் எம்.எம்.குணதிலக்க விசாரணைகளை மேற்கொண்ட பின் அவர்களின் உத்தரவுக்கமைய சடலங்கள் மீட்கப்பட்டு மாவட்ட வைத்தியசாலைக்கு பிரேத பரிசோதனைக்காக கொண்டுசெல்லப்பட்டன.

அத்துடன், இந்தத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் பிரேத பரிசோதனை சட்ட வைத்தியரொருவரின் ஊடாக மேற்கொண்ட பின்னரே சடலங்களை உறவினர்களிடம் கையளிக்கவேண்டுமெனவும் நீதவான் தெரிவித்திருந்த நிலையில், இச்சம்பவம் தொடர்பான அறிக்கை மற்றும் சட்டவைத்தியரின் அறிக்கையை சம்பவம் தொடர்பான வழக்கில் நுவரெலியா மாவட்ட நீதவான் நீதிமன்றில் பொலிஸார் சமர்ப்பிக்க வேண்டுமெனவும் உத்தரவிட்டுள்ளார்.

இதனையடுத்து நுவரெலியா குற்றத்தடுப்புப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்நிலையில், இந்த உயிரிழப்புச் சம்பவம் நுவரெலியாவில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளதுடன், பல்வேறு சந்தேகங்களையும் ஏற்படுத்தியுள்ளது.

# ஹெரோயின் – ஐஸ் போதை பொருளுடன் ஒருவர் கைது

ராமு தனராஜ்

கொழும்பிலிருந்து பதுளை நோக்கி தனியார் பஸ்ஸில் பயணித்த 30 வயதுடைய கொனகல, ஹொரணை பிரதேசத்தைச் சேர்ந்த நபரொருவர் ஹல்துமுல்ல ஆரம்ப பாடசாலைக்கருகில் வைத்து ஹெரோயின் மற்றும் ஐஸ் போதைப் பொருளுடன் நேற்று முன்தினம் இரவு பண்டாரவளை குற்றத்தடுப்புப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பண்டாரவளை குற்றத்தடுப்புப் பொலிஸ் பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கமைய குறித்த சந்தேக நபர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். இதனையடுத்து சந்தேகநபரிடமிருந்து 3,250 மில்லிகிராம் ஹெரோயின் மற்றும் 790 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டதாக பண்டாரவளை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரதீப் களுபான தெரிவித்தார்.

குறித்த சந்தேக நபரை பண்டாரவளை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தியபோது சந்தேக நபரை விளக்கமறியலில் வைத்து விசாரிக்க நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

# இராகலை பச்சத்தண்ணி மாரியம்மன் ஆலய வருடாந்த பெருவிழா

ஆ.ரமேஸ்.



நுவரெலியா மாவட்டம் வலப்பனை பிரதேச இராகலை முதலாம் பிரிவு தோட்டத்தில் அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க அருள்மிகு ஸ்ரீ பச்சத்தண்ணி மாரியம்மன் ஆலய வருடாந்த உற்சவம் நாளை வெள்ளிக்கிழமை (11) கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. இதனையடுத்து 5 நாட்கள் நடைபெறும் இத்திருவிழாவில் சங்காபிஷேகம் உட்பட தேர்த்திருவிழாவும் இடம்பெறவுள்ளது.

ஆலய பிரதம குருக்கள் சிவஸ்ரீ ந.சிவராஜா தலைமையில் தொடர்ந்து ஐந்து நாட்கள் விழா நிகழ்வுகள் இடம்பெறவுள்ளதாக ஆலய நிர்வாக சபைச் செயலாளர் சிவ.புஷ்பராஜ் தெரிவித்தார்.

அன்றைய தினம் காலை 07 மணிக்கு உற்சவகொடி ஏற்றப்பட்டு இரவு கரகம் பாலித்தல் இடம்பெறும். மறுநாள் (12) காலை 09 மணி முதல் மாலை வரையான நிகழ்வுகளில் பாற்குட பவனி, சங்காபிஷேகம் மற்றும் மகேஸ்வர பூசையுடன் பக்தகோடிகளுக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

13ஆம் திகதி காலை ஆலய பூஜையுடன் வசந்தமண்டப பூசை இடம்பெற்று 10 மணிக்கு முத்துச்சப்பறத்தில் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஊர்வலமாக வந்து ஆசி வழங்கும் நிகழ்வு இடம்பெறவுள்ளது. 14ஆம் திகதி மாலை 03 மணிக்கு பறவைக்காவடி, மாவிளக்கு பூசை என இடம்பெற்று தீ மிதிப்பு விழா இடம்பெறவுள்ளது.

15ஆம் திகதி காலை 09 மணிக்கு கரகரப்பாக ஊர்வலம் இடம்பெறுவதுடன் அன்றைய தினம் பகல் 1.30 மணிக்கு ஆடி மாத ஐந்தாம் செவ்வாய் விசேட பூஜையுடன் மாலை கரகம் குடிவிடுதல் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இந்த உற்சவ நிகழ்வுகளில் கலந்துகொள்ள நாட்டில் பல பாகங்களிலும் இருந்து வரும் பக்த கோடிகளுக்கு பாதுகாப்பு ஒழுங்கு இராகலை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டுள்ளதென ஆலய நிர்வாக சபை அறிவித்துள்ளது.

# உள்ளூர் மிதிவெடி மூலம் வன விலங்கு வேட்டையாடிய இருவருக்கு அபராதம்

கண்டி நிருபர்

வெடிபொருட்களைப் பயன்படுத்தி உள்ளூரில் தயாரிக்கப்பட்ட ‘அக்கபட்டஸ்’ என்ற மிதி வெடிகள் 10ஐ தம்வசம் வைத்திருந்ததுடன், அதனைக்கொண்டு வன விலங்குகளை வேட்டையாட முற்பட்ட இருவரை பூஜாப்பிட்டிய பொலிஸார் செவ்வாய்க்கிழமை (8) கைதுசெய்துள்ளனர்.

பூஜாப்பிட்டிய, தொலபிஹில்ல பகுதியில் சந்தேகத்திற்கிடமான முறையில் வனப் பிரதேசத்தில் இருவர் நடமாடுவதாக பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் அங்கு சென்ற பொலிஸார் சந்தேக நபர்கள் இருவரையும் கைதுசெய்தனர்.

இதனையடுத்து அவர்கள் வசமிருந்த உள்ளூர் தயாரிப்பான மிதிவெடிகளை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். சந்தேக நபர்களை கலகெதர நீதவான் முன் ஆஜர்ப்படுத்தியபோது தலா 25,000 ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது.

# பல்வேறு வகை போதைப் பொருட்களை வைத்திருந்த நால்வர் பொலிஸாரால் கைது

கண்டி நிருபர்

போதை ஏற்படுத்தும் கேப் சூல்கள் மற்றும் பல்வேறு போதைப் பொருட்களை உடன் வைத்திருந்த நால்வரைக் கட்டுகஸ்தோட்டை பொலிஸார் செவ்வாய்க்கிழமை (8) கைதுசெய்துள்ளனர்.

கட்டுகஸ்தோட்டையை அண்மித்த பகுதியில் வைத்து 25 வயது சந்தேக நபர் ஒருவரைக் கைதுசெய்தபோது மேற்படி 10 போதைப் பொருள் மாத்திரைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

அத்துடன், 100 கிராம் கஞ்சா போதைப் பொருள் மற்றும் 95 மில்லி கிராம் ‘ஐஸ்’ போதைப் பொருள் என்பனவும் சந்தேக நபரிடமிருந்து கைப்பற்றப்பட்டன. மேற்படி சந்தேக நபர் வழங்கிய தகவலுக்கமைய மற்றுமொருவரைக் கைதுசெய்தபோது அவரிடமிருந்தும் 10 போதை வில்லைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தவிர, கஞ்சா 750 மில்லி கிராம் மற்றும் 850 மில்லி கிராம் என்பவற்றை உடன் வைத்திருந்த இரண்டு சந்தேக நபர்களையும் பொலிஸார் கைதுசெய்தனர். சந்தேக நபர்களை கண்டி நீதவான் முன் ஆஜர்ப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# உலக செய்திகள்

# இனி என்ட மாநிலம் கேரளா அல்ல கேரளம்

## சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றம்



கேரளா மாநிலத்தின் பெயரை கேரளம் என மாற்ற சட்டசபையில் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கேரளாவில் முதலமைச்சர் பினராயி விஜயன் தலைமையிலான இடதுசாரிகள் ஆட்சி நடைபெற்று வருகிறது. மாநிலத்தின் பெயரான கேரளா என்பதை கேரளம் என பெயர் மாற்றம் செய்ய மாநில அரசு முடிவுசெய்துள்ளது. மேலும் அரசியல் சாசனம் மற்றும் ஆவணங்களில் மாநிலத்தின் பெயர் கேரளம் என மாற்றம் செய்ய அரசு விரும்பியது.

அங்கு சட்டப்பேரவைக் கூட்டத்தொடர் திங்கட்கிழமை ஆரம்பித்த நிலையில் தொடர்ந்தும் நடைபெற்று வருகிறது. அதில் கேரள மாநிலத்தின் பெயரை கேரளம் என மாற்ற மத்திய அரசை வலியுறுத்தும் மசோதாவை சட்டமன்றத்தில் மாநில முதலமைச்சர் பினராயி விஜயன் தாக்கல் செய்தார். மாநிலத்தின் பெயரை கேரளா என்பதிலிருந்து கேரளம் என்று அதிகாரப்பூர்வமாக மாற்ற வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்தி ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் எட்டாவது அட்டவணையில் உள்ள அனைத்து மொழிகளிலும் மாநிலத்தின் பெயரை கேரளம் என்று மாற்ற வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்தி முதலமைச்சர் தீர்மானம் கொண்டுவந்தார். மாநில பெயர் மாற்ற தீர்மானத்தின் மீது விவாதம் நடைபெற்று நேற்றே சட்டப்பேரவையில் ஒருமனதாக நிறைவேறியுள்ளது.

# ‘பெட் மேனால்’ கருகிய நாகசாகி: 78ஆவது நினைவு தினம் நேற்று



நாகசாகி மீது அணுகுண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதன் 78ஆம் ஆண்டு நினைவு தினம் ஜப்பானில் நேற்று (09) அனுஷ்டிக்கப்பட்டது. உலகை உலுக்கிய இச்சம்பவத்தின் நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டதையொட்டி, நாகசாகியில் அமைதி மணி ஒலிக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் உரையாற்றிய ஜப்பான் பிரதமர் புமியோ கிஷிடா, ‘‘அணு ஆயுதம் இல்லாத உலகை உருவாக்க ஜப்பான் தொடர்ந்து போராடும்’’ - என்றார்.

“அணு ஆயுதங்களை வைத்துள்ள நாடுகள், மோதலை எதிர்கொள்ளும்போது அழிவை விளைவிக்கும் ஆயுதங்களை சார்ந்திருக்கக் கூடாது. அதிலிருந்து விடுபட்டு உங்கள் தீரத்தை வெளிக்காட்ட வேண்டும்” என மேயர் ஷீரோ சுசுகி தெரிவித்தார்.

அத்தோடு ரஷ்யா - உக்ரைன் போர் தீவிரமடைந்து வரும் நிலையில், அணு ஆயுத பயன்பாடு சார்ந்த அச்சுறுத்தல் இருக்கின்றது. அணு ஆயுதங்களை தடை செய்வதற்கான ஒப்பந்தத்தில் ஜப்பான் அரசு விரைவில் கையெழுத்திட வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தினார்.

2ஆம் உலகப்போரின்போது அமெரிக்கா மற்றும் நேச நாடுகளுக்கு எதிராக ஜப்பான் போரிட்டது. மே 8, 1945இல் ஜேர்மனியின் சரணடைதலுடன் ஐரோப்பாவில் போர் முடிவுக்கு வந்தாலும் நேச நாடுகளுக்கும், ஜப்பானுக்கும் இடையே பசுபிக் போர் தொடர்ந்தது. இதனால் இரண்டாம் உலகப்போரில் ஜப்பானை சரணடையச் செய்வதற்காக அணுகுண்டுகளை பயன்படுத்த அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி ஹரி டிருமன் அனுமதியளித்தார்.

இதையடுத்து 1945ஆம் ஆண்டு ஒகஸ்ட் 6ஆம் திகதி ஹிரோஷிமா நகரில் யுரேனியம் வெடிகுண்டான லிட்டில் போய் வீசப்பட்டது. இச்சம்பவம் இடம்பெற்று மூன்று நாட்களின் பின்னர் நாகசாகி மீது த பெட் மேன் (The Fat Man) என்ற புளூட்டோனியம் குண்டும் வீசப்பட்டது. நாகசாகியில் வீசப்பட்ட புளூட்டோனியம் குண்டு 75 ஆயிரம் பேரின் உயிர்களை பறித்தது.

இந்தக் கொடூர தாக்குதல்கள் நடந்து 6 நாட்களுக்குப் பின்னர் ஒகஸ்ட் 15ஆம் திகதி ஜப்பான் சரணடைந்தது. இரண்டாவது அணுகுண்டு வீச்சால் ஜப்பானின் நாகசாகி நகரம் பேரழிவை எதிர்கொண்ட 78ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று ஜப்பானில் அனுஷ்டிக்கப்பட்டது.

# நிலவை நெருங்கும் சந்திரயான் - 3; 23இல் தரையிறங்கும்




சந்திரயான்-3 விண்கலத்தின் சுற்றுவட்டப் பாதையின் உயரம் குறைக்கப்பட்டுள்ள நிலையில் நிலவை நெருங்கியுள்ளது.

நிலவின் தென் துருவத்தை ஆய்வு செய்வதற்காக இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) சந்திரயான்-3 என்ற விண்கலத்தை ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவிலுள்ள சதீஷ் தவான் விண்வெளி ஆய்வு மையத்திலிருந்து கடந்த மாதம் 14ஆம் திகதி விண்ணில் ஏவியது.

வெற்றிகரமாக 23 நாட்கள் பயணத்தை முடித்துக்கொண்டு, சந்திரயான்-3 விண்கலம் நிலவு சுற்றுப்பாதையில் நுழைந்தது. தற்போது நிலவின் சுற்றுவட்டப் பாதையில் பயணித்து வருகிறது.

இந்நிலையில், சந்திரயான் விண்கலத்தின் நீள்வட்ட சுற்றுப்பாதையின் உயரம் 2ஆவது முறையாக குறைக்கப்பட்டுள்ளது. கடந்த 5ஆம் திகதிமுதல் நிலவின் சுற்றுவட்டப் பாதையில் விண்கலம் சுற்றி வரும் நிலையில் உயரம் குறைக்கப்பட்டுள்ளது.

திட்டமிட்டபடி சந்திரயான்-3 எதிர்வரும் 23ஆம் திகதி நிலவில் தரையிறங்கும் என இஸ்ரோ தலைவர் சோம்நாத் தெரிவித்துள்ளார்.

அனைத்து விதமான பிரச்சினைகளையும் சமாளிக்கும் வகையில் விக்ரம் லேண்டர் வடிவமைக்கப்பட்டுள்ளது. சென்சார்கள் செயலிழந்தாலும், வெற்றிகரமாக இலக்கை எட்டும் திறனுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# காற்சட்டை பைக்குள் 14 பாம்புக்குட்டிகள்

## கடத்த முயற்சித்த சீனர் கைது



சீனாவில் 14 பாம்புக் குட்டிகளை காற்சட்டை பைக்குள் மறைத்து வைத்து கடத்த முயன்ற ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சீனா - ஹொங்கொங் எல்லையில் அமைந்துள்ள ஃபுடியன் துறைமுகத்தின் நுழைவாயிலில் சந்தேகத்திற்கிடமான வகையில் பதற்றத்துடன் நடந்து வந்த பயணியைப் பிடித்து சுங்கத்துறை அதிகாரிகள் சோதனை மேற்கொண்டனர்.

அப்போது அவரது காற்சட்டை பைக்குள் காலுறைகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 14 பாம்புக்குட்டிகள் சிக்கின.

இதையடுத்து அந்த நபரை கைதுசெய்த அதிகாரிகள் பாம்புகளைப் பறிமுதல் செய்தனர். அதில் அழிவின் விளிம்பிலுள்ள 3 மலைப்பாம்புக்குட்டிகளும் இருந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

# மத்தியகடல் பகுதியில் படகு விபத்து: அகதிகள் 41பேர் பலி; 4 பேர் மீட்பு

மத்தியதரைக்கடல் பகுதியில் இடம்பெற்ற படகு விபத்தில் 41 அகதிகள் உயிரிழந்துள்ளதுடன் நான்கு பேர் உயிர் தப்பியுள்ளனர்.

துனிஷியாவிலிருந்து கடந்த வியாழக்கிழமை மூன்று குழந்தைகள் உட்பட 45 பேருடன் பயணித்த அகதிகள் படகொன்று மத்தியதரைக்கடல் பகுதியில் பயணித்துகொண்டிருந்தபோது திடீரென கவிழ்ந்துள்ளது.

இப்படகு விபத்தில் அதில் பயணித்த அகதிகள் 41 பேர் உயிரிழந்துள்ள நிலையில், ஆண்கள் மூவர் மற்றும் பெண்ணொருவர் உட்பட நால்வர் உயிர் தப்பியுள்ளனர். அவர்கள் இத்தாலிய கடற்படையினரால் மீட்கப்பட்டு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். அவர்கள் நால்வரும் ஐவரிகோஸ்ட் மற்றும் கினியாவைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# வெள்ளத்தில் மிதக்கும் பீஜிங்: 33 பேர் உயிரிழப்பு; 18 பேர் மாயம்



சீனத் தலைநகர் பீஜிங்கில் பெய்துவரும் கடும் மழையால் ஏற்பட்டுள்ள பெரும் வெள்ளத்தில் சிக்கி கனமழையால் இதுவரை 33 பேர் உயிரிழந்துள்ளதுடன், 18 பேர் காணாமல் போயுள்ளனர்.

பீஜிங்கில் கடந்த 140 ஆண்டுகளில் இல்லாதளவுக்கு கடும் மழை பெய்ததால் அப்பகுதி முழுவதும் வெள்ளக்காடாக மாறியுள்ளது. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

கடும் மழை வெள்ளத்தில் சிக்கி 59 ஆயிரம் வீடுகள் சரிந்து வீழ்ந்துள்ளதுடன், சுமார் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் பேரின் வீடுகள் சேதமடைந்துள்ளன. 15 ஆயிரம் ஹெக்டேயர் பயிர்நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. சேதத்தின் அளவைக் கருத்திற்கொண்டு, முழு மீட்டெடுப்புக்கு சுமார் 3 ஆண்டுகள் வரை ஆகலாம் என்று பீஜிங் துணை மேயர் சியா லின்மாவோ தெரிவித்தார்.



புளத்சிங்கள, மில்லகந்த அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் ஆடி தேர்த்திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை (06) நடைபெற்றது. படம்: இரத்தினபுரி நிருபர்

# முல்லைத்தீவு மனிதப் புதைகுழி வழக்கு விசாரணை இன்று




முல்லைத்தீவு, கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வு தொடர்பான வழக்கு நேற்றுமுன்தினம் (08) முல்லைத்தீவு நீதவான் நீதிமன்ற நீதவான் ரி. பிரதீபன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இந்நிலையில், குறித்த வழக்கு விசாரணையை இன்று (10) வரை நீதவான் ஒத்திவைத்தார்.

இந்த வழக்கு தொடர்பாக சட்டத்தரணி வி.கே.நிரஞ்சன் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில்,

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வுக்கு ஜனாதிபதி செயலகத்திலிருந்து நிதி கிடைக்கவிருப்பதாக காணாமல்போனோர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், தொல்பொருள் திணைக்களம் மற்றும் ஏனைய திணைக்கள அதிகாரிகள் 10ஆம் திகதி (இன்று) சந்தேகத்துக்கு இடமான பிரதேசத்துக்குச் சென்று கணிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் அகழ்வுப் பணிக்கான திகதி தீர்மானிக்கப்படவுள்ளது.

இதில் தொல்பொருள் திணைக்களம் முன்னிலையாகாத நிலையில் நாளை மறுதினம் (இன்று 10) பார்வையிட்டு இது தொடர்பான பாதீட்டை நீதிமன்றில் சமர்ப்பிக்கவுள்ளதாக நீதிமன்றுக்கு கடிதம் அனுப்பியுள்ளார்கள் என்றும் தெரிவித்தார்.

# ரயிலின் முன் பாய்ந்து யுவதி பரிதாப மரணம்

எஸ்.கணேசன்

கண்டியிலிருந்து பதுளை நோக்கி பயணித்த சரக்கு ரயிலின் முன் பாய்ந்து யுவதியொருவர் நேற்று (09) காலை உயிரிழந்துள்ளதாக ஹட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.

ஹட்டன், மல்லியப்பு பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. டயகம பிரதேசத்தைச் சேர்ந்த கணபதி அனுஷா தர்ஷனி (28 வயது) என்ற யுவதியே மேற்படி சம்பவத்தில் உயிரிழந்துள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ளது. காதலனே சடலத்தை அடையாளம் காட்டியுள்ளார்.

உயிரிழந்த யுவதி ஹட்டன் நகரிலுள்ள தனியார் நிதி நிறுவனமொன்றில் பணிபுரிந்து வருவதாகவும் குறித்த யுவதி ஹட்டன் பொன்னகர் பிரதேசத்தில் வசிக்கும் இளைஞன் ஒருவருடன் ஐந்து வருடங்களாக காதல் உறவில் ஈடுபட்டுள்ளதாகவும் ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். இச்சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை ஹட்டன் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# குற்றவாளிகளுக்கு ஆதரவு வழங்கிய சிறை அதிகாரிகளுக்கு இடமாற்றம்

மாத்தறை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள குற்றவாளிகளுக்கு ஆதரவாக செயற்பட்ட சிறைக்காவலர் உட்பட ஐவர் திருகோணமலை உள்ளிட்ட சிறைச்சாலைகளுக்கு இடமாற்றப்பட்டுள்ளனர்.

மாத்தறை சிறைச்சாலையின் சிறைக்காவலர் மீது பஸ்ஸுக்குள் தாக்குதல் நடத்தியதாகக் கூறப்படும் 10 பேர்கொண்ட குழுவொன்று சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டு சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்தனர். இந்நிலையில், குறித்த கும்பல் தொடர்பில் சிறைச்சாலை புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்ட விசாரணைகளில் சிறைக்காவலர் உட்பட ஐவர் அவர்களுக்கு ஆதரவாக செயற்பட்டமை தெரியவந்துள்ளது. இதனையடுத்து குறித்த ஐவரும் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் திருகோணமலை உள்ளிட்ட சிறைச்சாலைகளுக்கு இடமாற்றப்பட்டுள்ளனர்.

# கொள்கலனுடன் ரயில் மோதி விபத்து



வில்வத்த ரயில் கடவையில் கொள்கலன் ஒன்றுடன் ரயில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

பொல்கஹவெலயிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த அலுவலக ரயிலே கொள்கலனுடன் மோதியுள்ளது. இச்சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது. இதன் காரணமாக கிரிஉல்ல - மீரிகம வீதி போக்குவரத்து முற்றாக ஸ்தம்பிதமடைந்தது.

ரயிலால் மோதுண்ட கொள்கலன் சுமார் 100 மீற்றர் தூரம் வரை இழுத்துச் செல்லப்பட்டுள்ளது. இச்சம்பவத்தினால் ரயில் சமிக்ஞை, மின்கம்பங்கள், ரயில் கதவுகள் என்பன பலத்த சேதமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# கொழும்பில் வாகனம் வைத்திருப்போருக்கு முக்கிய அறிவிப்பு

கொழும்பு நகரில் வாகனங்கள் நிறுத்தும் இடங்களில் சீருடை அல்லது உத்தியோகபூர்வ அடையாள அட்டை இன்றி பணம் சேகரிக்க வரும் நபர்களுக்கு பணம் வழங்க வேண்டாம் என கொழும்பு மாநகர சபை அறிவித்துள்ளது.

வாகனம் நிறுத்துமிடங்களில் அனுமதியற்ற பற்றுச்சீட்டுகள் வழங்கப்பட்டால் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்துக்கு அறிவிக்குமாறு கொழும்பு மாநகர சபை பிரதிப் பணிப்பாளர் மஞ்சுள குலரத்ன தெரிவித்துள்ளார்.

மேலும், வாகனம் நிறுத்துமிடத்தை விட்டு வெளியேறும்போது பணம் வசூலிக்கும் நபர்கள் இல்லையெனில் பணம் செலுத்தவேண்டிய அவசியமில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# படகு செயலிழந்ததால் தமிழ்நாட்டில் கரையொதுங்கிய மீனவர்கள்

பு.கஜிந்தன்



இலங்கை கடற்றொழிலாளர்கள் மூன்று பேர் படகு செயலிழந்ததால் தமிழ்நாட்டில் கரையொதுங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், எழுவைதீவிலிருந்து கடந்த 6ஆம் திகதி காலை 9 மணிக்கு பைபர் படகில் மீன்பிடிக்கச் சென்ற மூன்று கடற்றொழிலாளர்களும் பிற்பகல் 2 மணியளவில் இயந்திரம் செயலிழந்ததால் நாகை மாவட்டம், வேதாரண்யம் பகுதியில் கரையொதுங்கியுள்ளனர் .இந்நிலையில், யாழ்ப்பாணம் ,ஆனைக்கோட்டை, குருநகர் மற்றும் வல்வெட்டித்துறை பகுதிகளைச் சேர்ந்த கடற்றொழிலாளர்களே இவ்வாறு இந்தியா சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தமிழக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று விதம் (09.08.2023)

| நாணயம் | கொள்வனவு விதம் | விற்பனை விதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 204.2614 | 216.2350 |
| கனேடியன் டொலர் | 232.7953 | 245.4771 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 42.8441 | 45.9894 |
| யூரோ | 343.3976 | 360.5729 |
| ஜப்பான் யென் | 2.1848 | 2.2959 |
| சிங்கப்பூர் டொலர் | 232.1533 | 244.5652 |
| ஸ்ரேலிங் பவுன் | 399.9822 | 418.9176 |
| சுவிஸ் பிராங் | 356.3813 | 376.9718 |
| ஐ.அ. டொலர் | 314.9470 | 327.5220 |

| நாடு | நாணயம் | விற்பனை விதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 851.7024 |
| குவைட் | குவைட் தினார் | 1,043.5286 |
| ஓமான் | ஓமான் றியால் | 834.0368 |
| கட்டார் | கட்டார் றியால் | 88.1056 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 85.5811 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 87.4219 |



கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் தர முகாமைத்துவப்பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றி பல்வேறு செயற்றிட்டங்களுக்கும் கருத்திட்டங்களுக்கும் ஒத்துழைப்பு வழங்கிய டொக்டர் பி.ஜி.பி.டேனியல் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு இடமாற்றம் பெற்றுச் செல்கின்றார். கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையும் அதன் உத்தியோகத்தர்களும் ஊழியர்களும் அவரின் சேவையைப் பாராட்டி பிரியாவிடை வழங்கும் நிகழ்வு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஆலோசனைக்கமைவாக பிரதிப் பணிப்பாளர் டாக்டர் எம்.பி.அப்துல் வாஜித் தலைமையில் நடைபெற்றது. **படம்:** மாளிகைக்காடு செய்தியாளர்





மூதூர் வலயக்கல்வி அலுவலகத்தின் அனுசரணையில் தோப்பூர் கல்விக் கோட்டம் நடத்தும் சுற்றாடல் சார் பரிசோதனை கண்காட்சி தோப்பூர் பாத்திமா மகளிர் கல்லூரியில் புதன்கிழமை(09) இடம்பெற்றது. இதில் தோப்பூர் கல்விக் கோட்டத்திலுள்ள 16 தமிழ், முஸ்லிம் ஆரம்பப் பிரிவு பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் பங்குபற்றியிருந்தனர். இக்கண்காட்சியில் தோப்பூர் கோட்டக் கல்வி அதிகாரி ஏ.பீ.ஏ.ஜப்பார் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்தார். ஏனைய அதிதிகளான மூதூர் வலயக் கல்வி அலுவலகத்தின் ஆசிரிய ஆலோசகர்கள், பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் என பலரும் கலந்து சிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. **படங்கள்:** மூதூர் செய்தியாளர்



அம்பாறை மாவட்ட செயலக பிரதம பொறியியலாளராக பதவியுயர்வு பெற்றுச்செல்லும் கல்முனை கல்வி மாவட்ட பொறியியலாளர் ஏ.எம்.ஸாஹிரை பாராட்டி வழியனுப்பும் நிகழ்வு கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹுதுல் நஜீம் தலைமையில் செவ்வாய்க்கிழமை(08) நடைபெற்றது. இதன்போது வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹுதுல் நஜீம், கணக்காளர் வை.ஹபீபுல்லாஹ், பிரதிக் கல்விப் பணிப்பாளர் பீ.ஜிஹானா ஆலிப், திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் என்.வரணியா உள்ளிட்ட உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

**படம்:** மாளிகைக்காடு செய்தியாளர்



அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தின் காவலரண் திறப்பும் பொதுமக்கள் நலன் கருதி பொதுவழிப்பாதை ஒழுங்குபடுத்தலும் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டன. இந்நிகழ்வில் பிரதேச செயலாளர், உதவிப் பிரதேச செயலாளர் மற்றும் பதவிநிலை உத்தியோகத்தர்களும் ஏனைய உள்ளக - வெளிக்கள உத்தியோகத்தர்களும் கலந்து சிறப்பித்தனர். இதற்கான நிதி சமூக நலன்விரும்பிகளால் பங்களிப்பு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

**படம்:** திராய்க்கேணி செய்தியாளர்



அக்கரைப்பற்று அஸ்-ஸிறாஜ் மகா வித்தியாலயத்தில் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச்செல்லும் ஆசிரியர்களுக்கான சேவைநலன் பாராட்டு விழா ஞாயிற்றுக்கிழமை(06) பாடசாலையில் நடைபெற்றது. பிரதியதிபர் அஸ்லம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அதிபர் ஏ.ஜி.பஸ்மில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார். பாடசாலையின் பிரதி, உதவி அதிபர்கள், ஆசிரியர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கல்விசாரா ஊழியர்கள் மற்றும் விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்கள் ஆகியோரின் பங்களிப்புடன் நடைபெற்ற இப்பிரியாவிடை நிகழ்வில், கடந்த பல வருடங்களாக கற்பித்த 13 ஆசிரியர்களும் இரண்டு கல்வி சாரா உத்தியோகத்தர்களும் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். **படம்:** கோணாவத்தை செய்தியாளர்

# இலக்கிய ஆற்றலை ஊக்குவிக்கும் போட்டி நிகழ்வு





மட்டக்களப்பு

மண்முனை வடக்கு பிரதேச செயலகம் பிரதேச மாணவர்களின் இலக்கிய ஆற்றலை ஊக்குவிக்கும் விதமான இலக்கியப் போட்டிகள் பிரதேச செயலாளர் வ.வாசுதேவன் தலைமையில் டேபா மண்டபத்தில் இடம்பெற்றன.

மண்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்குட்பட்ட பாடசாலைகளில் இருந்தும் தெரிவுசெய்யப்பட்ட சுமார் 200 பிரதேச மாணவர்கள் இதில் கலந்துகொண்டனர். கதை கூறல், கிராமியப் பாடல், கவிதை பாடல், பாட்டு ஆகிய இலக்கியம் பயன்படுத்தப்படும் போட்டிகளில் தரம் 1 தொடக்கம் 11 வரையில் பிரதேச பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்கள் இதில் கலந்து கொண்டனர்.

மும்மொழிகளிலும் இடம்பெற்ற இந்நிகழ்வுகளை மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் கலாசார உத்தியோகத்தர்கள் ஒழுங்கு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அறிவிப்பாளர் போட்டியில் முதலிடம்



கல்குடா செய்தியாளர்

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச செயலக சமுர்த்திப் பிரிவு நடத்திய சிறுவர் கலை, கலாசார நிகழ்ச்சிகளில் அறிவிப்பாளர் போட்டியில் பர்ஹி நமா முதலிடம் பெற்று மாவட்ட மட்டப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஓட்டமாவடி பாத்திமா பாலிகா வித்தியாலயத்தில் தரம் 08இல் கல்வி கற்று வரும் இவர், ஊடகவியலாளர் எச்.எம்.எம்.பர்ஸான் - எம்.எஸ்.நூரா தம்பதிகளின் புதல்வியாவார்.

பிரதேச மட்டப் போட்டியில் வெற்றிபெற்று மாவட்ட மட்டப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவி பர்ஹி நமாவுக்கு பாடசாலை அதிபர் ஏ.எல்.அபுல் ஹஸன், பாடசாலை ஆசிரியர்கள், மாணவிகள் எனப் பலரும் வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துள்ளனர்.

# நடமாடும் ஆட்பதிவுச் சேவை களுவாஞ்சிக்குடியில் ஏற்பாடு





மட்டக்களப்பு செய்தியாளர்

மண்முனை தென் எருவில்பற்று – களுவாஞ்சிக்குடி பிரதேச செயலகத்தினால் 40 வயதுக்கு மேற்பட்ட பிறப்புச் சான்றிதழ் அற்றோருக்கான அடையாள அட்டை பெற்றுக்கொடுக்கும் முகமாக ஏற்பாடு செய்யப்பட்ட நடமாடும் சேவை பிரதேச செயலக ஒன்றுகூடல் மண்டபத்தில் புதன்கிழமை(09) இடம்பெற்றது.

பிறப்புச் சான்றிதழ் இல்லாத காரணத்தினால் இதுவரை தேசிய அடையாள அட்டை பெற்றுக்கொள்ளாமல் இருப்போர் தொடர்பில் ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட 2023.12.31ஆம் திகதி இறுதி தினமாக கொண்ட சுற்றறிக்கைக்கமைவாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த நடமாடும் சேவையில் ஐந்நூறுக்கும் அதிகமான பொதுமக்கள் கலந்து கொண்டு பயனடைந்ததாக பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரெத்னம் தெரிவித்தார்.

இரண்டு கட்டங்களாக ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நடமாடும் சேவையில் முதலாம் கட்டமாக மாங்காடு சமுர்த்தி வலயத்துக்குட்பட்ட மக்களும் நன்மையடைந்தனர். இந்நிலையில், வெள்ளிக்கிழமை கல்லாறு மற்றும் எருவில் வலயங்களுக்குட்பட்ட பொதுமக்களுக்காக இடம்பெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



கல்முனை சிவில் மேன்முறையீட்டு நீதிபதியாக புதிதாக கடமையேற்ற ரி.ஜே. பிரபாகரனை வரவேற்கும் நிகழ்வு கல்முனை நீதிமன்ற கட்டடத் தொகுதியின் சிவில் மேல்முறையீட்டு நீதிமன்ற கட்டடத்தில் புதன்கிழமை(09) நடைபெற்றது. கல்முனை சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் எம்.ஐ.றைசுல் ஹாதி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கல்முனை மேல் நீதிமன்ற நீதிபதி ஜயராம் ட்ரொக்ஸி, கல்முனை மாவட்ட நீதிபதி ஏ.எம்.முஹம்மட் றியால், கல்முனை நீதிமன்ற நீதிவான் எம்.எஸ்.எம் சம்சுதீன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். இதில் கல்முனை, அக்கரைப்பற்று சிரேஷ்ட சட்டத்தரணிகள், சட்டத்தரணிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**படம்:** அம்பாறை மாவட்ட செய்தியாளர்

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# குர்ஆன் பயிற்சியில் தேர்வானோருக்கு அக்கறைப்பற்றில் சான்றிதழ் வழங்கல்



திராய்க்கேணி செய்தியாளர்

ரமழான் மாத குர்ஆன் விளக்கப் பயிற்சி நெறியில் தேர்ச்சி பெற்றவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை(08) இடம்பெற்றது.

அக்கரைப்பற்று பிரதேச செயலக கலாசாரப் பிரிவினால் புனித ரமழான் மாத குர்ஆன் கற்கையும் அதற்கான விளக்கமும் அளிக்கப்பட்டது. பயிற்சி நெறியில் பங்குபற்றிய மாணவர்கள், வளவாளர்கள் மற்றும் இதற்கு பங்களிப்புச் செய்த தனவந்தர்களுக்கு நினைவுச் சின்னமும் சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

அக்கரைப்பற்று பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் அக்கரைப்பற்று உதவிப் பிரதேச செயலாளர் ராசித் எஹியா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அக்கரைப்பற்று வலயக்கல்விப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் எம்.எம்.சித்தி பாத்திமா கலந்து கொண்டதுடன், பள்ளிவாசல் தலைவர் எஸ்.எம்.சபீஸ், அம்பாறை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ஏ.எல்.தௌபீக், தலைமைப்பீட முகாமையாளர் அஷ்-ஷெய்க் எம்.ஜே.எம்.நிஹ்மத்துல்லாஹ், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் மற்றும் துறை சார்ந்தவர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# ஏறாவூர் சிற்றூழியர் நலன்புரிச் சங்கத்தின் வருடாந்த ஒன்று கூடலும் கௌரவிப்பும்





மண்டூர் செய்தியாளர்

ஏறாவூர் நகர சபையின் சிற்றூழியர் நலன்புரிச் சங்கத்தின் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வு வாவிக் கரைப் பூங்காவில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

இதன்போது திண்மக் கழிவு முகாமைத்துவப் பிரிவு மற்றும் வேலைப் பிரிவுகளில் அர்ப்பணிப்புடன் பணியாற்றும் 78 ஊழியர்கள் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

ஏறாவூர் நகரசபைச் செயலாளர் எம்.எச்.எம்.ஹமீம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஏறாவூர் நகர் பிரதேச செயலாளர் நிஹாரா மௌஜூத், உதவிப் பிரதேச செயலாளர் எம்.ஆர்.சியாஹுல் ஹக், கணக்காளர் ஆர்.எவ்.புஷ்ரா, மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எம்.எச்.எம்.பழீல், திடீர் மரண விசாரணை அதிகாரி அல்ஹாஜ் எம்.எஸ்.எம்.நஸீர், ஏறாவூர் வர்த்தக சங்கத் தலைவர், செயலாளர், பொருளாளர் உட்பட நகரசபை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினரும் கலந்து சிறப்பித்தனர்.

# பாவனைக்குதவாத 84 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மல்லி மீட்பு: களஞ்சியசாலைக்கு சீல் வைப்பு

அம்பாறை மாவட்ட செய்தியாளர்

மனித பாவனைக்குதவாத மல்லியை பதுக்கி வைத்திருந்த வர்த்தக களஞ்சியசாலை மீது அம்பாறை மாவட்ட நுகர்வோர் அதிகார சபையினர் திடீர் சுற்றிவளைப்பை மேற்கொண்டிருந்தனர். இதன்போது மனித பாவனைக்குதவாத பழுதடைந்த 84ஆயிரத்து 875 கிலோகிராம்



மல்லி மற்றும் 300 கிலோ நிறச்சாயம் (டை) என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

பொதுமக்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கமைய அம்பாறை மாவட்ட பொறுப்பதிகாரி சாலிந்த பண்டார நவரத்னவின் வழிகாட்டலில் நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் விசாரணை அதிகாரிகளினால்



கல்முனை-03 அம்மன் கோயில் வீதியில் செவ்வாய்க்கிழமை(08) மாலை மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின் போதே இவ்வாறு மனித பாவனைக்குதவாத மல்லி நிறச்சாயம் இடப்பட்டு விற்பனை செய்வதற்கு தயார்ப்படுத்தப்பட்டு களஞ்சிய அறையில் பதுக்கி வைத்திருந்த மூடைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதன்போது சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டு குறித்த களஞ்சியசாலையில் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு சீல் வைக்கப்பட்டதுடன் எச்சரிக்கையுடனான அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டு வழக்கு தாக்கல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

# இனந்தெரியாதோரால் நினைவுத்தூபி சேதம்

வாழைச்சேனை மேலதிக செய்தியாளர்

வாழைச்சேனை பொலிஸ் பிரிவின் ஓட்டமாவடி பாலத்துக்கருகில் அண்மையில் அமைக்கப்பட்ட தியாகிகள் நினைவுத் தூபியானது திங்கட்கிழமை இரவு (07) இனந்தெரியாதோரால் எரித்து சேதப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த தூபியானது தாய் தேசத்தின் நலனில் அதன் விடுதலையில் கல்குடா தொகுதி முஸ்லிம் சமூகம் ஆற்றிய பங்களிப்புகளையும் இழப்புகளின் வரலாறுகளையும் அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும் எனும் நோக்கோடு ஊர் பிரமுகர்களின் பங்களிப்புடன் நிர்மாணிக்கப்பட்டு பொதுமக்களின் பங்குபற்றுதலுடன் ஜூன் மாதம் 25ஆம் திகதி திரைநீக்கம் செய்யப்பட்டது.

இந் நிகழ்வில் வாகரை 233ஆவது இராணுவக் கட்டளைத் தளபதி, வாழைச்சேனை பிரதேச உதவிப் பொலிஸ் அத்தியட்சகர், வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, அல்ஹிமா நிறுவனப் பணிப்பாளர் காருன்மௌலவி, ஓட்டமாவடி வர்த்தக சங்கத் தலைவர் நியாஸ் ஹாஜியார் என முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்டு திரை நீக்கம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. குறித்த சம்பவம் தொடர்பாக வாழைச்சேனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பெரியநீலாவணை முஸ்லிம் பிரிவு வாக்காளர் பதிவு குறித்து நடவடிக்கை

## ஹரிஸ் எம்.பி. உறுதி

பெரியநீலாவணை செய்தியாளர்



பெரியநீலாவணை முஸ்லிம் பிரிவு மக்களுடன் அப்பிரதேசத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட கிராம சேவகர் பிரிவில் வாக்காளர்களைப் புதிதாக பதிவுசெய்வது தொடர்பிலானதும் மற்றும் அவசர நடவடிக்கைகள் தொடர்பிலானதுமான கலந்துரையாடல் கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலி தலைமையில் பெரியநீலாவணை புலவர்மணி ஷரிபுத்தீன் மகா வித்தியாலய கேட்போர் கூடத்தில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரிஸ், கல்முனை மாநகர முன்னாள் முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றக்கீப், பெரியநீலாவணை புலவர்மணி ஷரிபுத்தீன் மகா வித்தியாலய அதிபர் ஏ.எல்.அன்சார், சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஏ.ஆர்.எம்.சாலி, பள்ளிவாசல் தலைவர், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

பெரியநீலாவணை முஸ்லிம் பிரிவு பொதுமக்கள் தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பிலும் நிரந்தரமாக பெரியநீலாவணை முஸ்லிம் பிரிவில் வாக்காளர்களாகத் தம்மைப் பதிவுசெய்துதர நடவடிக்கை எடுக்குமாறும் ஹரிஸ் எம்.பியிடம் இதன்போது கோரிக்கை விடுத்தனர்.

புதிதாக உருவாக்கப்பட்ட அக்கிராம சேவைப் பிரிவில் வாக்காளர்களை புதிதாகப் பதிவு செய்வது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவருடன் பேசி உடனடி நடவடிக்கை எடுப்பதாக மக்களுக்கு உறுதியளித்த ஹரிஸ் எம்.பி, அம்பாறை மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் இவ்விடயம் தொடர்பில் முன்னெடுத்துள்ள நடவடிக்கை தொடர்பிலும் பொதுமக்களுக்கு விளக்கினார்.

மேலும் பல பெரியநீலாவணை முஸ்லிம் பிரிவின் அத்தியாவசிய விடயங்கள் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

# ஆற்றில் மூழ்கி ஒருவர் பலி

வாழைச்சேனை மேலதிக செய்தியாளர்

**வாழைச்சேனை பொலிஸ் பிரிவின் காயான்கேணியில் விசேட தேவையுடைய ஒருவர் ஆற்றில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.**

**காயான்கேணி வட்டவானைச் சேர்ந்த இ.இரத்தினவேல் (வயது47) என்பவரே இவ்வாறு செவ்வாய்க்கிழமை (08) உயிரிழந்துள்ளார்.**

**சம்பவதினத்தன்று அருகில் உள்ள கடற்கரைப் பகுதிக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பும் வழியில் இராலோடை, வட்டவான் ஆகிய இரு கிராமங்களுக்கிடையில் ஊடறுத்துச் செல்லும் ஆற்றைக் கடந்துவரும்போது திடீரென அவருக்கு ஏற்பட்ட வலிப்பு நோய் காரணமாக நீரினுள் வீழ்ந்து மூச்சுத்திணறி உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.**

**வெகுநேரமாகியும் வீடு திரும்பாமை குறித்து உறவினர்கள் தேடியபோது குறித்த ஆற்றுப் பகுதியில் அவரது சடலம் கண்டுபிடிக்கப்பட்டது. சடலம் பொலிஸாரின் உதவியுடன் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.**

# வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளை கோரி 2000 நாள் கவனயீர்ப்பு போராட்டம்

## திருக்கோவில் பகுதியில் வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளால் முன்னெடுப்பு










திருக்கோவில் மேலதிக செய்தியாளர்

யுத்தகாலத்தில் வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளைக் கோரி வடகிழக்கில் கவனயீர்ப்புப் போராட்டங்கள் உறவுகளால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், அம்பாறை மாவட்டத்தில் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் தமது இரத்த உறவுகளைக் கோரி 2000 நாட்கள் பூர்த்தியைத் தொடர்ந்து பாரிய கவனயீர்ப்புப் போராட்டம் சங்கத் தலைவி தம்பிராசா செல்வராணி தலைமையில் புதன்கிழமை(09) காலை இடம்பெற்றது.

அம்பாறை மாவட்டத்தின் திருக்கோவில் பகுதியில் குறித்த கவனயீர்ப்புப் போராட்டமானது இடம்பெற்றதுடன் பிரதான வீதி வழியாக போராட்டம் முன்னெடுக்கப்பட்டு திருக்கோவில் மணிக்கூட்டுக் கோபுரத்தை வந்தடைந்ததுடன் வட.,கிழக்கில் இராணுவம், புலனாய்வாளர்கள் உடன் வெளியேற்றப்பட்டு தமது உறவுகளை ஒப்படைக்குமாறும் கோரிக்கை விடுத்தனர்.

இதன்போது சமூக செயற்பாட்டாளர் தாமோதரம் பிரதீபன், அம்பாறை, மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா உள்ளிட்ட வடகிழக்கு இணைந்த வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் தாய்மார் மற்றும் உறவினர்கள் கலந்து கொண்டனர்.

# காட்டு யானை அட்டகாசம்: நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை

அம்பாறை மாவட்ட செய்தியாளர்

கல்முனை மாநகரசபை பிரிவுக்குட்பட்ட நற்பிட்டிமுனை, பாண்டிருப்பு, மருதமுனை ஆகிய பகுதியில் உள்ள மக்கள் குடியிருப்புக்குள் ஊடுருவிய காட்டுயானைகள் வீடுகளுக்குள் புகுந்து சுற்றுமதில் மற்றும் பயனுள்ள வாழை மரங்களை துவம்சம் செய்துள்ளன.

அண்மைக்காலமாக இப்பகுதிகளில் காட்டுயானைகளின் அட்டகாசம் அதிகரித்து வருவதுடன் இங்குள்ள கரவாகுப்பற்று, கல்முனை பிரதேசத்துக்குள் நுழையும் காட்டுயானைகள் கல்முனை மாநகர சபைக்குட்பட்ட கிராமங்களுக்குள் புகுந்து தொடர்ந்தும் மக்களை அச்சுறுத்தி வருகின்றன.

இப் பிரதேசத்தில் கடந்த ஒரு வாரகாலமாக என்றுமில்லாத வகையில் காலை மருதமுனை பகுதியில் காட்டுயானை ஒன்று அட்டகாசத்தில் ஈடுபட்டு வருகின்றது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் அதிகாலை 02 மணியளவில் நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு, மக்கள் குடியிருப்பு நிறைந்துள்ள பகுதிகளுக்குள் நுழைந்த குறித்த காட்டுயானை ஒன்று அங்குள்ள வீட்டு மதில் மற்றும் வாழை, பலா உள்ளிட்ட பயன்தரு மரங்களையும் துவம்சம் செய்துள்ளது.

மேலும் இவ்வாறு இரவு நேரத்தில் திடீரென வீட்டுக்குள் நுழைகின்ற குறித்த யானையினால் பிரதேச மக்கள் அச்சமடைந்துள்ளனர். அத்துடன், ஊருக்குள் யானை நுழைந்ததை அறிந்து கொண்ட மக்கள் விழிப்படைந்ததுடன் அதனை விரட்டுவதற்கான முயற்சியிலும் ஈடுபட்டுள்ளனர்.

சமீப காலமாக காட்டு யானைகள் மேற்குறித்த கிராமத்துக்குள் நுழைந்து அட்டகாசம் செய்து வருவதனால் இரவு வேளையில் மக்கள் நித்திரையின்றி விழித்திருக்கின்றனர். இதனால் பல்வேறு உடல் - உள உபாதைகளுக்குள்ளாகியும் வருகின்றனர்.

எனவே, காட்டு யானைகளை விரட்டுவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# போடியார் புலம்பல்!



***சர்வகட்சி மகாநாட்டை கூட்டி மக்களை முட்டாளாக்க ஜனாதிபதி ரணில் முயற்சி செய்கிறாராம் எண்டு ஜீ.எல். பீரீஷ் எம். பி. சொல்லிப்போட்டாரு எலுவா...? மக்கள முட்டாளாக்கல்ல அந்த நரி ஏற்கனவே கூழ் முட்டைகளாக இருக்கிற கட்சி தலைவர்கள இப்ப மடச்சாம்பிராணிகள் எண்டத சர்வதேசத்துக்கு காட்டத்தான். இந்த சர்வ கட்சி மகாநாடு போற ஆக்களுக்கு ஓட்டை வடையும், கேக்குத்துண்டும் மட்டும்தான் கிடைக்கும். வேற ஒரு மண்ணாங்கட்டியும் இல்ல எண்டது எல்லா பேருக்கும் தெரியும்..!***

# வீடுடைத்து பொருட்களை திருடிய சந்தேகநபர்களுக்கு விளக்கமறியல்

கனகராசா சரவணன்

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவிலுள்ள இருதயபுரம் பிரதேசத்தில் 04 வீடுகளை உடைத்து பணம், தங்க ஆபரணங்கள், கையடக்கத் தொலைபேசிகளை திருடிய இருவரை செவ்வாய்க்கிழமை (08) கைது செய்துள்ளதுடன் திருடப்பட்ட பொருட்களும் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸ் நிலைய பிரதம பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஜீ.எம்.பி.ஆர்.பண்டார தெரிவித்தார்.

குறித்த பகுதியில் பூட்டப்பட்டிருந்த வீடு ஒன்றையும் மற்றும் 03 வீடுகளின் கதவை இரவு வேளையில் உடைத்தும் உள்நுழைந்து அங்கிருந்து தங்க ஆபரணங்கள் உள்ளிட்ட பொருட்கள் திருட்டுப்போயுள்ளதாக வீட்டின் உரிமையாளர்கள் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இந்தத் திருட்டுச் சம்பவங்கள் தொடர்பாக பொலிஸ் நிலைய பெரும் குற்றத்தடுப்பு பிரிவுப் பொறுப்பதிகாரி கஜநாயக்கா தலைமையிலான பொலிஸ் குழுவினர் மேற்கொண்டுவந்த விசாரணையின் அடிப்படையில் சந்தேக நபர்களை அடையாளம் கண்டுள்ளனர்.

இதனையடுத்து சம்பவதினம் நாவக்கேணி பிரதேசத்தில் தலைமறைவாகியிருந்த 30 வயது மற்றும் 32 வயதுடைய இருவரை கைதுசெய்ததுடன் அவர்களிடமிருந்து திருடப்பட்ட பொருட்களும் மீட்கப்பட்டன.

இதில் கைதுசெய்யப்பட்டவர்களை மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் பீற்றர் போல் முன்னிலையில் ஆஜர்ப்படுத்தியபோது அவர்களை எதிர்வரும் 21ஆம் திகதிவரை 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டு. தலைமையகப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# சிங்கள மொழியில் விண்ணப்பம் விநியோகம்: தமிழ் மக்கள் சிரமம்

அம்பாறை மாவட்ட செய்தியாளர்

வெளிநாடுகளில் தொழில்புரியும் பெற்றோர்களின் பிள்ளைகளுக்கு 10ஆயிரம் ரூபா பெறுமதியான பொதி வழங்கல் எனும் தொனிப்பொருளில் அம்பாறை மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்களில் தற்போது தமிழ்பேசும் மக்களுக்கு சிங்கள மொழியிலான விண்ணப்பங்கள் விநியோகிக்கப்படுகின்றன.

இவ்வாறு சிங்கள மொழியில் விநியோகிக்கப்படும் விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்ய முடியாமல் தமிழ் பேசும் மக்கள் அலைந்து திரிவதை அவதானிக்க முடிகின்றது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் தொழில்களுக்காக வெளிநாடு சென்றிருக்கும் பெற்றோர்களின் பாடசாலை செல்லும் பிள்ளைகளுக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தால் கற்றல் உபகரணங்கள் (10ஆயிரம் ரூபா பெறுமதியான பொதி) கொடுக்கப்படும் எனக்கூறி இப்பிரதேச செயலகங்களில் தமிழ் மொழி மூலம் விண்ணப்பப்படிவங்கள் விநியோகிக்கப்பட்டிருந்தன.

பின்னர் தமிழ் மொழிமூலம் வழங்கப்பட்ட விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும் எனக் கூறி சில அலுவலகர்கள் தமிழ் மொழி பேசும் மக்களுக்கு தனிச் சிங்கள மொழி மூல விண்ணப்பப் படிவங்களை வழங்கி உடனடியாக பூர்த்தி செய்து தரவேண்டும் என வற்புறுத்துவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இவ்விடயம் குறித்த மனித உரிமை ஆணைக்குழு உள்ளிட்ட முக்கிய அதிகாரிகள் உரிய கவனம் செலுத்தவேண்டும் என பாதிக்கப்பட்ட மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# நிறுவை உபகரணங்களை சரிபார்த்து முத்திரையிடல்

அம்பாறை மாவட்ட செய்தியாளர்

அம்பாறை மாவட்ட செயலகத்தின் அளவீட்டு சேவைகளினதும் உபாயங்களினதும் பிரிவினரால் பல்வேறு தராசுகளை பரிசோதனை செய்து சரி பார்க்கும் மற்றும் சான்றிதழ் வழங்கும் செயற்பாடுகள் புதன்கிழமை(09) முன்னெடுக்கப்பட்டன.

கல்முனை பிரதேச செயலகத்துக்குட்பட்ட கல்முனை, மருதமுனை, நற்பிட்டிமுனை, பெரியநீலாவணை ஆகிய பிரதேச வியாபாரிகளின் நிறுவை அளவை உபகரணங்கள் 2023/2024 ஆம் ஆண்டுக்கு சரிபார்த்து முத்திரை பதிப்பதற்கென 9ஆம் திகதிமுதல் சனிக்கிழமை 12ஆம் திகதி வரையான நான்கு நாட்கள் இடம்பெறவுள்ளன.

இச்செயற்பாடுகள் காலை 9.30-3.30மணி வரை செயலக வளாகத்தில் மேற்கொள்ளப்படும் என்றும் குறித்த பிரதேச வர்த்தகர்கள், மீனவர்கள் தங்களுடைய வியாபார அளவை நிறுவை உபகரணங்களைக் கொண்டுசென்று முத்திரையிட்டுக் கொள்ளுமாறும் கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி அறிவித்தல் விடுத்துள்ளார்.

இதன்போது இலத்திரனியல் தராசுகள், பாரம்பரிய தராசுகள், நிறுக்கும் உபகரணங்கள் உள்ளிட்ட பல்வேறு அளவீட்டுடன் கூடிய தராசுகள் சரிபார்க்கப்பட்டு சீல் செய்யப்பட்டு தரச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டு வருகின்றது.

# கஞ்சாவுடன் கைதானவருக்கு விளக்கமறியல்

கோணாவத்தை செய்தியாளர்

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அட்டாளைச்சேனை பிரதேசத்தில் 29ஆயிரத்து 200 மில்லிகிராம் கஞ்சாவுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் கஞ்சா வைத்திருந்தமை தொடர்பாக அக்கரைப்பற்று விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவலைத் தொடர்ந்து குறித்த பிரதேசத்துக்குச் சென்று சந்தேகநபரைக் கைதுசெய்து புதன்கிழமை(09) நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தினர்.

இந்நிலையில், சந்தேக நபரை 22ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற நீதிபதி எம்.எச்.எம். ஹம்ஸா உத்தரவிட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கவிதை தொகுப்பு நூல் வெளியீட்டுக்கு கவிஞர்களிடமிருந்து கவிதைகள் கோரல்

கோணாவத்தை செய்தியாளர்

தேசிய சுதந்திர இலக்கிய பேரவையின் ஏற்பாட்டில் அகில இலங்கை ரீதியில் பல கவிஞர்களின் கவிதைகளை ஒன்று திரட்டி நூலாக வெளியிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் ஆர்வமும் விருப்பமும் உள்ள கவிஞர்களிடமிருந்து கவிதைகள் எதிர்பார்க்கப்படுகின்றன. ஏற்கனவே பத்திரிகைகள், முகநூல், இணையதளங்கள், சமூக வலைத்தளங்களில் வெளிவராத புதிய கவிதைகளை அனுப்பி வைக்க முடியும்.

கவிதைகள் ஏ4 அளவிலான வெள்ளைத்தாளில் புதுக் கவிதையாயின் 40 வரிகளுக்கு மேற்படாமலும் மரபுக் கவிதையாயின் 10 செய்யுள் அடிகளுக்கு மேற்படாமலும் அமையப்பெற வேண்டும்.

கவிஞர்கள் அவர்களது சுயவிபரக் குறிப்புகளுடன் விரும்பிய கருப்பொருளுடன் எழுதி புகைப்படத்துடன் இணைத்து செயலாளர், தேசிய சுதந்திர இலக்கியப் பேரவை, இல - 24, ஹாஜியார் வீதி, அட்டாளைச்சேனை-15 எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அல்லது 0772 985 024 எனும் வட்ஸ்அப் இலக்கத்துக்கு மென் பிரதியாகவும் அனுப்பி வைக்கமுடியும்.

கவிஞர்களது கவிதைகளை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் திரட்டி இந்நூல் உருவாக்கப்படவுள்ளதால் நூலாக்கக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் கவிதைகள் தெரிவு செய்யப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கவிதைகளை எதிர்வரும் செப்டெம்பர் 10ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

## பீபா மகளிர் உலகக்கிண்ண தொடர்

# முதல் முறையாக காலிறுதிக்கு நுழைந்த கொலம்பியா பிரான்ஸிடம் மண்டியிட்ட மொராக்கோ



பீபா மகளிர் உலகக்கிண்ணத் தொடரின் ரவுண்ட் ஒவ் 16 சுற்று, நொக் அவுட் போட்டிகள் அனைத்தும் நிறைவுபெற்ற நிலையில், தொடரில் கொலம்பியா அணி முதல் முறையாக காலிறுதிக்கு முன்னேறியது.

மெல்போர்ன் ரெக்டாங்குலர் மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் கொலம்பியா மற்றும் ஜமைக்கா அணிகள் மோதின. பரபரப்பான இந்தப் போட்டியில் கொலம்பிய அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இதன்மூலம் கொலம்பிய அணி முதல் முறையாக காலிறுதிக்குத் தகுதி பெற்றது.

1999, 2003, 2007 உலகக் கிண்ணங்களுக்குத் தகுதிபெறத் தவறிய கொலம்பிய அணி, 2011ஆம் ஆண்டில் முதல் சுற்றுடன் வெளியேற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து 2015ஆம் ஆண்டில் ரவுண்ட் ஒப் 16 சுற்றுக்கு முன்னேறியது. இந்நிலையில், காலிறுதியில் இங்கிலாந்தை எதிர்கொள்ளவுள்ளது.

இதேவேளை, பலம் வாய்ந்த பிரான்ஸை முதல் முறையாக நொக்அவுட் சுற்றுக்கு முன்னேறிய மொராக்கோ அணி எதிர்கொண்டது. இந்தப் போட்டியில் பிரான்ஸ் அணியின் வேகத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல் மொராக்கோ தடுமாறியது. இறுதியில் பிரான்ஸ் அணி 4-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. பிரான்ஸ் காலிறுதியில் அவுஸ்திரேலியாவை எதிர்கொள்ளவுள்ளது. காலிறுதி போட்டிகள் நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகின்றன.

# தொடர் நாயகனுக்கு அமெரிக்காவில் நிலம் பரிசு

கனடாவில் அண்மையில் நிறைவுபெற்ற குளோபல் ரி 20 லீக் தொடரில் தொடர்நாயகன் விருதை வென்ற மேற்கிந்திய வீரர் ரூதர்போர்ட்டுக்கு பரிசாக அமெரிக்காவில் அரை ஏக்கர் நிலம் வழங்கப்பட்டுள்ள சம்பவம் ரசிகர்களிடையே ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

தொடரின் இறுதிப்போட்டியில் சர்ரே ஜாக்குவார்ஸ் அணியை எதிர்த்து மான்ட்ரிய டைகர்ஸ் அணி களமிறங்கியது. சிறப்பாக ஆடிய ரூதர்போர்ட் 29 பந்துகளில் 38 ஓட்டங்களை எடுத்து கடைசி வரை களத்தில் இருந்தார். ஆட்டநாயகன், தொடர் நாயகன் விருது வென்ற ரூதர்போர்ட்டுக்கு அமெரிக்காவில் அரை ஏக்கர் நிலம் வழங்கப்பட்டுள்ளது.

# போலந்துக்காக விளையாட பெலாரஸ் வீராங்கனைக்கு அனுமதி



ரமணி

டோக்கியோ 2020 ஒலிம்பிக்கிலிருந்து நாடுகடத்தப்பட்ட பெலாரஸ் நாட்டைச் சேர்ந்த ஸ்ப்ரிண்டர் கிறிஸ்டினா சிமானோஸ்காயா இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு போலந்துக்காக போட்டியிட அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஜப்பானிய தலைநகரில் நடந்த தாமதமான விளையாட்டுப் போட்டிகளில் சிமானோஸ்கயா, விருப்பத்திற்கு மாறாக விமான நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டதாகக் குற்றஞ்சாட்டினார். இது பெலாரஸ் தேசிய அணியின் பயிற்சியாளர்களை பகிரங்கமாக விமர்சித்ததைத் தொடர்ந்து, தனது பெண்களுக்கான 200 மீற்றர் ஓட்டப்பந்தயத்தைத் தவறவிட்டார். அவர் போலந்தில் இருந்து மனிதாபிமான விசாவைப் பெற்றார். இப்போது முழு போலந்து குடியுரிமை பெற்றுள்ளார்.

உலக தடகள விதிகள் வழக்கமாக ஒரு தடகள வீரர் தனது போட்டிகளில் தேசிய விசுவாசத்தை மாற்ற மூன்று வருட காத்திருப்பு காலத்தை மேற்கொள்ள வேண்டும், ஆனால், தேசிய மறு ஆய்வு குழு சிமானோஸ்காயாவின் வழக்கில் இதை தள்ளுபடி செய்ய ஒப்புக்கொண்டது.

டோக்கியோவில் நடந்த ஒலிம்பிக் போட்டிகளில் 30 ஜூலை 2021 அன்று, தடகள வீரர் {பெலாரஸைக்} கடைசியாகப் பிரதிநிதித்துவப்படுத்தியதன் அடிப்படையில், விண்ணப்பித்த திகதியிலிருந்து ஜூன் 12, 2023இல் மூன்று வருட காத்திருப்பு காலத்தைத் தள்ளுபடி செய்ய தேசிய மறுஆய்வுக் குழு ஒப்புக்கொண்டது. தடகள வீரர் இரண்டு ஆண்டுகளாக தேசிய பிரதிநிதித்துவ போட்டிகளில் பங்கேற்கவில்லை என்று ராய்ட்டர்ஸ் குழுவின் கடிதம் தெரிவித்துள்ளது.

முன்னாள் யுனிவர்சியேட் 200 மீ சம்பியனும், இரண்டு முறை ஐரோப்பிய விளையாட்டுப் பதக்கம் வென்றவருமான சிமானுஸ்காயா, புடாபெஸ்டில் இந்த மாதம் நடைபெறவுள்ள உலக தடகள சாம்பியன்ஷிப் போட்டிக்கு தன்னைத் தேர்ந்தெடுக்க முடியும் என ஈன்ச்டக்ரம் இல் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

உக்ரைனில் நடந்த போரின் காரணமாக பெலாரஸ், ரஷ்யாவுடன் சேர்ந்து உலக தடகளப் போட்டிகளில் பங்கேற்க தடை விதிக்கப்பட்டுள்ளது, சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி பரிந்துரைகளை புதுப்பித்துள்ள போதிலும், அவர்கள் மோதலை ஆதரிக்கவில்லை என்றால் அவர்கள் தனிப்பட்ட நடுநிலையாளர்களாக போட்டியிட அனுமதிக்கிறார்கள்.

# உலகப் பல்கலைக்கழக விளையாட்டுப் போட்டியில் சீனா முதலிடம்








சர்வதேச பல்கலைக்கழக விளையாட்டுக் கூட்டமைப்பு (Fஈஸூ) கோடைகால உலகப் பல்கலைக்கழக விளையாட்டுப் போட்டிகள் சீனாவின் செங்டுவில் ஒரு கண்கவர் நிறைவு விழாவுடன் முடிவடைந்தன. போட்டியை நடத்திய சீனா 103 தங்கப் பதக்கங்களுடன் முதலிடத்தைப் பிடித்தது. 113 நாடுகளில் இருந்து 6,500 க்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்கள் கலந்துகொண்ட போட்டி 12 நாட்கள் நடைபெற்றது. இதில் பல சாதனைகள் முறியடிக்கப்பட்டன.

103 தங்கம், 40 வெள்ளி மற்றும் 35 வெண்கலம் உட்பட 178 பதக்கங்களுடன் சீனா முதலிடம் பிடித்தது. 411 பேர் கொண்ட சீன அணியில் நீச்சல் வீரர் ஜாங் யூஃபே, ஒன்பது தங்கம் வென்றார். ஜப்பான் 21 தங்கம், 29 வெள்ளி மற்றும் 43 வெண்கலம் உட்பட 93 பதக்கங்களுடன் இரண்டாவது இடத்தைப் பிடித்தது, அதே நேரத்தில், தென் கொரியா, இத்தாலி, போலந்து ஆகியவை முதல் ஐந்து இடங்களைப் பிடித்தன.

போட்டியைத் தொடர்ந்து நிறைவு விழா செங்டு திறந்தவெளி இசைப் பூங்காவில் அரங்கேறியது. மற்றும் "கனவுகள்: எதிர்காலத்தை ஒளிரச் செய்கிறது" என்ற கருப்பொருளின் கீழ் நிகழ்த்தப்பட்டது. ஓர் அற்புதமான வானவேடிக்கை இரவு வானத்தை ஒளிரச் செய்வதற்கு முன், தொடர்ச்சியான பாடல்கள் மற்றும் நடனங்கள் பார்வையாளர்களை மகிழ்வித்தன. 2025 ஆம் ஆண்டு விளையாட்டுப் போட்டிகளை நடத்தவிருக்கும் இத்தாலியின் பிரதிநிதி ரைன்-ருஹரிடம் கொடியை ஒப்படைத்த பின்னர் விழா நிறைவடைந்தது.

# நடப்பு சம்பியனுக்கு மூன்றாவது வெற்றி

நடப்பு எல்.பி.எல் தொடரின் 13ஆவது லீக் போட்டியில் கொழும்பு ஸ்ரைக்கர்ஸ் அணியை எதிர்த்தாடிய நடப்பு சம்பியனான ஜப்னா கிங்ஸ் அணி 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் இலகு வெற்றிபெற்று தொடரில் மூன்றாவது வெற்றியை பதிவு செய்தது.

போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற கொழும்பு ஸ்ரைக்கர்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடி 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகளை இழந்து 147 ஓட்டங்களை பெற்றது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஜவ்னா கிங்ஸ் அணி 14.3 ஓவர்களில் வெற்றி இலக்கை அடைந்தது.

## விளையாட்டுத் துளிகள்

பாகிஸ்தான் அணியின் இடது கை துடுப்பாட்ட வீரரான பவாட் அலாம் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து விடைபெறுகிறார். 38 வயதாகும் அவர், 2007ஆம் ஆண்டு பாகிஸ்தான் அணிக்காக மட்டுப்படுத்தப்பட்ட போட்டிகளில் அறிமுகம் பெற்றதோடு, 2009ஆம் ஆண்டில் டெஸ்ட் அறிமுகம் பெற்ற அவர் சுமார் 11 வருடங்களின் பின் மீண்டும் டெஸ்டில் களமிறங்கினார். கடைசியாக இலங்கை அணியுடன் கடந்த ஆண்டில் நடைபெற்ற டெஸ்ட் தொடரே அவர் பாகிஸ்தானை இறுதியாக சர்வதேச போட்டிகளில் பிரதிநிதித்துவம் செய்த போட்டித் தொடராக அமைந்திருந்தது.

★★★★★★★★★★

கிறீஸ் நாட்டின் ஏதென்ஸின் புறநகர் பகுதியிலுள்ள நியா பிலாடெல்பெயா அரங்கில் திங்கட்கிழமை உதைபந்து ரசிகர்களிடையே ஏற்பட்ட மோதலில் கிறீஸ் நாட்டைச் சேர்ந்த 22 வயதான இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டார். மேலும் 8 பேர் (5 குரேஷியா, 3 கிறீஸ்) காயமடைந்துள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இச்சம்பவம் தொடர்பில் 96 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

★★★★★★★★★★

பிரான்ஸின் பார்டியூஸ் நகரில் நடைபெற்ற கிரேயோன் ஓபன் 2023 செஸ் போட்டியில் 9 நாடுகளைச் சேர்ந்த 113 சர்வதேச செஸ் வீரர்கள் பங்கேற்றனர். 9 சுற்றுகளாக நடைபெற்ற இப்போட்டியில் 6 வெற்றி, 3 டிரோ என 7.5 புள்ளிகளுடன் இந்தியாவின் ஈரோட்டைச் சேர்ந்த கிராண்ட் மாஸ்டர் இனியன் பன்னீர்செல்வம் முதல் இடத்தைப் பெற்று சாம்பியன் பட்டம் வென்றார். மற்றொரு இந்திய கிராண்ட் மாஸ்டர் பரத் சுப்ரமணியம் 2ஆம் இடமும், பிரான்ஸின் சர்வதேச மாஸ்டர் கேரல் ஜோசப் 3ஆம் இடமும் பிடித்தனர்.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

# ஏழாவது தடவையாக சம்பியனான அட்டாளைச்சேனை சோபர்




அட்டாளைச்சேனை மேலதிக நிருபர்

அட்டாளைச்சேனை அல் - நஜா விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற மின்னொளி கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் அட்டாளைச்சேனை சோபர் விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

அணிக்கு 8 பேர் 5 ஓவர் என மட்டுப்படுத்தப்பட்ட இச்சுற்றுப் போட்டியில் 60 கழகங்கள் பங்கு கொண்டன. இதன் இறுதிப் போட்டி அண்மையில் அட்டாளைச்சேனை நியூ ஸ்டார் விளையாட்டு மைதானத்தில் கழத்தின் உப தலைவர் எஸ். இத்ரீஸ் தலைமையில் நடைபெற்றது.

இறுதிப் போட்டியில் சோபர் அணி முதலில் துடுப்பெடுத்தாடி 49 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு ஒலுவில் இலவன் ஸ்டார் விளையாட்டுக் கழக அணி 42 ஓட்டங்களை மாத்திரமே பெற்று தோல்வியைத் தழுவியது.

இவ்வெற்றியின் மூலம் இவ்வாண்டு மின்னொளி கிரிக்கெட் சுற்றுப் போட்டிகளில் தொடர்ச்சியாக சோபர் அணி 7 தடவை சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இறுதி பரிசளிப்பு நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வீ. ஜெகதீசன், பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம். ஹனீபா, ஏ.சீ.ஆர். பௌண்டேஷன் தலைவர் ஊடகவியலாளர் றிஷாத், ஏ.காதர் எனப் பலர் அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

# மேற்கிந்தியாவுக்கு பதிலடி கொடுத்த இந்தியா



மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான 3ஆவது ரி 20 போட்டியில் இந்திய அணி 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடர் தோல்வியிலிருந்து தப்பியுள்ளது.

5 போட்டிகள் கொண்ட தொடரின் முதல் இரு போட்டிகளிலும் மேற்கிந்திய தீவுகள் வெற்றியீட்டிய நிலையில், 3ஆவது ரி20 போட்டி நேற்று முன்தினம் கயானாவில் நடைபெற்றது. நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்திய தீவுகள் அணி முதலில் துடுப்பெடுத்தாடி 20 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட் இழப்பிற்கு 159 ஓட்டங்களைச் சேர்த்தது.

இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய இந்திய அணிக்கு சூர்யகுமார் - திலக் வர்மா ஜோடி தங்களது சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி இந்திய அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றனர். சூர்யகுமார் யாதவ் 44 பந்துகளில் 83 ஓட்டங்களைக் குவித்தார், திலக் வர்மா 37 பந்துகளில் 49 ஓட்டங்களைச் சேர்த்தார்.

இறுதியில் இந்திய கிரிக்கெட் அணி 17.5 ஓவர்கள் முடிவில் 3 விக்கெட் இழப்பிற்கு 164 ஓட்டங்களைக் குவித்தது. இதன் மூலம் மேற்கிந்திய தீவுகள் அணியை இந்திய கிரிக்கெட் அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தி தொடரில் தனது முதல் வெற்றியைப் பதிவு செய்தது. தொடரில் மேற்கிந்திய தீவுகள் அணி 2-1 என்ற ரீதியில் முன்னிலை வகிக்கிறது. நான்காவது ஆட்டம் சனிக்கிழமை நடைபெறுகிறது.

**உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு செய்திகளை தமிழன் பத்திரிகையில் பிரசுரிக்க விரும்பினால், செய்தியை சுருக்காக எழுதி, உங்கள் பெயர், ஊர், தொலைபேசி இலக்கம் என்பவற்றை குறிப்பிட்டு Thamilansports@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புங்கள்.**

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7